www.tamilarangam.net

THAYAGAM

75¢

26 . 8 . 94

# தாயகம்

உண்மையின் தேடலில்

# வடக்கிற்கான பொருளாதாரத் தடை நீக்கப்படும்

## அனுருத்த ரத்வத்தை தெரிவிப்பு

மாவு, பாண் விலை குறைக்கப்பட்டது

காமினி எதிர்க்கட்சித்தலைவர்

கே.பி.இரத்நாயக்க சபாநாயகரானுர்

இனப்பிரச்சனைக்கான தீர்வை மக்கள் ஏற்றுக் கொள்வார்கள் சந்திரிகா நம்பிக்கை

சந்திரிகாவுக்கு புளொட் நிபந்தனையற்ற ஆதரவு தொண்டமான், ஈ.பி.டி.பியும் ஆதரிக்கக் கூடும்

ரஷ்ய ஆயுத ஒப்பந்தம் ரத்து

நகரின் மத்தியில்
துரித பணமாற்றுச் சேவை
CDவிற்பனையாளர்
SENDURAN & CO
584 A, PARLIAMENT ST, TORONTO
(416) 962 7397

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தரத்தின் சின்னம்

## நிரு பிராண்ட்®

## *Niru Brand*®

**நிரு பிராண்ட் தயாரிப்புகளுக்கு நிகர்**
***Niru Brand*® தயாரிப்புகளே.**

## போலிகளை வாங்கி ஏமாறுதீர்கள்

நிரு பிராண்ட் தயாரிப்புகளின் தரம்
பாவித்தவர்களுக்கு மட்டுமே புரியும்.

**உங்கள் கைகளில் கிடைப்பது தரமான**
**நிரு பிராண்ட் தயாரிப்புகளா?**
**என்பதை உறுதிப்படுத்துங்கள்**

*Niru Enterprises Inc,*

**Tel:(416) 299-4202**

நிரு பிராண்ட் தயாரிப்புக்கள் எல்லா
இலங்கை வர்த்தக நிலையங்களிலும் விற்பனையாகின்றன.
உங்கள் ஏமாற்றத்தைத் தவிர்ப்பதற்கு எம்முடன் தொடர்பு கொண்டு
எமது தயாரிப்புகள் எப்பொழுதும் கிடைக்கக் கூடிய வர்த்தக நிலையங்களை அறியலாம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

Second class mail Registration No:8435



# தாயகம்
'உண்மையைத் தேடி'

## வடபகுதிக்கான பொருளாதாரத் தடை நீக்கப்படும்

வடபகுதிக்கான பொருளாதாரத் தடையை நீக்குவதற்கு புதிய அரசு திட்டமிட்டுள்ளது. பாதுகாப்பு உதவி அமைச்சர் அனுருத்த ரத்வத்தை பத்திரிகையாளர்கள் மத்தியில் பேசும் போது இதைத் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் மீதான அழுத்தத்தை குறைப்பதற்காக பொருளாதாரத் தடையை நீக்குவது பற்றி படைத் தலைவர்களுடன் தாம் பேசுவதாக அவர் தெரிவித்தார். யாழ்ப்பாண மக்கள் பொருட்கள் தட்டுப்பாட்டால் மிகவும் கஷ்டமுறுவதாகத் தெரிவித்த ரத்வத்தை தமது அரசின் முதன்மையான நோக்கம் பேச்சுவார்த்தை மூலம் யுத்தத்தை நிறுத்துவது தான் என்று கூறினார்.

பிரதமர் அவர்களைப் பேச்சுவார்த்தைக்கு ஏற்கனவே அழைத்துள்ளதாகவும் அவர்களின் நேரடியான பதிலை எதிர்பார்ப்பதாகவும் ரத்வத்தை தெரிவித்தார்.

இருப்பினும் தேர்தலை ஒட்டி நாடெங்கும் கொண்டு வரப்பட்ட அவசர நிலையை வடக்கு கிழக்குக்கு மட்டுமே மட்டுப்படுத்த உள்ளதாகவும் இது எவ்வாறு அமுல்படுத்தப்படலாம் என்பது குறித்து படைத் தலைவர்களுடன் கலந்தாலோசிப்பதாகவும் அவர் கூறினார்.

## கே.பி.ரத்நாயக்க சபாநாயகரானார்

இலங்கையின் புதிய பாராளுமன்றத்தின் சபாநாயகராக எழுபது வயதான கிரி பண்டா ரத்நாயக்கா தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். யாழ்ப்பாணத்தில் கல்வி கற்ற இவர் நன்றாக தமிழ் பேசக்கூடியவர். சுதந்திரக் கட்சியின் சார்பில் இவர் தெரிவு செய்யப்பட்டார். இவரை எதிர்த்து சபாநாயகர் பதவிக்கு அனுரா பண்டாரநாயக்க போட்டியிட்டிருந்தார். இவரை ஐ.தே.கட்சி தனது சபாநாயகருக்கான வேட்பாளராக தெரிவு செய்திருந்தது. பிரதமராக இவரது சகோதரி இருக்கும் நிலையிலேயே அவருக்கு எதிர்க்கட்சித் தலைவராக அனுராவை ஐ.தே.க போட்டியிட வைத்தது.

சிறிய கட்சிகள் கே.பி ரத்நாயக்கவுக்கு ஆதரவளித்திருந்தன. கே.பி.ரத்நாயக்க 34 வாக்குகளால் அனுராவைத் தோற்கடித்திருந்தார்.

கே.பி.ரத்நாயக்க பற்றி பேசிய சந்திரிகா 'எமது நாடு அடைய வேண்டிய விசயம் ஒன்று இதுதான்.. எல்லா மக்களும் சமாதானமாகவும் ஐக்கியமாகவும் சகோரத்துவத்துடன் சகல உரிமைகளுடனும் வாழ வேண்டும்' என்று அவரைப் பாராட்டினார். இவர் தமிழிலும் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் பேசக்கூடியவர் என்பதைச் சுட்டிக் காட்டியே சந்திரிகா அவ்வாறு தெரிவித்தார்.

கே.பி.ரத்நாயக்க யாழ்ப்பாணத்தில் உள்ள கல்லூரிகளிலேயே கற்றவர்.

## இனப்பிரச்சனைக்கான தீர்வை மக்கள் ஏற்றுக் கொள்வார்கள் சந்திரிகா நம்பிக்கை

இனப்பிரச்சனைக்கான தீர்வை சிங்கள மக்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்ற சந்திரிகா நம்பிக்கை தெரிவித்திருக்கிறார். கடந்த தென் மாகாணத் தேர்தலில் தங்கள் கட்சிக்கு மக்கள் ஆதரவு தெரிவித்த போது மக்கள் இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வுக்கு தயாராக இருக்கிறார்கள் என்பதை தாம் உணர்ந்து கொண்டதாகவும் இந்த தேர்தல் அதை உறுதி செய்திருக்கிறது என்றும் அவர் பத்திரிகையாளர்களுக்கு தெரிவித்தார். உடனடியாகப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க விரும்பும் அவர் பிரச்சனை எவ்வளவு காலத்தில் தீர்க்கப்படும் என்பது பற்றி தெரிவிக்கவில்லை.

தென்னாபிரிக்கா, பாலஸ்தீனம் போன்றதொரு தீர்வுக்கு நாங்கள் வர முடியும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்திருக்கிறார். உண்மையான ஜனநாயக நாடாக, எல்லாரும் இன,மத வேறுபாடின்றி சமனாக வாழ வேண்டிய நாடாக இலங்கையை உருவாக்க வேண்டும் என்றும் அவர் கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கும் போது தெரிவித்தார்.

## தொண்டமான் சந்திரிகாவை ஆதரிக்கக் கூடும்
### சண்டே ஒப்சேர்வர் தகவல்

சந்திரிகாவின் அரசுக்கு தொண்டமானும் ஆதரவு தெரிவிக்கக் கூடிய சாத்தியங்கள் உள்ளன. தானும் தனது ஏழு உறுப்பினர்களும் ஐ.தே.கட்சியின் பகுதியாக இல்லை என்றும் தாங்கள் தங்கள் மக்களையே பிரதிநிதித்துவப்படுத்துவதால் ஒவ்வொரு பிரச்சனையையும் ஆராய்ந்த பின்னரே முடிவு எடுக்கப் போவதாக தொண்டமான் கூறியுள்ளார். சிறுபான்மை அரசாக இருந்தாலும் சரியாக செயற்பட்டால் நீண்ட காலம் ஆட்சி செய்ய முடியும் என்று நரசிம்மராவின் அரசை ஆதாரம் காட்டி தொண்டமான் கருத்து தெரிவித்தார் என சண்டே ஒப்சேர்வர் கருத்துக் கூறியுள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## பாஸ்கரலிங்கத்திற்கு பதிலாக புதியவர்

நிதியமைச்சின் செயலாளராக ஏ.எஸ். ஜெயவர்த்தன நியமிக்கப்பட உள்ளார். நிதியமைச்சின் உயர்தரத்திலான இந்த அரச அதிகாரிப் பதவிக்கு நியமிக்கப்படும் இவர் முன்பு பதவி வகித்த சர்ச்சைக்குரிய செயலாளர் பாஸ்கரலிங்கத்தை பிரதியீடு செய்கிறார். வெளிநாடு சென்ற பாஸ்கரலிங்கம் இன்னமும் நாடு திரும்பவில்லை. இவர் மீது பலத்த ஊழல் குற்றச்சாட்டுக்கள் உள்ளன.

ஜெயவர்த்தன தற்போது மத்திய வங்கியின் பிரதி ஆளுனராக உள்ளார். இவர் இலங்கையின் கைத்தொழில் மயமாக்க கொள்கைக்கு பொறுப்பானவர்களில் ஒருவராவர்.

## ஊழல் செய்த ஐ.தே.கவினர் மீது நடவடிக்கை

ஐ.தே.கட்சிக் காலத்தில் ஊழல் செய்து பெருமளவில் பணம் சம்பாதித்த ஐ.தே.கட்சி அரசியல்வாதிகள் மீது நடவடிக்கை எடுக்க புதிய அரசு யோசித்துள்ளது. அரசியல்வாதிகள் மட்டுமன்றி அரச அதிகாரிகள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படும். வெளிநாடுகளில் இவர்கள் சட்டவிரோதமாகச் சம்பாதித்துக் கொண்ட சொத்துக்கள் பற்றி விசாரிக்கப்படும். இந்தச் சொத்துக்கள் மீண்டும் பெறுவதற்கு வழிகள் செய்யப்படும் என்று நீதியமைச்சர் காமினி லக்ஸ்மன் தெரிவித்திருக்கிறார்.

ஏழு வாரங்களுக்குள் ஊழல், லஞ்சம் சம்பந்தமாக விசாரணைக்குழு ஒன்றும் நியமிக்கப்படும். தேர்தல் வாக்குறுதிகளில் இதை சுதந்திரக் கட்சி தெரிவித்திருந்தது. இந்தக் குழு தனிப்பட்ட எம்.பிக்களையும் விசாரிக்க முடியும். அத்துடன் இந்தக் குழு பாராளுமன்றத்திற்கு மட்டுமே பதிலளிக்க வேண்டும். முன்பு எம்.பிக்களை விசாரிப்பதாயின் சபாநாயகரின் அனுமதி பெறப்பட வேண்டும்.

இதுவரை மூன்று முன்னாள் அமைச்சர்கள் வெளிநாடுகளில் சொத்துச் சேர்த்ததாக பத்திரிகைகள் தெரிவிக்கின்றன. பலருக்கு வெளிநாட்டு வங்கிகளில் பணம் இருப்பதுடன் சிலருக்கு வெளிநாடுகளில் பெரும் வீடுகளும் உள்ளன.

## காணமல் போனவர்கள் பற்றி விசாரிக்கப்படும்

ஜே.வி.பி வன்முறைக் காலங்களில் காணமல் போனவர்கள் பற்றி விசாரிக்க உள்ளதாக புதிய அரசின் நீதி அமைச்சர் காமினி லக்ஸ்மன் பீரிஸ் தெரிவித்துள்ளார். நாங்கள் உண்மையை அறிய வேண்டும், அந்த அப்பாவி மக்களுக்கு என்ன நடந்தது என்பதை அறிய வேண்டும் என்றார் அவர். நாட்டின் வெவ்வேறு பகுதிகளுக்கு மூன்று இளைப்பாறிய நீதிபதிகள் கொண்ட விசாரணைக்குழுக்கள் நியமிக்கப்படும்.

இந்த வன்முறைக் காலங்களில் அறுபதாயிரம் பேர் வரை காணமல் போனதாக மனித உரிமைக் குழுக்கள் தெரிவித்திருக்கின்றன. இவர்களில் பலர் அரசியல்வாதிகளின் தனிப்பட்ட குழுக்களாலேயே கொல்லப்பட்டிருந்தனர். இந்த விசாரணைகள் பழைய அரசியல்வாதிகள், இராணுவத்தினர், பொலிஸ் அதிகாரிகளில் கவனம் செலுத்தும். நான்கு மாதங்களுக்குள் விசாரணைகள் முடிக்கப்பட்டு குடும்பத்தினருக்கு நட்டஈடு கொடுப்பது பற்றி யோசிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

## எயர்லங்காவுக்கு எயர் பஸ் விமானம்

எயர்பஸ் நிறுவனம் ஒப்பந்தப்படி இலங்கைக்கு அடுத்த மாதம் இரண்டு எயர்பஸ் விமானங்களை வழங்கவுள்ளது. இந்த விமானங்கள் இரண்டும் ஏற்கனவே நிர்மாணிக்கப் பட்டுள்ளதாகவும் செப்டம்பர் மாதம் வினியோகிக்கப்படும் என்றும் எயர்பஸ் நிறுவனம் தெரிவித்திருக்கிறது. அடுத்த ஒரு விமானம் பெப்ரவரி மாதம் வினியோகிக்கப் படும்.

முன்னைய ஒப்பந்தத்தில் ஊழல் நடந்ததாக சந்தேகப்படுவதால் புதிய அரசாங்கம் ஒப்பந்தத்தை கைச்சாத்திடுவதை பின்போட்டுள்ளது. கடந்த திங்கட்கிழமை இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதாக இருந்தது.

முன்னைய ஒப்பந்தத்தின் போது உலக வங்கி பணத்தை வழங்க மறுத்திருந்தது. புதிய அரசு இந்த ஒப்பந்தத்தை ரத்துச் செய்ய விரும்பிய போதும் ஏற்கனவே எழுபது கோடி டொலர்கள் செலுத்தப்பட்டதால் ரத்துச் செய்வதன் மூலம் இந்தப் பணத்தைப் பெற முடியாது என்பதால் புதிய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட இருந்தது.

## அகதிகளுக்கு புனர்வாழ்வு அஷ்ரப் உறுதி

அகதிகள் புனர்வாழ்வு அமைச்சராக நியமிக்கப்பட்டிருக்கும் அஷ்ரப் தனது நோக்கம் தனது அமைச்சை இல்லாதொழிப்பதே என்று கூறியுள்ளார். ஒரு வருடத்திற்குள் நாட்டில் அகதிகள் இல்லை என்ற நிலையை உருவாக்குவதன் மூலம் தனது அமைச்சுப் பதவியை இல்லாதொழிப்பேன் என்று அவர் கூறியுள்ளார். 'கடந்த அரசில் அகதிகள் தொடர்ந்து இருப்பதன் மூலம் அந்த அமைச்சை தொடர்ந்தும் வைத்திருப்பதே அவர்களின் நோக்கமாக இருந்தது. நாங்கள் அகதிகளை மனிதப் பிரச்சனையாகப் பார்க்கிறோம். எல்லா அகதிகளுக்கும் வீடுகள், மின்சாரம், நீர் வழங்கப்படுவதுடன் அவர்களின் குழந்தைகளுக்கு தகுந்த கல்வியும் வழங்கப்படும்' என்று அவர் தெரிவித்திருக்கிறார்.

## வவுனியாவில் மோதல்

வவுனியாவில் தேர்தலுக்குப் பின்பாக தாண்டிக்குளம் சோதனை முகாமின் மீது புலிகள் நடத்திய தாக்குதலில் மூன்று இராணுவத்தினர் காயமடைந்ததாக இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இந்தியாவில் தொலைக்காட்சி தனியார் மயமாகும்

இந்தியா ஒளிபரப்புத் துறையில் தனியார்களை அனுமதிக்க உள்ளது. இதுவரையும் தூரதர்ஷனே இந்தியாவின் ஏகபோக ஒளிபரப்பாளராக இருந்தது. ஆயினும் ஹொங் கொங்கின் ஸ்டார் தொலைக்காட்சி உபகோள் மூலம் இந்தியாவுக்கு நிகழ்ச்சிகளை ஒளிபரப்பி வந்தது. இருப்பினும் உத்தியோகபூர்வமாக நாட்டுக்குள் ஒளிபரப்பு நிலையங்களை ஸ்தாபிக்க அனுமதிக்கப்படவில்லை.

இதன் காரணமாக ஒரு நிறுவனம் நேபாளத்தில் ஒரு நிலையத்தைக் கட்டி இந்தியாவுக்கு உபகோள் மூலம் ஒளிபரப்புச் செய்தது. இன்னொரு நிறுவனம் ரஷ்ய உபகோள் மூலம் ஒளிபரப்புகிறது.

# சீதனப் பிரச்சனைக்கு இருபதாயிரம் பேர் பலி

இந்தியாவில் வருடாந்தம் இருபதாயிரம் பெண்கள் சீதனப் பிரச்சனையால் கொல்லப்படுகிறார்கள் என்று அரசாங்கம் தெரிவித்திருக்கிறது. வருடாந்தம் சீதனப் பிரச்சனையால் கணவர்களாலும் புகுந்த வீட்டினராலும் கொல்லப்படும் பெண்களின் தொகை அதிகரித்த வண்ணம் உள்ளது. 1990 இல் 4836 ஆக இருந்த தொகை 93ல் 5582 ஆக அதிகரித்துள்ளது. இந்த கால இடைவெளியில் சுமார் 20537 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

உத்தரப் பிரதேசத்திலேயே இந்த கொலைகள் அதிகமாயுள்ளன. அங்கு 1952 பேர் கடந்த வருடம் சீதனப் பிரச்சனைக்காக கொல்லப்பட்டிருக்கிறார்கள். கொல்லப்பட்டவர்களில் பலர் மண்ணெண்ணெய் ஊற்றியே கொல்லப்பட்டுள்ளார்கள். இதன் பின்னர் சமையலறையில் ஏற்பட்ட விபத்து என்று மூடி மறைக்கப்படுகிறது. மற்றும் பலர் தற்கொலை செய்யும்வரை சித்திரவதை செய்யப்படுகிறார்கள்.

இந்தியாவின் மத்திய தரவகுப்பின் அதிகரிப்பின் காரணமாகவும் இந்தியாவின் பொருளாதார மாற்றங்களால் இறக்குமதி அதிகரித்ததாலுமே இந்த எண்ணிக்கை அதிகரித்து வருவதாகக் கூறப்படுகிறது. பல குடும்பங்களால் விரைவில் பணக்காரராவதற்கான வழியாக இந்த சீதன முறை பயன்படுத்தப்படுவதாக அரச அறிக்கை தெரிவிக்கிறது. இந்தியக் குடும்பங்களில் மகனுக்கு சீதனம் அதிகமாகப் பெற முடியும் என்ற நம்பிக்கையில் பெற்றோர் மகனின் கல்வியில் அதிகமாக முதலீடு செய்கின்றனர். 87 ல் கொண்டுவரப்பட்ட சீதனத் தடைச் சட்டத்தை கடுமையாக அமுல்படுத்தும்படி பொதுமக்களும் தொடர்பு சாதனங்களும் கேட்ட வண்ணம் உள்ளன. ஆனால் இந்த சட்டம் முழுமையாக அமுல்படுத்தப்படுவதில்லை என்றே சமூக சேவையாளர் தெரிவிக்கின்றனர்.

# சோமாலியாவில் இந்திய அமைதிப்படையினர் கொலை

இந்தியா ருவாண்டாவிற்கும் சமாதானப் படையை அனுப்ப உள்ளது. ஐ.நா சபையின் சமாதானப் படையின் பிரிவாக இந்த படை இயங்கும்.

கடந்த வாரம் சோமாலியாவில் ஏழு இந்தியப் படையினர் சோமாலியர்களால் கொல்லப்பட்டிருந்தனர். இதனால் இந்தியப் படையினரை திருப்பி அழைக்க வேண்டும் என்று கோரிக்கை எழுந்திருந்தது.

சோமாலியாவில் உள்ள 18700 இராணுவத்தினரில் இந்தியாவின் ஐயாயிரம் பேர் கொண்ட படை இரண்டாவது பெரிய படையாகும்.

ருவாண்டாவிலிருந்து வெளியேறும் பிரெஞ்சுப் படைகளுக்கு பதிலாகவே இந்த இந்தியப் படையினர் அனுப்பப்பட உள்ளார்கள்.

சோமாலியாவில் உள்ள இந்திய அமைதிபபடையினருக்கு தொடர்பு சாதனங்களும் ராஜதந்திரிகளும் பாராட்டுத் தெரிவித்திருந்தனர். மற்ற நாட்டுப் படையினரை விட இந்தியப் படையினர் பல இடங்களில் வெற்றிகரமாக செயற்பட்டனர்.

இருப்பினும் இந்த அமைதி காக்கும் செயற்பாட்டின் பயனாக தங்கள் எதிரியான பாகிஸ்தான் படையினருடன் இந்தியப் படையினர் சேர்ந்து செயற்பட வேண்டியிருந்தது. பல இடங்களில் பாகிஸ்தான் படையினரை இந்தியப் படையினர் காப்பாற்றியதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. சோமாலியாவில் மேற்கு நாடுகளும் அமெரிக்காவும் வெளியேறிய பின்னர் ஆசிய, ஆபிரிக்கப் படைகளே அங்குள்ளன.

இந்தியா தன்னை ஐ.நா பாதுகாப்பு கவுன்சிலில் அங்கத்தவராகச் சேர்க்கும்படி கோரி வருகிறது. முன்பு ஜேர்மனி, ஜப்பான் ஆகிய நாடுகளின் கோரிக்கையை இநதியா ஆதரித்திருந்தது.

கடந்த வாரம் ஐ.நா படையின் உணவு வண்டித் தொடருக்கு பாதுகாப்பாக இந்திய வீரர்கள் சென்றுகொண்டிருந்த போது சோமாலிய கெரில்லாக்கள் விமான எதிர்ப்புத்துப்பாக்கிகளால் சுட்டதில் ஏழு பேர் கொல்லப்பட்டதுடன் ஆறு பேர் காயமடைந்தனர். இதில் மூவர் உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கின்றனர்.

# பம்பாய் குண்டுவெடிப்புன் சூத்திரதாரிகள் கைது

பம்பாய் குண்டுவெடிப்புகளுக்கு பொறுப்பானதென்று குற்றம் சாட்டப்படும் மேமண் குடும்பத்தின் மற்ற உறுப்பினர்கள் நால்வரை இந்தியா கைது செய்துள்ளது. முன்பு இன்னொரு உறுப்பினரைக் கைது செய்ததாக இந்தியா கூறிய போதும் அவர் நேபாளத்தில் வைத்து தான் கைது செய்யப்பட்டு இந்தியாவிடம் ஒப்படைக்கப்பட்டதாக தெரிவித் திருந்தார்.

கடந்த வருடம் 260 பேர் கொல்லப்படக் காரணமான குண்டுவெடிப்புகளின் சூத்திரதாரிகள் இவர்கள் என்றே கூறப்படுகிறது. அப்துல் ரசாக் மேமம், அவரது மூன்று

மறு பக்கம் பார்க்க..



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இந்தியப் பிரதிநிதி சந்திரிகாவைச் சந்தித்தார்

பிரதமர் சந்திரிகாவை நரசிம்மராவின் பிரதிநிதி ஏ.என்.வர்மா சந்தித்திருக்கிறார். பிரதமருக்கு இந்தியப் பிரதமரின் வாழ்த்துக்களைச் சுமந்து வந்த வர்மா இரு நாடுகளுக்கும் இடையில் ஒத்துழைப்பை பலப்படுத்தும் நரசிம்மராவின் விருப்பத்தையும் தெரிவித்தார்.

இரு நாடுகளிற்கும் இடையிலும் பிராந்தியத்திற்கு இடையிலும் உள்ள உறவுகளை வளம்படுத்துவது பற்றியும் இருவரும் ஆராய்ந்தனர்.

# சந்திரிகாவுக்கு புளொட் நிபந்தனையற்ற ஆதரவு

சந்திரிகாவின் அரசுக்கு நிபந்தனையற்ற ஆதரவு வழங்க புளொட் முன்வந்துள்ளது. ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் சந்திரிகாவை கடந்த வாரம் ஞாயிற்றுக்கிழமை சந்தித்து தனது ஆதரவைத் தெரிவித்தார். தங்கள் ஆதரவை அவர் ஏற்றுக் கொண்டதாக புளொட் முக்கியஸ்தர் றெய்யட்டர் நிருபருக்குத் தெரிவித்தார்.

இதை விட ஈ.பி.டி.பியும் எதிர்பார்த்ததற்கு மாருக ஐ.தே. கட்சிக்கான தனது ஆதரவை நிறுத்தியுள்ளது. டக்ளஸ்தேவானந்தா சந்திரிகாவைச் சந்தித்து தமது ஆதரவைத் தெரிவித்தாக ஐலண்ட் தெரிவித்திருக்கிறது.

# அனுபவம் வாய்ந்த வெளிநாட்டமைச்சர்

தேசியப் பட்டியலில் நியமிக்கப்பட்ட வெளிநாட்டமைச்சரான தமிழர் லக்ஸ்மன் கதிர்காமர் 62 வயதானவர். இவர் கண்டி றினிற்றி கல்லூரியில் பயின்றவர். பின்னர் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் சட்டப் பட்டம் பெற்றதன் பின்னர் ஒக்ஸ்போட்டில் இலக்கியத்தில் பட்டமும் பெற்றார். பின்னர் சட்டத்தரணியாக பணியாற்றிய இவர் சர்வதேச தொழில் ஸ்தாபனம், ஐ.நா போன்ற அமைப்பகளில் பணியாற்றினார். வியட்னாமில் கத்தோலிக்க, பௌத்த நெருக்கடி பற்றி விசாரிப்பதற்கான ஆணைக்குழுவில் பணியாற்றியிருந்தார்.

# புதிய தொழில் முயற்சிகளுக்கு ஆதரவு

புதிய அரசு உள்ளூர் உற்பத்திகளுக்கு ஊக்கம் கொடுக்கவுள்ளது. இலங்யையில் தற்போது ஆடைகளும் தேயிலை, இறப்பர், தெங்குப் பொருட்களே அதிகளவு ஏற்றுமதியாகின்றன. குறைந்த செலவில் உற்பத்தி செய்யக் கூடிய பொருட்களை ஏற்றுமதிக்காக உற்பத்தி செய்வதில் அரசு கவனம் செலுத்தவுள்ளது.

இந்தியா, தாய்லாந்து, மாலைதீவிலிருந்து மலிவு விலையில் ஆடை உற்பத்தியாளர்கள் துணிகளை வாஙகுவதால் உள்ளூர் உற்பத்தியாளர் பாதிக்கப்படுகின்றனர் என்று துணி உற்பத்தியாளர் சங்கத் தலைவர் ஏ.வை.எஸ்.ஞானம் தெரிவித்திருக்கிறார்.

இலங்கை சென்ற வருடம் 660 கோடி ருபாவுக்கு ஆடை ஏற்றுமதி செய்திருந்தது.

பொருளாதார அபிவிருத்திக்காக தொலைத்தொடர்புகளுக்கும் மின் உற்பத்திக்கும் நெடுஞ்சாலை அமைப்புக்கும் பெருமளவு பணம் செலவிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# குறைந்த வாக்கு வித்தியாசமே

கட்சிகளுக்கு நாடளாவிய ரீதியில் கிடைத்த வாக்குகளில் ஐ.தே. கட்சியும் சுதந்திரக் கட்சியும் நான்கு லட்சம் வாக்குகள் வித்தியாசத்திலேயே உள்ளன. பொதுஜன முன்னணிக்கு 38

5 ம் பக்கம் பார்க்க..

# புலிகளின் நிர்வாகம் பரவலாகுகிறது

சிறிலங்கா அரசு பதவிக்கு வந்த பின்னர் கூட புலிகள் தங்கள் நிர்வாகப் பிரிவை பரவலாக்கியுள்ளனர். தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள மேலும் பல பகுதிகளுக்கு இந்த நிர்வாகப் பிரிவை அமுலாக்கியுள்ளனர் என்று றெய்ட்டர் செய்தி தாபனம் கூறுகிறது. வவுனியா வந்து சேர்ந்த அரச அதிகாரி ஒருவர் இதை றெய்ட்டருக்குத் தெரிவித்திருக்கிறார். வவுனியாவுக்கு வடக்கே மூன்று பகுதிகளிலும் அ'தமிழீழ நிர்வாக சேவை' என்ற அவர்களின் அமைப்பின் அலுவலகங்களை திறந்துள்ளனர் என்று அவர் தெரிவித்தார். புலிகளிற்கு தெரியாமல் செயற்படக் கூடாது என்ற அரச அதிகாரிகளுக்கு புலிகள் அறிவித்துள்ளதாகவும் புலிகளின் அனுமதியின்றி நிருபர்களுடன் பேசக் கூடாது என்று கட்டளையிட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறினர்.

# பம்பாய்..

மகன்மாரான ஐசா, யூசுப், சுலைமான் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களைக் காட்டிக் கொடுப்பவர்களுக்கு ஒரு லட்சம்ருபா சன்மானம் அளிக்கப்படும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. இவர்களுடன் இவர்களில் இருவரின் மனைவியரும் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களுடன் பல முக்கிய ஆவணங்களும் பிடிக்கப்பட்டதாக உள்துறை அமைச்சர் சவான் தெரிவித்தார். ஆயினும் இவர்கள் எங்கே கைது செய்யப்பட்டார்கள் என்பது பற்றி சவான் தெரிவிக்கவில்லை. விசாரணைகள் நடப்பதால் அவற்றைக் குழப்ப தான் விரும்பவில்லை என்று அவர் தெரிவித்தார்.

ஆயினும் இவர்கள் துபாயிலிருந்து விசேட விமானத்தில் கொண்டு வரப்பட்டதாகவே கூறப்படுகிறது. இவர்களில் ஒரு சகோதரரான டைகர் எங்கே என்பது தெரியவில்லை. இவரே துபாயில் உள்ள இன்னொருவரான இப்ராகிம் தாவூத்துடன் சேர்ந்து இந்த குண்டுவெடிப்புகளுக்கு சதி செய்தார் என்று கூறப்பட்டுள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தாய்லாந்திற்குள் இலங்கைத் தமிழர் நுழையத் தடை

இலங்கைத் தமிழர்கள் தாய்லாந்திற்குள் சட்டவிரோதமாக நுழைவதை தடுக்குமாறு தாய்லாந்து பொலிசாருக்கு கட்டளையிடப்பட்டுள்ளது. பொலிஸ் பகுதியினரை மேற்கோள் காட்டி தாய்லாந்து பத்திரிகை ஒன்று வெளியிட்ட செய்தியில் அங்குள்ள இலங்கைத் தமிழர் சமூகத்தின் மத்தியில் இவர்கள் மிரட்டிப் பணம் பறிக்கக்கூடும் என்றும் இலங்கைத் தூதுவரகத்தின் மீது பயங்கரவாதத் தாக்குதல்கள் நடத்தக் கூடும் என்றும் கூறப்பட்டுள்ளது.

தாய்லாந்தின் உள்நாட்டமைச்சு பொலிசாருக்கு விடுத்த சுற்றறிக்கை ஒன்றில் பல ஐரோப்பிய நாடுகள் தமிழர்களின் செயற்பாடுகளை மட்டுப்படுத்தி வருவதாகவும் கூறப்பட்டுள்ளது.

உலகெங்கும் சட்ட விரோதமாக நுழையும் தமிழர்கள் மறைந்திருப்பதாகவும் இவர்கள் போதைப் பொருள் கடத்தல், தங்கப் பாளங்கள் விற்பனை போன்றவற்றில் ஈடுபட்டிருப்பதாகவும் அத்துடன் இந்தச் செயற்பாடுகளுக்கும் கொழும்பில் பாதாள உலக அமைப்புக்கும் சம்பந்தம் உண்டு என்றும் அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்திருக்கிறது.

# சந்திரிகாவின் வெற்றி பிரிட்டன் இலங்கையருக்கு நம்பிக்கையூட்டுகிறது

சந்திரிகாவின் வெற்றி பிரிட்டனில் உள்ள இலங்கையர்களில் பலருக்கு மன நிம்மதியைக் கொடுத்திருக்கிறது. இவர்களில் பலர் முன்னைய அரசை விட சந்திரிகா பிரச்சனையைத் தீர்க்கக் கூடும் என்று நம்புகிறார்கள். இருந்தாலும் கட்சிக்குள் உள்ள மோதல்களையும் மீறி இவரால் சீர்திருத்தங்களை மேற்கொள்ள முடியுமா என்பதிலும் சந்தேகங்கள் உள்ளன. 'மக்களின் எதிர்பார்ப்புக்கு தகுந்தமாதிரி செயற்படுவதில் சந்திரிகா நல்லவர் என்றே நினைக்கிறேன், ஆனால் போதிய அதிகாரம் இல்லாததால் எப்படி நெருக்கடிகளின் போது செயற்படுவார் என்பதில் சந்தேகம் உண்டு' என்கிறார் மயில்வாகனம் சூரியபிரகாசம். இவர் லண்டன் வடக்கில் உள்ள நகரசபை ஒன்றில் பணிபுரிகின்ற இயந்திரவியலாளர். அத்துடன் இலங்கையில் மனித உரிமைகளுக்காக செயற்படும் அமைப்புகளுக்கு ஆதரவளிப்பவர்.

அதிகாரப் பரவலாக்கமே சரியான தீர்வு என்கிறார் அவர். தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட பாரபட்சத்தை நீக்குவதற்கு இதுவும் நல்ல வழி என்று அவர் கருதுகிறார்.

உண்மையான சீர்திருத்தத்தையும் சமாதானத்தையும் பயமுறுத்துவது இந்த ஒரு ஆசனப் பெரும்பான்மை தான் என்கிறார் ரஞ்சித் மெண்டிஸ். ஒருபுறத்தில் சிங்கள தேசியவாதிகளையும் முஸலிம் ஆதரவாளர்களையும் சமாளிக்க வேண்டிய தேவை சந்திரிகாவுக்கு உண்டு என்கிறார் அவர். சிங்களத் தேசியவாதிகள் இந்த தேர்தலில் அழிந்து போனார்கள் என்று கூறும் மெண்டிஸ் தமிழ் கட்சியினர் அதிக ஆதிக்கம் செலுத்தும் வாய்ப்புகள் உண்டு என்கிறார். 'பண்டாரநாயக்க பரம்பரை தனது பாதையை மாற்றப் போவதில்லை. ஆனாலும் சந்திரிகா எங்களுக்கு கிடைத்த ஜனநாயக வழியில் நம்பிக்கையாகத் தெரிகிறார்' என்கிறார் மெண்டிஸ்.

எந்தக் கட்சி பதவிக்கு வந்தாலும் தமிழ் மக்கள் அதிகம் பெறப்போவதில்லை. அதிகாரப் பரவலாக்கமே ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வாக இருக்கும், ஆனால் அதை நிறைவேற்றுவ கஷ்டமாயிருக்கும் என்கிறார் தமிழர் நலன்புரி சங்கத்தைச் சேர்ந்த ஆர். பத்மநாபன்.

# எதிர்க்கட்சி தலைவராக காமினி முயற்சி

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு பதிலாக தானே எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்கப்பட வேண்டும் என்பதில் காமினி முனைப்பாக நின்றிருக்கிறார். அவர் ரணிலைச் சந்தித்து தனது விருப்பைத் தெரிவித்திருக்கிறார். அத்துடன் ஐ.தே.கட்சியின் பாராளுமன்றக் குழுவின் பெரும்பான்மை ஆதரவு தனக்கு இருப்பதாக அவர் தெரிவித்தார். ஆனால் பதவி மாறும் பிரதமரே எதிர்க்கட்சித் தலைவராக இருப்பது வழமை என்பதை ரணில் சுட்டிக் காட்டினார். முன்பு டட்லி தானாகவே ஜே.ஆரை எதிர்க்கட்சித் தலைவராக இருக்கும்படி கேட்டுக் கொண்டதாகவும் மற்ற சமயங்களில் பிரதமரே எதிர்க்கட்சித் தலைவராக இருந்ததையும் ரணில் சுட்டிக் காட்டினார்.

இதையடுத்து ஜனாதிபதியைச் சந்தித்து நிலைமையை காமினி விளக்கிய போது அவர் இதை வாக்கெடுப்புக்கு விடும்படி கேட்டுக் கொண்டார். ஆனால் காமினி வருவதற்கு சிறிசேன கூரே போன்றோர் கடும் எதிர்ப்பு தெரிவிக்கின்றனர்.

## குறைந்த..

லட்சத்து 87 ஆயிரத்து 799 வாக்குகளும் ஐ.தே.கட்சிக்கு 34 லட்சத்து 98 ஆயிரத்து 172 வாக்குகளும் கிடைத்தன.

கூட்டணிக்கு 132432 வாக்குகளும் மு.காங்கிரசுக்கு 140,944 வாக்குகளும் மகாஜன எக்சத் பெரமுனவுக்கு 68538 வாக்குகளும் இலங்கை முற்போக்கு முன்னணிக்கு 90078 வாக்குகளும் கிடைத்தன.

ஈ.பி.ஆர்.எல்.எப்க்கு 9132 வாக்குகளும் நவசமசமாஜக் கட்சிக்கு 2094 வாக்குகளும் புளொட்டுக்கு 15567 வாக்குகளும் டெலோவுக்கு 26081 வாக்குகளும் கிடைத்தன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஆட்சியமைக்கும் ஐ.தே.கவின் முயற்சிக்கு நடந்தது என்ன?

தான் ஐ.தே.கட்சி சார்பில் ஆட்சி அமைக்க முயன்றதாக வெளிவந்த செய்திகளை காமினி திசநாயக்க மறுத்துள்ளார். தான் கூட்டணியின் நீலன் திருச்செல்வத்துடன் பேச்சுவார்த்தைகள் நடத்தியதை ஒத்துக் கொண்ட அவர் முஸ்லிம் காங்கிரஸை தான் அணுகியதாக வெளிவந்த செய்தியை மறுத்தார்.

நாட்டை அபிவிருத்தி செய்ய புதிய அரசு எடுக்கும் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதாகவும் மக்களோடு நின்று அவர்களின் நலன்களை பாதுகாக்கப் போவதாகவும் அவர் பத்திரிகையாளர்களுக்கு நடத்திய மாநாட்டில் தெரிவித்தார்.

ஆனால் தேர்தல் முடிவுகள் வெளிவரத் தொடங்கிய போது எந்தக் கட்சியும் முழுமையான வெற்றி பெறாத நிலையில் இவர் தமிழ் கட்சிகளைச் சேர்த்து ஆட்சியமைக்க முயன்றார். இதற்கு முதல் கூட்டணியைச் சந்தித்த ரணில் கூட்டணியின் ஆதரவைக் கோரிய போது கூட்டணி ஆதரிக்கவில்லை. சொக்ஸியும் திசநாயக்கவும் நீலன் திருச்செல்வத்தை சந்தித்திருந்தனர்.

பின்னர் காமினி கொழும்புக்கு பறந்து வந்தார். அவர் ஜோசப் பரராஜசிங்கத்தை சந்தித்த போது அவர் நீலனிடம் இது பற்றி பேசும்படி தெரிவித்தார். சித்தார்த்தனுடன் தொடர்பு கொள்ள முடியாததால் விமானப்படை அலுவலர் ஒருவர் மூலம் அவருக்கு செய்தி அனுப்பி அவரை கொழும்பு வரும்படி கேட்ட போது அவர் மறுத்து விட்டார். திருமலை சம்பந்தனுக்கு ஹெலிகொப்டர் அனுப்புவதாகக் கூறிய போதும் அவர் மறுத்து விட்டார்.

இதற்குள் முஸ்லிம் காங்கிரஸிற்கு மூன்று மந்திரிப் பதவிகள் வழங்கி இழுக்கவும் முயற்சி நடந்தது. அஷ்ரப் அதற்கு மறுத்து விட்டார். பின்னர் திகாமடுல்லவில் இருந்த அஷ்ரப்பை ஜனாதிபதியின் செயலாளர் விஜயதாச தொலைபேசியில் தொடர்பு கொண்டு ஜனாதிபதி பேச விரும்புவதாகக் கூறிய போது 'அவருடன் எதுவும் பேசுவதற்கில்லை' என்று அஷ்ரப் தெரிவித்தார். அதற்கு விஜயதாச கட்சித் தலைவர் என்ற ரீதியிலேயே ஜனாதிபதி சந்திக்க விரும்புகிறார் என்று கூறியதுடன் ஜனாதிபதி அவரை இரண்டு மணி நேரத்துக்குள் சந்திக்க விரும்புவதாகவும் கூறினார். திகாமடுல்லவில் இருந்து தான் கொழும்பு வரத் தாமதமாகும் என்று கூறிய போது உடனடியாக ஹெலிகொப்டர் அனுப்பப்பட்டது. ஆனால் தான் சந்திரிகாவைச் சந்தித்த பின்பே ஜனாதிபதியைச் சந்திப்பதாக அஷ்ரப் தெரிவித்தார். பின்னர் கொழும்பு வந்த அஷ்ரப் தான் விலைக்கு வாங்கப்பட்டதாக செய்திகள் பரவியதாகக் கூறி ஜனாதிபதியைச் சந்திக்கவில்லை.

இதன் பின்னர் பொதுஜன முன்னணி கூட்டணியைச் சந்தித்து அவர்களுக்கு சபாநாயகர் பதவி கொடுக்க முயன்றது. நீலன் திருச்செல்வத்தை சந்தித்த போது அவர் ஜோசப் பரராஜசிங்கத்தை தொடர்பு கொண்ட போது அவர் மறுத்து விட்டார்.

புளொட்டுடன் ஒஸி அபேகுணசேகர மூலம் தொடர்பு கொண்ட போது புளொட் மறுத்து விட்டது.

தங்களால் ஆட்சி அமைக்க முடியாது என்ற நிலையில் ரணில் தொண்டமானை அழைப்பித்து ஜனாதிபதியிடம் தோல்வியை ஒப்புக்கொள்ளும்படி வற்புறுத்தினார். தொண்டமானும் பெரும்பான்மை இல்லாமல் அரசமைப்பதை விரும்பவில்லை.

பின்னர் ஜனாதிபதி படைத்தளபதிகள், பொலிஸ் மா அதிபரைச் சந்தித்து சிறுபான்மை அரசை ஐ.தே.க அமைத்தால் சட்டமும் ஒழுங்கும் நிலைநாட்ட முடியுமா என்று கேட்ட போது அவர்கள் முடியாது என்று மறுத்ததாக கூறப்படுகிறது. இதன் பின்பே ஜனாதிபதி தோல்வியை ஒப்புக் கொண்டு சந்திரிகாவை பதவியேற்க அழைத்தார்.

## பங்குச் சந்தை மீண்டும் சூடுபிடிக்கிறது

சுதந்திரக் கட்சி ஆட்சிக்கு வந்ததன் பின்னர் இலங்கையின் பங்குச் சந்தையில் பங்கு விற்பனை அதிகரித்துள்ளது. விற்பனை மேல் நோக்கி செல்வதாக பங்கு சந்தையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். தேர்தலின் பின்னால் வன்முறைகள் நிகழலாம் என்ற அச்சத்தில் பலர் முதலீடுகளை பின்போட்ட போதிலும் தற்போது நம்பிக்கை ஏற்பட்டுள்ளதால் அதிகமாக விற்பனை நடைபெறுகிறது.

## ஐ.தே.க மந்திரிகளுக்கு பாதுகாப்பு

தேர்தல் முடிந்த பின்பும் ஐ.தே. கட்சியின் பழைய அமைச்சர்களுக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டிருக்கிறது. புலிகளால் தாக்குதல் நடத்தப்படும் என்ற அச்சத்தில் இவர்களில் பலருக்கு பாதுகாப்பு வழங்கப்படும் என்று முன்னர் ஜனாதிபதி உறுதியளித்திருந்தார்.

சந்திரிகா இந்த அமைச்சர்களுக்கு பாதுகாப்பு வழங்கச் சம்மதித்திருந்தார். எனினும் எவ்வளவு காலத்திற்கு இந்த பாதுகாப்பு நீடிக்கும் என்பது பற்றி எதுவும் அவர் தெரிவிக்கவில்லை.

## மேல் மாகாணத்திற்கு புதிய முதல்வர்

சந்திரிகா பிரதமராகத் தெரிவு செய்யப்பட்டதை அடுத்து மேல் மாகாணத்தில் அவருடைய இடத்திற்கு மொறிஸ் ராஜபக்ஸ தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். இவர் ஆளுனர் சுவாமிநாதன் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மரண அறிவித்தல்

# கந்தையா சிவலிங்கம்



**தோற்றம்**
*13.3.1937*

**மறைவு**
*25.8.94*


கல்வியங்காட்டைச் சேர்ந்த கந்தையா சிவலிங்கம் 25.8.94 அன்று லண்டனில் காலமானார். இவர் புஷ்பராணியின் (லண்டன்) அன்புக் கணவரும், காலம் சென்ற கந்தையா தம்பதிகளின் அன்பு மகனும் பாக்கியவதனி (லண்டன்) முரளிதரன் (லண்டன்) கோபிதரன் (லண்டன்) பரணிதரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத்தந்தையும் காலம் சென்ற பத்மாவதி, விஜயலட்சுமி (லண்டன்) காலம் சென்ற பரமநாதன், நித்தியானந்தன் (இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரனும் குமரதேவனின் (லண்டன்) மாமனும் லஷ்சாயினியின் (லண்டன்) பேரனுமாவர். அன்னாரது பூதவுடன் 1.9.94 லண்டனில் தகனம் செய்யப்படும்.

தகவல்
என்.கிரி
298 8417



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கம்பியூட்டர்:

## தெரிந்தோருக்கும தெரியாதோருக்கும் சில அறிமுகங்கள் (3)

**சிவப்பிரகாசம்**

கம்பியூட்டரில் எழுதியவற்றை அப்படியே எமது வீடியோவில் பதிக்க முடியாதா? என்ற கேள்விகள் சிலர் மனதில் இப்போ தோன்றியிருக்கும். அவற்றை தொடரின் அடுத்த அத்தியாயத்தில் ஆராய்வோம் என சென்ற அத்தியாயத்தில் முடித்திருந்தேன். அந்த விஷயத்தை இன்னும் பிற்போட வேண்டியிருக்கிறது.

இன்னும் சில விஷயங்களை விளக்கிய பின்னர்தான் அது புரியக்கூடியதாக இருக்கும். வீடியோ பற்றி எழுதும் போது முழுமையாக அது பற்றி ஆராய்வோம். கம்பியூட்டர் என்றவுடன் பலர் வாயில் lotus என்ற சொல்தான் வரும். Lotus என்பது ஒரு application program. அதிலும் ஒரு நீளுருத்தாள் (spread sheet) program. அப்படியென்றால்? சதுர றுாள் கொப்பி அந்தக்காலத்தில் பாவித்திருப்பீர்களே . அது போலத்தான். பல rows ஆகவும் columns ஆகவும் இந்தக் கூடுகள் இருக்கும். அந்தக் கூட்டுக்குள் இலக்கமும் எழுதலாம். வசனமும் எழுதலாம். கூடுகளுக்குள் இலக்கங்களை எழுதிவிட்டு வேறொரு கூட்டுக்குள் இந்த இலக்கங்களில் கூட்டுத்தொகையை நாம் மனதால் கூட்டிப் போட்டுக்கொள்ளலாம்.

ஆனால் கூட்டவேண்டிய எண்களின் எண்ணிக்கை ஆயிரக் கணக்கானதாக இருப்பின் எவ்வளவு சிரமமானதாய் இருக்கும். @sum() என்ற கட்டளையை நாம் பிறப்பிக்க சில செக்கனுக்குள் கம்பியூட்டர் கூட்டி முடித்துவிடுகிறது. இது ஒரு உதாரணம். இது போன்று பல கணக்குகளையும் கம்பியூட்டர் கணித்துவிடும். அது எப்படி ? அதுதான் முன்னமே எழுதியிருந்தேனே. டழவரள அப்படியாக பல விஷயங்களைச் செய்யும் வழிகளுக்கான instructions ஐ உள்ளே வைத்திருக்கிறது. lotus ஐ உபயோகித்துப் பல விஷயங்களைச் செய்துகொள்ளலாம். வரைபடங்கள் (graph , chart) கீறிக் கொள்ளலாம். அதுவும் வண்ணப் பூச்சுகளுடன். அதில் கடிதங்கள்கூட எழுதிக் கொள்ளலாம். எழுத்து அலங்காரியாகவும் (word processor) ஆகவும் மட்டுப்படுத்திய நிலையில் அது செயற்படும். தரவுக் கோர்வைகளை (data base) உருவாக்கிக் கொள்ளவும் பயன்படும்.

தரவுக் கோர்வை (data base) என்பது சிலருக்குப் புதிய சொல்லாக


Books,
Flyers,
Business Cards,
Wedding Cards

**Blue Line Printing**

கண்ணைக் கவரும் வண்ணங்களில்
தரமான அச்சுவேலைகளுக்கு..

| | | |
|---|---|---|
| 1000 | Flyers | $21 |
| | Envelopes | $35 |
| | Business Cards | $30 |
| | Letterheads | $25 |

Tel:299 5979
Fax:299 8171

335 Nugget Ave, Unit 6
(McGowan/Sheppard)
Scarborough




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இருக்கலாம். உதாரணச் சம்பவம் ஒன்று. சில காலமாக ரொரன்ரோவில் கிடைக்கும் பத்திரிகைகளை வாராவாரம் பெற்றுச் குறிப்பிட்ட தகவல்களை கம்பியூட்டரில் எழுதி வைத்தேன். ஒவ்வொரு பத்திரிகையிலும் வரும் இலக்கிய முன்னேற்றத்துக்கான ஆக்கங்களின் எண்ணிக்கை, எனது பார்வையில் அதன் தரத்தின் மதிப்பீட்டெண், ஈழ விடுதலைப் போராட்டத்துக்கு வலுவேற்றும் ஆக்கங்களின் எண்ணிக்கை, சமூக நோக்கில் அமைந்த கட்டுரைகளின் எண்ணிக்கை, வியாபார மசாலாக்கள் ...... இப்படியாக பல வகையாக வாராவாரம் தரவுகளைக் கோர்வைப் படுத்தி கம்பியூட்டரில் வைத்தேன். இப்படி எழுதி வைப்பதை எவ்வாறு decision making க்கு பயன்படுத்தலாம் என்று நண்பர் ஒருவர் கேட்டார். இந்தத் தரவுக் கோர்வையில் (data base) இருந்து விருப்பிய சாரங்களை (query) பெற்றுக் கொள்ளலாம். எந்தப் பத்திரிகையின் ஆக்கங்கள் ஈழப் போராட்டத்துக்கு வலுவேற்றுகின்றன என்ற query க்கு எனது தரவுகளில் இருந்து கிடைத்த பதில் என்னையும் நண்பரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தின. அந்தப் பத்திரிகை............ (சுய தணிக்கை). அதேபோல எது வியாபார மசாலா என்ற query க்குரிய பதில் நாம் எதிர்பார்த்ததாய் இருந்தது. decision making என்பது வியாபாரங்களுக்கு மட்டுமல்ல தனிமனிதர்களுக்கும் தேவை. அதற்கு தரவுக் கோர்வைகள் கைகொடுக்கின்றன. இந்தத் தரவுக்கோர்வைகளை பிரயோசனமான முறையில் பயன்படுத்துவதற்கான அமைப்புகளுடன் எழுதப்பட்டவைதான் database programs. lotus போன்ற spreadsheet programs ல ஓரளவு database தன்மை இணைக்கப்பட்டுள்ளது.

ஆரம்பகாலத்தில் dos க்கு மட்டும் எழதப்பட்டிருந்த lotus இன்று windows க்கும் வந்திருக்கிறது. windows க்காக ஏழுதப்பட்ட lotus ல windows க்கான சிறப்பியல்புகளும் இணைந்திருப்பதால் பல சௌகரியங்களைத் தருகிறது. இன்று lotus போன்று excel , quatro pro எனப்பல spread sheetprograms பயன்படுத்தப்படுகின்றன. தமிழிலும் தரவுகளை எழுதி வைக்கலாம். இவற்றின் உள்விஷயங்கள் எதனையும் நான் இங்கே குறிப்பிடவில்லை. ஏனெனில் அது யானை பார்த்த குருடனாக ஆகிவிடும்.

data base க்கு பல மெதுகலங்கள் உண்டு. ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு சிறப்பியல்புகள் உண்டு.

அதைப் பயன்படுத்தும் நோக்கத்தைப் பொறுத்தே எந்த மெதுகலம் உகந்தது எனத் தீர்மானிக்க முடியும்.

பொதுவாக சாதாரணமான பலருக்கும் அறிமுகமாக இருப்பது dBASE, Clipper, Foxpro போன்றவை.

தமிழிலும் கம்பியூட்டரில் எழுதி வைக்கலாம் என்று எழுதியிருந்தேன் அல்லவா. அது எப்படிச் சாத்தியமாகிறது என நினைப்பீர்கள். எழுத்துகள் ஒவ்வொன்றும் உருவங்கள். உருவங்கள் திரையில் வரும் என்றால் ஏன் தமிழ் எழுத்துக்கள் வரமுடியாது. keyboard ல உள்ள ஒவ்வொரு key ஐயும் அமத்தும் போது அது கம்பியூட்டரில் ஒரு சைகையைக் காட்டுகிறது. ஒவ்வொரு சைகைக்கும் என்ன விளைவை ஏற்படுத்த வேண்டும் என்பதை அப்போது அமுலில் உள்ள மெதுகலம் தீர்மானிக்கும். ஒரு வெள்ளைக்காரனிடம் பெருவிரலைத் தூக்கிக் காட்டினால் சந்தோசப்படுவான். அந்த விரலையே கவிழ்த்துக்காட்டினால் ஆத்திரப் படுவான். அதே சைகையை ஊரில் இருந்து புதிதாக வருபவரிடம் காட்டினால் .... பெருவிரலை உயர்த்திக் காட்டினால் மேலே பிளேன் வருகிறதா என அண்ணாந்து பார்ப்பார். விரலைக் கவிழ்த்துக் காட்டினால் கோப்பிக்குள் சீனிபோட்டுக் கலக்கிக் கொள்வார். பார்த்தீர்களா ஒரே சைகை வெவ்வேறு ஆட்களில் பிரயோகித்துப் பார்க்க வெவ்வேறு விளைவு ஏற்படுகிறது. அப்படித்தான் கம்பியூட்டரின் உள்ளே அமுலில் உள்ள font (எழுத்துருவம்) க்கு ஏற்ப திரையில் எழுத்து அமையும். font களின் அமைப்புக்கும் இயங்கும் முறைக்கும் ஏற்ப பல வகை உண்டு. தற்போதைக்கு true type font பற்றி மட்டும் அறிந்திருப்பின் அது காணும். இந்த font களை நீங்களே உருவாக்கிக் கொள்ளலாம். அல்லது வெளியாரிடம் வாங்கிக் கொள்ளலாம். எல்லா மொழிகளிலும் உண்டு. தமிழில் மட்டும் நூறுக்கும் மேற்பட்ட fonts உண்டு.

கனடாவில் வெளியான தமிழ் எழுத்துக்களைவிட இலண்டனில் வெளியானவை கண்ணைக் கவருபவை என்று சிலர் கூறக்கேட்டிருக்கிறேன். பல font ம் பதிப்புரிமையுடன் வெளிவருவதால் அதனை பிரதி பண்ணுதல் சட்டவிரோதமானது. font எப்படி உருவாக்கிக் கொள்வது என்ற விஷயம் பின்பு எழுதுவேன்.

அலுவலகங்களில் கம்பியூட்டர் பற்றிய என்ன அறிவை எதிர்பார்க்கிறார்கள். அங்கு பணி புரிய எவ்வகையான மெதுகலங்களில் பரிட்சயம் தேவை போன்ற விஷயங்களை இன்னொரு எழுத்தாளரின் பார்வையில் தொடரின் அடுத்த அத்தியாயத்தில் காண்பீர்கள்.

# காமினி திசநாயக்க எதிர்க்கட்சித் தலைவரானார்

இதுவரை பிரதமராக இருந்த ரணில் ஓரம் கட்டப்பட்டு தற்போது காமினி திசநாயக்க எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார். கடந்த புதன்கிழமை ஐ.தே.கட்சி இந்த முடிவை தெரிவித்தது. யார் எதிர்க்கட்சித் தலைவராவது என்பது பற்றி இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்பட்டிருந்தது. இந்த வாக்கெடுப்பின்போதே காமினி எதிர்க்கட்சித் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

காமினி மீண்டும் ஐ.தே.கட்சிக்குள் வருவதற்கு ரணில் கோஷ்டியினர் முட்டுக்கட்டையாக இருந்தனர். பின்னர் விஜேதுங்க தனது சொந்த முயற்சியில் காமினியை மீண்டும் கட்சிக்குள் கொண்டு வந்தார். காமினியின் வரவை பிரேமதாசாவின் ஆதரவாளர்களும் எதிர்த்திருந்தனர்.

காமினியின் வருகையின் போதே ஐ.தே.கட்சி மீண்டும் ஆட்சிக்கு வந்தால் அவர்தான் பிரதமராகுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஐ.தே.க தோற்ற நிலையிலும் சிறுகட்சிகளைச் சேர்ந்து பிரதமராக காமினி முயற்சித்திருந்தார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சினி ரொனிக்
**பட்டாபி**

# வெள்ளித்திரையில் பூலான் தேவி: இந்தியாவில் சர்ச்சையைக் கிளப்பும் படம்

இந்தியாவில் உத்தரப் பிரதேசத்தை ஒரு காலத்தில் கலக்கு கலக்கிய பூலான் தேவி இன்று சிறையிலிருந்து விடுதலையாகி தன் தங்கையின் கணவரைத் திருமணம் செய்து அமைதியாக வாழ்கிறார். இவர் தற்போது அரசாங்கத்தின் மன்னிப்புப் பெற்று விடுதலையாகி வாழ்கிறார். சிலரின் கண்களுக்கு இவர் தூக்குத் தண்டனைக்குள்ளாக வேண்டிய கொலைகாரி. பலரின் கண்களுக்கு அடிமைத்தனத்திற்கு எதிரான போராட்டத்தின் 'சண்டி ராணி'. உயர்ஜாதி தக்கூர் காரர்களுக்கு இவர் பதினெட்டுப் பேரைக் கொன்றதற்காக தூக்குத் தண்டனை பெற வேண்டிய கொலைகாரி.

இவர் பற்றி புத்தகங்கள், ஏன் ஆசிரிய தலையங்கங்கள் கூட வந்தன. இப்போது படம் கூட வெளிவந்திருக்கிறது. இந்திய இனஒதுக்கலிற்கு பலியானவர் தான் இந்த பூலான்தேவி என்கிறார் Bandit Queen என்ற படத்தை இயக்கிய சேகர் கபூர். கைதான பின்னர் ஒப்புதல் வாக்குமூலம் அளித்த பூலான் தேவியின் கதையின் அடிப்படையில் தயாரானது இந்தப் படம்.

'இந்த இன ஒதுக்கல் எங்கள் சாதி முறையில் மிகவும் எளிமையானதாக இருக்கலாம். அதிகாரத்தைக் கட்டுப்படுத்துவதற்கு மதத்தை வழியாகக் கொடுக்கிறது இந்த சாதி முறை. இது கறுப்பு வெள்ளை போன்றதல்ல' என்கிறார் சேகர் கபூர். இவர் கூட உயர் ஜாதி இந்து தான்.

பிரிட்டனின் நான்காவது தொலைக்காட்சி சேவையின் தயாரிப்பான இந்தப் படம் சர்வதேச பட விழாக்களில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்தியாவில் இன்னமும் தணிக்கைச் சபை இந்தப் படத்திற்கு அனுமதி வழங்கவில்லை. ஆனாலும் தனியான படம் விசேட திரையீடுகளில் திரையிடப்பட்ட போது சிலர் படம் பிடிக்கப்பட்ட விதத்தை விரும்பவில்லை. டெல்லியைச் சேர்ந்த செல்வந்தர் ஒருவரின் மகளும் மனைவியும் இடையில் எழுந்து சென்று விட்டார்கள். காரணம் சமூக அமைப்பை குழப்ப இந்தப் படம் முயல்வதாக. 'அரிஜன மக்களை இந்தப் படம் பெருமைப்படுத்துகிறது. இதனால் அவர்கள் மேலும் வன்முறையில் ஈடுபடலாம்' என்று அந்த மனைவி கூறினாராம்.

ஆனால் படத்தில் வன்முறையுடன் நிர்வாணக் காட்சிகளும் உண்டு. இது இந்தியப் படங்களில் காணாதது. இருந்தாலும் தணிக்கைச் சபை காட்சிகளை வெட்டுவதை தான் ஏற்றுக் கொள்ள மாட்டேன் என்கிறார் இயக்குனர் கபூர். 'ஒன்றில் அவர்கள் ஏற்றுக் கொள்கிறார்கள், அல்லது தடை செய்வார்கள்' என்கிறார் அவர்.

படத்தில் பூலான் மயிரில் பிடித்து இழுக்கப்பட்டு, இரக்கமில்லாமல் அடிக்கப்பட்டு பின்னர் உயர்ஜாதியினர் பலரால் கற்பழிக்கப்படுகிறார்.

அந்தக் காட்சிகள் எல்லாம் உண்மை என்கிறார் கதையை எழுதிய மாலா சென். இவர் பூலான் தேவிக்கு நெருக்கமானவர்.

பூலான் பதினொரு வயதாக இருக்கும் போது அவரது பெற்றோர் அவரை ஒரு சைக்கிளுக்காகவும் நோய் பிடித்த பசுவுக்காகவும் அவரை மணமகளாக விற்றார்கள். கணவனால் அவர் முதன் முறையாகக் கற்பழிக்கப்பட்டார். கணவனின் கொடுமை தாங்காது ஓடிப் போன அவளை சண்டியர் கூட்டமும் பொலிசாரும் கற்பழிக்கிறார்கள்.

ஒரு கட்டத்தில் பூலான் கைகளும் கால்களும் கட்டப்பட்ட நிலையில் இழுத்துச் செல்லப்பட்டு ஒரு சண்டியர் கூட்டத் தலைவனால் அவனது கூட்டத்தின் முன்னிலையில் பகிரங்கமாக கற்பழிக்கப்படுகிறார்கள். இந்த வன்முறையைத் தாங்க முடியாத ஒருவன் தன் தலைவனைச் சுட்டுக் கொல்கிறான். கற்பழித்த நிலையிலேயே அவள் மேலேயே அவன் இறந்து போகிறான்.

இதன் பின்னர் பூலானைக் காப்பாற்றியவன் அவள் காதலனாக மாறி அவளுக்கு சுடப் பழக்குகிறான். இவன் பூலானைப் போன்றே வள்ளம் ஓட்டிப் பிழைக்கும் மல்லா சமூகத்தைச் சேர்ந்தவன்.

பூலானின் காதலனை உயர்ஜாதியினர் கொன்ற பின்னர் அவளை இழுத்துச் சென்று கற்பழித்தனர். அவளால் தன்னை எத்தனை பேர் கற்பழித்தார்கள் என்று ஞாபகம் வைக்க முடியாத அளவுக்கு அதிகமானவர்கள்.

கற்பழிப்பதற்காகவே அவளை உயிரோடு வைத்திருந்தார்கள் என்கிறார் மாலா சென். 1983ல் பூலான் சரணடைந்த போது அவரைச் சந்தித்தவர் சென்.

அவளை நிர்வாணமாக ஊரில் உள்ள கிணற்றில் நீர் அள்ள வைத்தார்கள். தன்னை கற்பழித்த கூட்டத்திற்கு தலைமை தாங்கிய சிறி ராம், லாலா ராம் என்ற சகோதரர்களை அவள் மறக்கவில்லை. தனக்கென ஒரு கூட்டத்தை உருவாக்கி தன்னை கற்பழித்த கிராமத்தில் பதினெட்டுப் பேரைக் கொன்றாள். காரணம், அந்த சகோதரர்கள் எங்கே என்று அவள் சொல்லவில்லை என்பதற்காக.

பின்னர் பொலிசார் அவளைத் தேடி வலைவீசி, இறுதியில் பூலான் சரணடைகிறாள்.

பூலான் இன்னமும் படத்தைப் பார்க்கவில்லை. எப்படியோ அவர் பார்க்கப் போகிறார். அவாது உணர்வுகள் எப்படி இருக்குமோ என்கிறார் தயாரிப்பாளர் பேடி.

பூலானை விடுதலை செய்ததற்காக அவளது கிராமத்தைச் சேர்ந்த தக்கூர் இனத்தவர்கள் ஆட்சேபம் தெரிவித்து அவளுக்கு மரண தண்டனை வழங்கப்பட வேண்டும் என்று கோருகின்றனர். தற்போது தப்பி வாழ்கின்ற லாலா ராம் எப்படியாவது பூலானைப் பழிவாங்குவதாக சபதமிட்டுள்ளார்.

ஒரு குண்டினால் பலியாவதையிட்டு பூலான் கவலை கொள்ளவில்லை. தன்னை உயிரோடு பிடிக்கக் கூடாது என்பது தான் அவளது கவலை.

இந்தப் படம் பல்வேறு

13 ம் பக்கம் பார்க்க..



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


நகரின் மத்தியில் தனித்துவமான
ஓர் உணவுச் சேவை

# UNIQUE CATERERS

Caterers of Sri Lankan, West Indian,
Chinese and Canadian Cuisine

31 PASSMORE AVE, UNIT 16
SCARBOROUGH, ONT M1V 4T8
TEL:(416) 292 3535

திருமண வைபவங்கள்,
பிறந்த நாள் விழாக்கள் போன்ற
அனைத்து வைபவங்களுக்கும்
சகல விதமான உணவு
வகைகளும் முழுச் சேவையுடன்
தரத்துடன் வழங்குகிறார்கள்

**Other Services:**
Party Hall Arrangement
Linen, Flower Arrangements
Cutlery, Warmers
D.J Service, Bartenders
Uniform staff, Decorations

Food Prepared By Qualified Chefs
Experienced in All Kind of Foods
Trade & Vendor Inquires Welcome

Give Us A Call
We Will Look After All Your Party
& Other Unique Needs

**Contact:**
Herlyn Selvanayagam
416-299-3203
Merlyn Selvanayagam
416-498-7481

**Our Specialities:**

**Sri Lankan Style:**
Rice Curries (Veg & Non Veg)
All kinds of Buriyani, Fried Rice
Kothu Rotti, String hoppers

**West Indian Style:**
All kinds of Fried Rice
Roti & Curry, Dhal Puri

**Also Canadian & Chinese dishes**
Deserts: Your Choice
We also equipped to supply
10-1000 pieces of Short eats
(Appetizers) patties, Rolls, Cutlets etc



# NATIONWIDE CONSULTANTS

AUT O INSURANCE
ACCIDENT CASES
REJECTED CASES
LOW PAYMENT
MUL TI CAR DISCOUNT
INSURANCE FOR
YOUNG DRIVERS
All TRAFFIC TICKETS

உங்கள் அனைத்து காப்புறுதி
தேவைகளுக்கும், வாகன
போக்குவரத்து சட்ட மீறல்
டிக்கட்டுக்களுக்கும் எங்களை
நாடுங்கள்

விசாக்கள் பெறுவதில் சிரமமா?
குறிப்பாக இந்திய விசா
பெறுவதில் தாமதமா?
அகதிக் கோரிக்கை
நிராகரிக்கப்பட்டதா?
சகல குடிவரவு விசாரணை
தேவைகளுக்கும் தொடர்பு
கொள்ளுங்கள்

Visitor Visas
Refugee Claims
Rejected Cases
Business Visa
Assisted Classes

CALL
SHAN
321 1311
740-SHAN
BY APPOINTMENTS ONLY




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சந்திரிக்காவின் தீர்வு: ஒரு புதிய கனவு

**இலங்கை இனப்பிரச்சனைக்கு அரசியல் அல்லது இராணுவ தீர்வு இல்லை எனலாம். அதற்கு ஒரு ஓய்வே கிடைக்கும். ஏனைய யுத்தங்கள் போலவே இந்த ஓய்வும் அமையும். ஓய்வு தோன்றுவதை யாரும் தடைசெய்ய முடியாது. ஏனெனில் ஓய்வானது யுத்த காரணிகள் சலிப்புற்ற நிலையிலேயே தோன்றும் அவ்வாறான யுத்த ஓய்வும் அண்மையில் ஏற்படப்போவது இல்லை.**

மீண்டும் ஒருமுறை "தீர்வு" வரப்போகிறது என்ற கனவு ஒன்று தோன்றியுள்ளது. இக்கனவு ஒன்றும் புதிதல்ல. முன்னரும் பல தடவைகள் இவ்வகை கனவுகள் தோன்றி பின் நடைமுறைப்படாமல் கலைந்து போயின. இப்போ மீண்டும் ஒருமுறை 'கனவு சந்திரிக்கா' தோன்றியுள்ளது. மொத்தத்தில் இந்த 'கனவு சந்திரிக்காவும்" இன்னொரு கனவு, இதுவும் சீக்கிரம் கலைந்து போகும்.

'கனவு வட்டமேசை மகாநாடு' 'கனவு சர்வகட்சி மகாநாடு' 'கனவு இலங்கை, இந்திய ஒப்பந்தம்' 'கனவு பிரேமதாசா' இப்படி பல கனவுகள்.. இவை எல்லாம் ஒரே 'அறிக்கை' நோக்கை நோக்கை கொண்டிருந்தன. அந்த நோக்கு: இனப்பிரச்சனைக்கு 'தீர்வு' தேடல் இங்கேயுள்ள 'அறிக்கை'க்கும் 'தீர்வு'க்கும் இடையில் பலத்த ஒற்றுமை உண்டு. முன்னதின் உள்ளடக்கம்பொய், அதனால் பின்னது சாத்தியம் அற்று போயுள்ளது. அதாவது தீர்வு காணலில் சம்பந்தப்படுவோர் விடுக்கும் அறிக்கைகளின் உள்ளடங்கல் அவர்களின் உள்ளக்கிடக்கைகட்கு நேர்மாறானவை, அதனால் தீர்வு என்றைக்குமே சாத்தியம் இல்லை. அப்படியாயின் இலங்கையின் இரத்த ஆறு ஓயாதா?....

வியட்நாம் போர் பலருக்கு தெரியும். ஒரு காலத்தில் அங்கு இரத்த ஆறு பெருக்கெடுத்து ஓடியது. இப்போ அங்கு அப்படி இல்லை இப்போ வியட்நாம் இரத்த ஆறு ஓடும் நாடுகளின் பட்டியலில் இல்லை.

வளைகுடா போர் இன்னொரு உதாரணம். இங்கு குறிப்பிடப்படுவது ஈரான்–ஈராக். பின் நாளில் நடைபெற்ற ஈராக்–குவைத் விவகாரம் அல்ல. இந்த யுத்தத்தில் ஏவுகணைகள் மிகமிக சாதாரணமாக பாவிக்கப்பட்டன. இங்கேயும் இரத்த சுற்றோட்டத்திற்கு குறைவு இருந்திருக்கவில்லை.

இன்னுமோர் உதாரணம் ஆப்கானிஸ்தான் யுத்தம்.. இங்கு யுத்தவிமானங்கள்கூட காகங்கள் சுட்டு வீழ்த்தப்படுவதுபோல் சுட்டு வீழ்த்தப்பட்டன. இங்கும் ஒரு காலத்தில் இரத்த ஆறு கரை புரண்டு ஓடியது.. இப்போதும் அது முற்றாக வற்றிவிடவில்லை. ஆனாலும் இப்போது அது ஒரு சிற்றாறு அல்லது சிற்றருவிதான்.

கம்போடிய யுத்தமும் இன்னொரு உதாரணமாகலாம். இங்கும் இரத்த ஆறு தாண்டவமாடியிருந்தது. இங்கு மொத்த நாட்டின் சனத்தொகையின் 1/6 பங்கு யுத்தத்திற்கு பலியாகியிருந்தது. (இலங்கையின் சனத்தொகையின் 1/6 பங்கு சுமார் 3 மில்லியன்கள் ஆகும்.)

இந்த யுத்தங்கட்கும் இலங்கை யுத்தத்திற்கும் என்ன தொடர்பு?.... நீங்கள், தமிழர் இலங்கை யுத்தத்தின் ஒரு தரப்பு ஆக இருப்பதால் மேற்கூறிய நாடுகளில் இருந்து இலங்கையை விலக்கி விடுவோம். இலங்கையை உள்ளடக்கியவரை நீங்கள் இப்பிரச்சினை தொடர்பாக ஒரு மூன்றும் நபரின் பார்வையைக் கொண்டிருக்க முடியாது. உங்களின் பார்வை ஒருபக்க சார்பானதாக அமையலாம். ஏனைய நாடுகளை மட்டும் கருதும்போது நீங்கள் மூன்றும் நபர் ஆகுகிறீர்கள்.

இலங்கை தவிர்ந்த ஏனைய நாடுகளின் யுத்தக் காரணி ஒன்றே.. இது மேலெழுந்தவாரியாக பார்க்கும் போது தெரியாது. சம்பவ காரணிகளும் வேறுபட்டே தெரியும் சற்று ஆழமாக நோக்கின் மட்டுமே உண்மை காரணிகள் ஒன்று என்பது புரியும். அவ் உண்மை காரணிகளை தேடுவது எமது தற்போதையை நோக்கம் அல்ல. பதிலாக யுத்தம் நிறுத்தும் முயற்சிகளையே நாம் இங்கு நோக்குவோம்.

மேற்கூறிய எல்லா யுத்தங்களின் போதும் அவற்றை நிறுத்துவற்கான அதாவது தீர்வுகளை நாடிய நடவடிக்கைகள் நடைபெற்று இருந்திருந்தன. ஆனாலும் அவை தீர்வை எட்டியிருந்திருக்கவில்லை. இங்கு எல்லாம் 'தீர்வு'கட்கு பதிலாக 'ஓய்வு'களே கிடைத்திருந்தன.

தீர்வு கிடைக்க வேண்டுமாயின் சம்பந்தப்பட்ட தரப்புகளில் குறைந்தது ஒரு தரப்பாவது உண்மையில், மனப்பூர்வமாக தீர்வை நாடி செயல்படவேண்டும். இருதரப்பும் மனப்பூர்வமாக செயல்படவேண்டும் என்ற அவசியம் இல்லை. ஆனால் மேற்கூறிய உதாரணங்களில் அறிக்கைகள் மட்டுமே தீர்வை நாடல் என்ற கருத்தை கொண்டிருந்தன. உள்மன நோக்கு முற்றாக மாறுபட்டு இருந்திருந்தன. அறிக்கைகள் நடைமுறை விளையுளைக்கொடுக்காது, பதிலாக உள்ளடக்கிடக்கைகளை நடைமுறை விளையுளை உருவாக்கும். அதனால் மேற்கூறிய உதாரணங்களில் தீர்வுக்கு பதில் ஓய்வே கிடைத்தன.

தீர்வுக்கும், ஓய்வுக்கும் பாரிய வேறுபாடு உண்டு. தீர்வு சம்பந்தப்பட்டவர்களால் அல்லது சம்பந்தப்பட்டவர்கள் மூலமாக தோற்றுவிக்கப்படுவது. அதே வேளை ஓய்வு தானாக தோன்றுவது ஓய்வு அகிம்சையின் தோற்றப்பாடு அல்ல. இது ஒரு இம்சையின் தோல்வியின் வெளிப்பாடே ..இங்கு இறுதிவரை அகிம்சைகள் சாத்தியப்படக்கூடிய அல்லது நடைமுறைப்படக்கூடிய தீர்வுகளை கொடுக்கும் வலு அற்று இருக்கும். இம்சையின் தோல்வி மட்டுமே ஓய்வின் காரணியாக அமையும்.

உதாரணமாக ஈரான் ஈராக்

**இளவழகன்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யுத்தத்தை எடுத்துக் கொள்வோம் அவர்கள் யுத்தமுறும்போது பல மனித நேயங்கள் கெஞ்சிக் கேட்டன.. யுத்தத்தை நிறுத்துமாறு! ஆனால் யுத்தமுற்ற இரு தரப்பும் முட்டி முட்டி மோதின.

தமது நோக்கங்களை அடையும்வரை யுத்தமுறப்போவதாக கூறி மோதின. இன்று அங்கு யுத்தம் இல்லை. அவ்வாறானால் அவர்கள் தமது இலக்குகளை அடைந்தனரா? உண்மையில் இல்லை என்பதே உண்மை. அத்துடன் இங்கு அவர்கள் அறிக்கைகளில் கூறிய நோக்குகள் அல்ல அவர்களின் உண்மையான நோக்குகள் என்பதுவும் குறிப்பிடத்தக்கது. எப்படியாயினும் அவர்கள் தரப்பில் நோக்குகள் இருந்தன. அவை அடையப்படவில்லை.

ஆரம்பத்தில் இவர்கள் குளுகுளுப்பாக போரிட்டாலும் நாளடைவில் இயலாமை தோன்றின அவற்றை அவர்கள் காட்டிக் கொள்ளவில்லை. காட்டிக்கொடுத்தால் தமது இயலாமையை அறிந்த எதிரி தம்மை முற்றாக அழித்து விடுவானே என்ற பயம். உண்மையில் இருதரப்புமே இந்நிலையை அடைத்து இருந்தன. இயற்கையாக சந்தர்ப்பம் கிடைத்தபோது ஓய்வு கிடைத்தது. இந்த ஓய்விற்கு எந்தவொரு மனித நேயமும் காரணமாக இருந்திருக்க வில்லை. பதிலாக இம்சையின் தோல்வியால் ஏற்பட்ட ஓய்வே.

இலங்கை பிரச்சனைக்கான தீர்வு தேடலும் இவ்வகையில் ஒன்றே. தீர்வு தேடுபவர்களின் உள்ளக்கிடக்கை அவர்களின் அறிக்கைகளின் உள்ளடக்கத்தின் நேர்மாறுகளே! இவ்விரு தரப்புகளாலும் பிரதிநித்துவப படுத்தப்படும் மக்கள் தமிழர், சிங்களம் ஒரு மந்தைதான். பின் அதை அடக்க இராணுவ இனக்கலவர யுக்திகள் துணைபோன சிங்களம் மீண்டும் மந்தைதான்.....

இந்த மந்தைகள் தொடர்ந்தும் மந்தைகளாக இருப்பதற்கு அவர்கள் சார்ந்த பத்திரிகைகளே காரணம். இவை மந்தைகளை வழிநடாத்தும் மந்தைகள். சிறந்த நாடுகளின் சிறப்புக்கும் பாழ்பட்ட நாடுகளின் பாழ் படுகைகட்கும் இந்த பத்திரிகை துறையே முதல் காரணி. முன்னதில் அவை பெருமைக்குரியன, பின்னதில்

> இந்த மக்கள் தொடர்ந்தும் மந்தைகளாக இருப்பதற்கு அவர்கள் சார்ந்த பத்திரிகைகளே காரணம். இவை மந்தைகளை வழிநடாத்தும் மந்தைகள். சிறந்த நாடுகளின் சிறப்புக்கும் பாழ்பட்ட நாடுகளின் பாழ் படுகைகட்கும் இந்த பத்திரிகை துறையே முதல் காரணி. முன்னதில் அவை பெருமைக்குரியன, பின்னதில் அவை சிறுமைக்குரியன.

அவை சிறுமைக்குரியன.

இப்போது சந்திரிக்காவின் தோற்றம் மீண்டும் ஒரு கனவை தோற்றுவிக்கிறது பாராளுமன்றத்தில் ஒரு பெரும்பான்மையை கொண்டிருந்த ஜே.ஆரே எதையும் செய்து இருந்திருக்கவில்லை. இந்நிலையில் இச்சிறுபெண் எம்மாத்திரம்? ஆட்சி அமைக்கக்கூட பிறரின் உதவி நாடும் இவர் ஆட்சியை தொடர்ந்து தக்கவைப்பதே சந்தேகம்தான்.

ஐ.தே.க. ஒன்றும் படுதோல்வியை அடைந்து விடவில்லை. ஒரு பின்தள்ளலையே அடைந்துள்ளது. 17 வருட சலிப்பு ஜேவிபி கால கொடுமைகளை கணக்கிடும்போது இவர்கள் மீதான பின் தள்ளல்கூட மிக குறைவானதாகவே உள்ளது. சந்திரிக்கா ஒருவகையில் தீர்வு நாடின் அப்போது நாம் 17 வருடங்களாக கட்டிக்காத்த நமது நாட்டை இவர் துண்டாடுகிறார் என்று ஐ.தே.க. கூக்குரல் இட்டால் போதும்.. மந்தைகள் பாதை மாறும். ஐ.தே.க. மீண்டும் பலம் பெறும்.

கொசுறு கட்சிகள் பலம்பெற்று இருப்பதால் ஒவ்வொரு சட்டவாக்கத்திற்கும் சந்திரிக்கா அவர்களின் காலில் விழவேண்டும் இதுவே நம் நாடுகளின் பண்பு. இங்கு நம்நாடுகள் என்பது மூன்றாம் உலக நாடுகள் அல்லது மூன்றாம் தரத்து நாடுகள். ஆகமொத்தத்தில் இலங்கை இனப்பிரச்சனைக்கு அரசியல் அல்லது இராணுவ தீர்வு இல்லை எனலாம். அதற்கு ஒரு ஓய்வே கிடைக்கும். ஏனைய யுத்தங்கள் போலவே இந்த ஓய்வும் அமையும். ஓய்வு தோன்றுவதை யாரும் தடைசெய்ய முடியாது. ஏனெனில் ஓய்வானது யுத்த காரணிகள் சலிப்புற்ற நிலையிலேயே தோன்றும் அவ்வாறான யுத்த ஓய்வும் அண்மையில் ஏற்படப்போவது இல்லை. 1987-1990 களே யுத்தத்தின் உச்சமாக இருந்திருக்கும். அரசியல் யுத்தகாலம், ஆயுத யுத்தகாலம் இரண்டையும் கருத்தில் கொண்டால் மேலும் 5-10 வருடங்களுக்குள் யுத்தம் ஓயும். தீர்வு இல்லை. (இது ஒன்றும் பரிசோதனைகூட முடிவல்ல)

சம்பந்தப்பட்டவர்களின் மனநிலையை அடிப்படையாக கொண்டே சொல்லப்படுகிறது இப்படித்தான் நடக்கும் என்று கருதினாலும் அவ்வாறு நடக்கக்கூடாது என்பதே எமது அவா. தீர்வு கிட்டவேண்டும் அதில் யாரும் தோற்றவர்களாக கருதப்படக்கூடாது. பதிலாக எல்லாரும் நடந்ததை மறந்து நிம்மதியாக வாழ சந்தர்ப்பம் கிடைக்க வேண்டும். இது சம்பந்தப்பட்டவர் களின் மனங்களில் திடீர் மாற்றம் ஏற்பட்டாலே சாத்தியம். எமக்கு வேண்டியதெல்லாம் அவ்வகை மாற்றமே. அல்லாவிடின் இயற்கை ஓய்வுவரை பொறுத்திருப்போம், இழப்புகளை தாண்டி செல்வோம்.

# பூலான்தேவி..

திரைப்பட விழாக்களில் திரையிடப்பட்டிருக்கிறது. சமீபத்தில் எடின்பேர்க் படவிழாவில் திரையிடப்பட்ட போது 'இந்த படம் மிகவும் அதிர்ச்சி தருவது. இந்தப் படம் காண்பிக்கப்பட்ட போது பலர் வெளிநடப்புச் செய்திருக்கிறார்கள், நீங்களும் அப்படி செய்தால் அது விளங்கிக் கொள்ளக்கூடியது' என்றார் இயக்குனர் சேகர் கபூர். யாரும் வெளியேறவில்லை. பலர் அதிர்ச்சியடைந்திருந்தார்கள்.

பலர் இந்தப் படத்தை இந்தியாவின் காண்பிப்பதை விரும்பவில்லை. உயர்ஜாதியைச் சேர்ந்த பலர் இதை தடை செய்ய விரும்புகிறார்கள் என்கிறார் சேகர்.

நகரத்தில் வளர்ந்த தனக்கு கிராமப்புறங்களில் உள்ள சாதி முறை விளங்கவில்லை என்கிறார். இந்தப் படம் தயாரித்த போதே பல உண்மைகளை விளங்கக் கூடியதாக இருந்தது என்கிறார் அவர். 'சாதி முறை மதத்தினால் அமைக்கப்பட்டது. மக்கள் தங்கள் பிறப்பினால் ஏற்பட்ட சாதிமுறையை கண்மூடித்தனமாக

29 ம் பக்கம் பார்க்க.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நல்லதொரு தொடக்கம்

## சிதம்பரம் ஞா.வடிவேலனுர்

அந்தக் கிறுக்கி செய்த வேலே என்ஜே எங்கோ செல்ல வைத்துவிட்டது. எங்கோ இல்லே, அவளின் அதனுள் சென்று விட்டேன். ஆம் என்ன இலகுவாக இருக்கின்றது. பெண்ணின் இரகசியம் என்று சொல்கிருர்களே! அது ஒன்றும் அப்படிப் பெரிய கடினமாய்ப் படவில்லே எனக்கு. ஒரு சின்னத் துண்டில் இவ்வளவு பெரிய அமாநுச சக்தி. ஏன் அவள் அதை முன்பே காட்டவில்லே. இவ்வளவு நாளும் இது அவளிடம்தானே ஒளித்திருந்தது. ஆ! ஆ! ஆ! என்ன சுகம் அது தந்த இன்பம் இருக்கிறதே உண்மையில் பரமானந்தம் அந்தக் கிறுக்கி ஒரு சின்னத்துண்டில் சிவத்தப் பென் கொண்டு எனக்கு ஓர் கடிதம் முதல் முதலாக எழுதியிருந்தாள். எழுதவில்லே. அவள் கிறுக்கியிருந்தாள்.

...........மைந்தன்!

எதிர்வரும் ஆகஸ்ட் 28ம்திகதி G.C.E. A/L பரீட்சை படிப்பில் கவனம் செலுத்தவும் வேறெதிலும் கவனம் செலுத்தவேண்டாம்.

இப்படிக்கு M.B.B.S

இதுதான் அந்த கிறுக்கி எழுதிய சின்னத்துண்டு. ஆம் அவளின் உள்ளத்து உவகை. நல்ல கையெழுத்துடையவள் ஏன் இதை கிறுக்கி கிறுக்கி எழுதினவள்? சிவத்தப் பென் கொண்டு ஏன் எழுதினவள்? அபாயம் எல்லாம் சிவப்பா? குங்குமமும் சிகப்புத்தானே!

தன் வீட்டாருக்கு யாருடைய எழுத்தெண்டு தெரியாமலிருக்கவா அல்லது என் வீட்டாருக்கு தெரியாமல் இருக்கவா?

அழகு கொள்ளே. மூக்கு நூல்பிரமாணம் சறுகவில்லே. உடல் வாகு எல்லாம் அந்தந்த மாதிரி. இத்தனேக்கும் அவளுக்கு வயது பதினேந்து. அவளுடைய கதை அதை காட்டிக் கொடுக்கும்.

புத்தி சொல்வதிலே கெட்டிக்காரி. என்னேப் படிக்கட்டாம். முளிர்தயர் பிசைந்து இவளின் காந்தள் கரங்களால் உணவு தருவாள். இவளுக்கு உயிர்த்தவம் சிறிது காமந்தான் பெரிது. அந்த சின்னத்துண்டுக் காகிதத்தை பத்திரப்படுத்திக் கொண்டேன்.

பதில் பார்த்தாள். அடியேன் எழுதவில்லே தைரியம் செத்துவிட்டது. நான் எழுதவில்லே பதில். அவள் பயந்தாள். அந்த சிறு துண்டை நான் என்ன செய்வேனே என்று அவள் பெரியதொரு ஆராட்சியில் இருந்தாள்.

"நான் வாய்ச் சொல்லில வீரரடி" பாரதி சொன்ன ரகம்வந்தாள் அந்த இராஜபுத்திரி.

சொன்னேன், "வார் கொள் முலேயாய்! நீ என்னே மணந்தால் அணேவாய் மகிழ்தென்றேன்."

உடனே அவள் சொன்ஞள், சங்க இலக்கியம் உங்களுக்கு தெரியாது போலும் என்ருள்

ஏன்? என்றேன்.

களவொழுக்கம் என்று ஒன்றிருக்கல்லவா என்ருள். ஏன் தெரியாது மணத்தின்முன் புணர்தல் களவொழுக்கத்தின் பாற்படும் என்றேன்.

அப்ப ஏன் சொன்னனீங்கள் " நீ என்னே மணந்தால் அணேவாய் மகிழ்தென்று"

அவள் கேட்க எனக்கு உடம்பு சூடு கண்டு கணகணப்பாய் ஆகிவிட்டது.

மணந்தால் தானே நீ என் மனேவியென்றேன்.

அப்ப இப்ப என்னவாம் என்ருள்

"யானும் நீயும் யாராகினரோ" என்றேன்.

இந்த முனிவர்களின் எடுப்பில் பதில் சொன்ஞல் பிடிக்காது என்ருள்.

உனக்கும் முனிவர்களின் கூத்து தெரியும் போலும் என்றேன்.

ஏன் தெரியாது? காட்டுக்கு ஓடுவார்கள் கன்னி பராசக்தி, வடிவாம்பிகை வா வா என்று கொட்டையை உருட்டுவார்கள். மெய் மறந்து கண்ணே மூடுவார்கள் என்ருள்.

என்ன நாயே! சொல்லிற நான் சொன்ஞல் அடுக்கும் நீ சொல்லலாமா இப்படி என்றேன்.

அதற்கு அவள், நான் சொன்னது உருத்திராச்ச கொட்டை என்ருள்.

அதற்கு நான் நீயும் இலக்கியப் பெண்ணுயிற்றே என்றேன்.

கலகலத்தாள், ஏன் இலக்கியமும் இலக்கியமும் சேர்ந்து நல்ல இலக்கியம் படைக்கலாமே என்ருள். நான் சொன்னேன் இப்போ இலக்கியம் பிறந்தால் நமக்கு கேடு. திருமணத்தின் பின்தான் அந்த யோசனே என்றேன்.

உங்களுக்குத்தான் எப்பவும் இந்த யோசனே? நீங்கள் களவொழுக்கமே வேண்டாம் என்றதும் அந்தக் கதையையே விட்டுட்டனே! நான் சொன்னது உண்மை இலக்கியத்தை என்ருள்.

ஆண்களின் மனம் சலசலத்தது தெரியாதா தேன் ஊறும் வாயாள் என்றேன்.

அப்படிச் சொல்லாதையுங்கள் என்ருள்

எப்படி என்றேன்

தேனூறும் வாயாள் அப்படியெண்டாள்

ஏன் உனக்கு பிடிக்கேலயா என்றேன்

பிடிக்கும் பிடிக்கும் ஆஞ?

என்ன ஆஞ, ஆவன்ஞ

நீங்கள் ஒரு நாளும் என் அதரபானம் பருகேலயே, பிறகு எப்படி அப்படி சொல்லுவீங்க என்ருள். ஏன் நான் முந்தி உன்தன் அதரபானம் பருகியிருக்கின்றேனே! எப்ப பருகினீங்க சொல்லுங்க ?

எடியே நான் சின்னக் குழந்தையாக இருக்கேக்க எங்கட அம்மாவில தாய்பால் குறைவு. அதால உங்கட அம்மாவில நீ குடிச்சிட்டு விடுற மிச்சப்பால நான் குடிக்கிறனன். அப்பொழுது தான் தேன் ஊறும் வாய் உனக்கெண்டு கண்டனன்

"ஐயோ! எப்பவும் உங்களுக்கு குப்பைக் கதை தான் போங்க அங்கால.

போகட்டா ! போகட்டா!!

ஈ..ஈ....ம் ம் ம்.....

ஏன் நீ சிணுங்கிற, ஊடுதல் காமத்துக்கு இன்பம்.

ஆ! மச்சான் அதற்கின்பம் கூடி முயங்கப் பெறின்.

அப்ப புதிய ஒரு இலக்கியப் பாத்திரம் சமைப்போமா?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# GOOD BYE BALDNESS




இந்த சிவப்பு நிறக் கிழங்கு இரத்த ஓட்டத்தை கூட்டுவதன் மூலம் மயிர் கொட்டுவதைக் குறைத்து புதிய மயிர் வளர்வதற்கு உதவுகிறது. தலைமயிர் உதிர்வது பரம்பரையானது அல்ல. ஆண்களின் உடலில் தெஸ்தஸ்தரோன் அதிகமாகச் சுரப்பதால் இரத்த ஓட்டம் குறைகிறது. பெண்களில் அழுத்தம் காரணமாக இரத்த ஓட்டம் குறைகிறது. இருபது வருட ஆராய்ச்சியின் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டு ஐயாயிரம் பேருக்கு மேல் பரீட்சிக்கப்பட்டது இந்த குமிழ்.

## முடி உதிர்பவர்களுக்கு ஒரு நற்செய்தி

**ஒரு சிறு குமிழ் உங்கள் கேசத்தை வளரச் செய்கிறது**

239 Carlton St
Toronto, Ont
Tel:922-0478

# சிறந்ததையே தெரிவு செய்யுங்கள்!
## Dr.ROBERT VITAMOL, BETTER THAN VIVA HORLICKS




VITAMOL சத்துள்ளதாகவும் மிகுந்த சுவையுள்ளதாகவும் இருப்பதால் விவா ஹோர்லிக்ஸை விட விட்டாமோலை பலர் விரும்புகின்றனர். விட்டாமோல் டாக்டர்.ரொபேட்டினால் தயாரிக்கப் பட்ட சத்துணவுப் பானமாகும். விட்டமின்கள், இரும்புச் சத்து, கல்சியம், தேன் கொண்ட ஒரே சத்துணவுப் பானம் இது. உடலின் சகல பகுதிகளுக்கும் தேவையான உணவு இது. உதாரணமாக கல்சியம் எலும்புக்கு அவசியமானது. விட்டமின்களும் இரும்புச் சத்தும் இரத்தக் குறைபாட்டைத் தடுக்க அவசியமானது. எனவே சிறந்ததைக் கொண்டு உங்கள் உடலுக்கு உணவளியுங்கள். ஒவ்வொரு போத்தல் விட்டாமோலிலும் அதிகம் பெறுங்கள். தரம், அளவு, விலை என்பவற்றை ஒப்பிடுங்கள். தரத்திலும் பெறுமதியிலும் சிறந்த விட்டாமோலைக் கேட்டு வாங்குங்கள். விட்டாமோல் குழந்தைகளுக்கும் வயதானவர்களுக்கும் பரிந்துரை செய்யப்படுகிறது.




### NERVOGEN NERVE FOOD


உடலின் கடுமையாக உழைக்கும் பகுதிகளான மூளை, சிறுநீரகம், ஈரல், இதயம் போன்றவற்றிற்கு சிறந்தது. சனட்டோஜனை விட சிறந்த புரதத்தைக் கொண்டிருப்பதுடன் சுவையானதும் கூட சிறந்த மண வளர்ச்சிக்கு கேட்டு வாங்குங்கள்.

அமெரிக்காவிலும், கனடாவிலும் மேற்கிந்திய தீவுகளிலும் கிடைக்கும்.
Universal Foods & Merchandise Co,
(416) 535-3118, Toronto, Canada




### CHATAK: CURRY EXCELLENT

Chatak Madras Curry Powder இன்றைய நிலையில் சிறந்த கறி பவுடராகும். 475 வருட காலமாக வரும் பாரம்பரியப்படி தயாரிக்கப்பட்டது. மற்ற கறி பவுடர்களை விடச் சிறந்தது. Chatak Meat Seasoning, Fish Seasoning, Tandoori Chicken Mix போன்றனவும் கிடைக்கும்.




### DR.ROBERT'S GLUCOSE

குளுக்கோஸ் மரக்கறிகளிலும் பழங்களிலும் இயற்கையாகக் கிடைக்கிறது. டாக்டர் ரொபேட்டின் குளுக்கோஸ் இயற்கையான மூலப்பொருட்களிலிருந்து அதிஉயர் தரத்திற்கு தூய்மைப்படுத்திப் பெறப்பட்டது. இது உடனடியான சக்தித் தேவைகளுக்குரியது. மூளை, இரத்தம், ஈரல், தசைகள் போன்றவற்றிற்கு சிறந்தது. பால் குடிக்கும் குழந்தைகளுக்கும் வயதானவர்களுக்கும் சிறந்தது, ஏனெனில் இது உடலினால் உடனடியாக உறுஞ்சப்படுகிறது

அன்பளிப்புப் பொருட்கள், பொம்மைகள், இலங்கை உணவுப் பொருட்கள், மேற்குறிப்பிட்ட பொருட்கள் அனைத்திற்கும் தொடர்பு கொள்ளுங்கள்

BUDGET SUPERSAVINGS DISCOUNT
1340 Queen st west (East of lansdowne)
Tel:(416) 5370394

www.tamilarangam.net

# சோதிட அரங்கத்தில் ஓரங்க நாடகம்

## சிவப்பிரகாசம்

நீண்ட நாளாக ஒரு ஆசை. மாறுதலுக்காக தாயகத்தில் ஒருமுறையாவது சோதிடம் பற்றிய கேள்வி பதில் ஒன்றை எழுத வேண்டும் என்று. நான் பதில் கொடுக்கத் துடித்துக் கொண்டிருக்கிறேன். ஆனால் கேள்வி கேட்க ஆளில்லாமல் போய்விட்டது.

ஒன்று செய்தால் என்ன? நானே யாரேனும் பெயரில் கேள்வியையும் எழுதிப் பதிலையும் எழுதினால் யார் கண்டுபிடிக்கப் போகிறார்கள் என்று எண்ணம் உதித்தது. ஏற்கெனவே யாராவது இப்படிச் செய்திருப்பார்கள் என நான் நினைக்கவில்லை. இந்தப் புதுமுறையை தமிழ் மக்களுக்கு அறிமுகம் செய்து வைக்கப்போவது நான்தான் என்று மனதில் பெருமித அலை பாயத்தொடங்கிவிட்டது. ஹா. இவன் கிணற்றுத் தவளை . நாம் ஏற்கெனவே அந்த விஷயத்தில் பழமும் திண்டு கொட்டையும்போட்டாச்சு என சிலர் சொல்ல நினைக்கலாம். அப்படியானால் பரவாயில்லை. அந்தப் புகழ் அவர்களுக்கே ஆகட்டும். சோதிடம் பற்றிய கேள்விகளை எழுதியாச்சு. பதில் எழுத வெளிக்கிட்டால் பதில் தெரியவில்லை. அப்படி வெளிப்படையாகச் சொல்லவும் மனம் விரும்பவில்லை. கௌரவப் பிரச்சனை. கீழே நான் எழுதும் பதில்களில் (சமாளிப்புகள்) இருப்பின் விஷயம் எனக்குத் தெரியாது என்பது உள்ளிடை மலை.( உள்ளிடை மலை என்பது வெள்ளிடை மலைக்கு எதிர்ச் சொல். ஏற்கெனவே அந்தச் சொல் இல்லாவிடில் புதிதாக உருவாக்கப்பட்டது என நினைத்துக் கொள்க). பதில் 'அப்படி இப்படி'யாக இருப்பின் விஷயம் அறிந்தவர்களிடம் வினாவிக் கொள்க. மீண்டும் ஞாபகப்படுத்துகிறேன் . இது ஒரு நாடகம்தான்.

✪ ✪ ✪

கேள்வி 1 : தற்போது பிரஸ்தாபிக்கப்படும் விரத விதி(?)ப்படி எப்போதாயினும் ஒருமுறை ஸ்காபரோவுக்கு ஒருநாளும் மிசிசாகாவுக்கு வேறொருநாளும் ஆடிஅமாவாசை- வருஷப்பிறப்பு-மற்ற விரதங்கள் எல்லாமே மாறி வரும் சந்தர்ப்பம் உள்ளது. இச்சந்தர்பத்தில ஸ்காபரோவில் இருந்து மிசிசாவுக்கு இரவு செக்கியூறிற்றி வேலை செய்யப்போகும் ஒருவர் சிலவேளை இரண்டு நாளும் விரதம் பிடிக்கவேண்டிருக்கும் அல்லது இரண்டு நாட்களிலும் விரதத்தை தவறவிட வேண்டி நேரிடலாமே! தப்பாக விரதத்தை அனுஷ்டிக்கக் கூடாதல்லவா . அப்போது சரியாக எந்தவீதிக்கு ( உதாரணமாக Yonge வீதியா Dufferin வீதியா?) மேற்குப்புறம் உள்ளவர்கள் விரதத்தை முதல்நாள் கைக்கொள்ள வேண்டும் என அறிவிக்கப்படுமா?

பதில் : இது குதர்க்கமான கேள்வி. எப்போதோ ஒருமுறை அருமையாக நடைபெறும் விஷயத்தைப் பெரிது படுத்தாதீர்கள். அபபடியொன்று நடக்கும்போது அதைப்பற்றி யோசிப்போம். இவ்வாறான தப்பான கேள்விகள் இந்துசமயத்துக்கே களங்கம் விளைவிக்கும் விஷமத்தனமானவை.

✪ ✪ ✪

கேள்வி 2 : எனது தங்கையின் ஜாதகத்தைப் பார்த்த சோதிடர்கள் நீண்டகாலம் சந்தோஷமாக தீர்க்க சுமங்கலியாக வாழுவாள் எனக் கூறியுள்ளனர். இனிமேல் பொருத்தம் பார்க்காமல் திருமணம் செய்து கொடுத்தாலும் அவள் சந்தோஷமாக வாழ்வாள்தானே ? ஜாதகப் பலனை திருமணப் பொருத்தம் override பண்ணுமா ?

பதில் : பொருத்தத்தையும் பார்த்து திருமணம் செய்தால் அது double verification தானே! முகூர்த்தமும் நன்றாக அமைந்தால் இன்னும் ஒரு உத்தரவாதம் அல்லவா !. ஒரு சில டாலர்களை செலவிடுவதால் என்ன குறைந்தா போயவிடுவீர்கள். money circulation நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் தேவை தம்பி.

✪ ✪ ✪

கேள்வி 3 : உங்களைப் போன்ற முட்டாள்கள் சோதிடத்துக்கு வக்காலத்து வாங்குவதால்தான் மக்கள் சிந்தனை மழுங்கி குட்டிச்சுவராகிப் போனார்கள். தன்னம்பிக்கையைக்குறைக்கும் இந்த கலை தேவைதானா? இந்தக் கலையால இதுவரை என்ன முன்னேற்றத்தை மக்கள் கண்டுள்ளனர்?

பதில் : சினிமாப் பார்க்கிறீர்கள். அதனால் என்ன முன்னேற்றத்தை நீங்கள் கண்டீர்கள். பொம்மை , பேசும்படத்தில் நடிகையைக் பார்த்து ரசிக்கிறீர்கள். அதனால் என்ன முன்னேற்றம் கண்டீர்கள். ஏதோ மனதுக்கு ஒரு திருப்தி. அதுபோல 'நல்ல பொம்பிளை' கிடைப்பாள் என்று சோதிடர் சொல்ல அந்தச் சந்தோசத்தில் சிலகாலத்தைக் கழிக்கும் அந்த ஆசையில் ஏன் மண் போட நினைக்கீறீர்கள். ஆயுள் நூறு என்று யாரெனும் சொன்னால் அந்த மகிழ்ச்சியிலேயே வருத்தம் எல்லாம் பறந்துவிடும் அல்லவா . Astrology is an inspiration and motivation. இதைப் புரியாத சில சோதிடர்கள் தாம் பிரமதேவன் என்ற நினைப்பில் அப்பாவிகளின் தன்னம்பிக்கையை அகற்ற நினைப்பது அறியாமையின் வெளிப்பாடு.

✪ ✪ ✪

கேள்வி 4 : கம்பியூட்டரில் ஜாதகம் , பஞ்சாங்கம் எல்லாமே வருகிறதாமே.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இது சோதிடம் விஞ்ஞான பூர்வமானது என்பதை நிருபிக்கிறதல்லவா ?

பதில் : மொட்டை நோட்டீசும் கம்பியூட்டரில் இருந்துதான் வருகிறது. அதற்காக ......? . கம்பியூட்டர் மயமாக்கப்பட்டவை எல்லாம் விஞ்ஞானங்களும் அல்ல. கையால் கணிக்கப்படுபவை எல்லாம் பிழையானவையும் அல்ல. எல்லாமே வியாபாரம்தான்.

✪ ✪ ✪

கேள்வி 5: இந்து சோதிடத்தில் பல சித்தாந்தங்கள் இருக்கிறதாம். இவையெல்லாம் மகாரிஷிகளால் ஞானதிருஷ்டியினால் எழுதப் பட்டவையாம். ஆனால் ஒவ்வொரு சித்தாந்தத்தின் படியும் கிரகம் நிற்கும தூரங்கள் வேறுபடுகிறது. அது எப்படி ஞானதிருஷ்டியினால் அளந்தவை வேறுபட்டன ? ஞான திருஷ்டியின் focus length ஒவ்வொரு ரிஷிக்கும் வேறு அளவா?

பதில் : சோதிட சித்தாந்தங்களில் பல ரிஷிகளால் எழுதப்படவில்லை. சிலர் விஷயம் தெரியாத சிலரை ஏமாற்றுவதற்காக எல்லாமே முனிவர்கள் என்று சொல்லித் தப்பித்துவிடுதால்தான் இப்படியான சந்தேகங்கள் பிறக்கின்றன.

✪ ✪ ✪

கேள்வி 6: கனடாவில் செவ்வாய் குற்றம் பார்த்து திருமணம் செய்யவேண்டும் என்ற அவசியம் இல்லையாமே. அதற்கு சோதிடத்தில் சான்றுகள் உண்டா ?

பதில் : உண்டு. கனடாவில மட்டுமல்ல . அண்ணளவாக இருபது பாகை அட்சத்தின் மேல் (தென்னிந்தியாவுக்கு வடக்கில்) உள்ள எந்த இடத்திலும் திருமண விஷயத்தில் செவ்வாயின் தாக்கம் மிகக்குறைவு. இவ்வாறு பல ஆதிகால இந்துசோதிட நூல்களில் அனுமான சாரமாக உள்ளது. அதனால்தான் வடஇந்திய மக்கள் செவ்வாயைப் பற்றி அதிகம் அலட்டிக கொள்வதில்லை. மேலைத்தேச சோதிடமும் அவ்வாறு செவ்வாயின் விளைவு எதனையும் திருமண வாழ்வில் அவதானிக்கவில்லை. இராமர்கூட வடஇந்தியாவில் இருந்து தென்னிந்திய பக்கம் வந்தபோதுதான் செவ்வாயின் ஆதிக்கத்தினால் மனைவியைப் பிரிய நேரிட்டதாம். இலங்கை தென்னிந்தியப் பகுதிகளில் செவ்வாயினால் ஏற்படுவதாகக் கூறப்படும்நோய்களால் பீடிக்கப்பட்ட பலர் மேலைத்தேசங்களில் அல்லது வடநாடுகளில் குடியேறியதும் குணமுற்றுள்ளனர். இவ்வாறு பல ஆதாரங்கள் உண்டு. எனவே கனடாவில் வாழ்பவர்கள் செவ்வாயால் பாதிக்கப்படும் சந்தர்ப்பங்கள் குறைவு.

'செவ்வாயை அலட்சியப்படுத்தி குடும்பங்கள் வாழாவிடில் அந்தப் பொறுப்பை இவர் ஏற்பாரா?' என்று என்னைப் பார்த்துச் சொல்பவரிடம் ஒரு சமரசம். அதாவது செவ்வாய் எல்லாம் கருத்தில் கொண்டு நீவிர் பொருத்தம் பார்த்த குடும்பம் வாழாவிட்டால் அதற்கு உங்களால் பொறுப்பேற்க முடியுமா ?

பார்த்தீர்களா எமது புத்திசாலித்தனத்தை. யாருடையதோ குடும்ப வாழ்க்கையில் எமது சவால்களை விட்டிருக்கிறோம்.

✪ ✪ ✪

கேள்வி 7: அண்மையில் சூரியனில் வந்த கௌசிகரினதும் வாகீசனதும் சோதிடம் சம்பந்தமான பூசல்களை பார்த்தீரா? சோதிடம் பற்றிப் பலரும் சிந்திக்கத்தொடங்கிவிட்டார்கள் என்பதற்கு இது சான்றல்லவா?

பதில் : அல்ல. வியாபாரத்துக்காக சோதிடத்தின் துகில்களைக் களைவதாக நினைத்துக் கொண்டு தம் ஆடைகளையே உருவிக் கொண்டிருக்கிறார்கள். இறுதியில் அம்மணமாக நிற்கப்போவது திச்சயமாகச சோதிடம் அல்ல. நமக்கென்ன ? இரசிக்க முடிந்தால் இரசிப்போம்.

✪ ✪ ✪

கேள்வி 8 : வருஷப்பிறப்பை வைத்துக்கொண்டு அந்த வருஷத்தில் உலகத்தில் என்ன நடக்கும் என்று கூறமுடியுமா ?

பதில் : நியுமரலோஜிப்படி ரொரன்ரோவில் இந்த வருஷம் பிறந்த நாளின் இலக்கப்படி உலகத்தில் என்ன நடக்கும்என்று ஒரு கனடா சோதிடர் எழுதியிருந்தார். ஆனால் இலங்கையில் அதே வருஷம் பிறந்த திகதி மறுநாளாக அமைவதால் நியூமரலோஜிப்படி உலகத்தில் மாறான வேறுவிஷயம் நடக்கப்போகிறது.

இவர்களின் அறிவு எப்படியிருக்கிறது! இனிப் பஞ்சாங்கத்தைப் பாருங்கள். ரொரன்ரோவுக்கு எழுதப்பட்ட பஞ்சாங்கத்தில் வருஷம் பிறந்த நேரத்தின் இலக்கினப்படி தேசத்தில் நடக்கும் என எழுதப்பட்ட விஷயம் அல்பேட்டா என்ற இடத்துக்கு பஞ்சாங்கம் எழுதினால் ஒன்றாக அமையாது. இதற்கெல்லாம் காரணம் பகுப்பாய்வுக் கண்ணோட்டத்துடன் சோதிடத்தை அணுகும் பக்குவம் பலருக்கு இல்லாமைதான்.

✪ ✪ ✪

கேள்வி 9: சோதிடமும் பஞ்சாங்கமும் பிராமணர்களின் ஜாதிச் சொத்தா ? அவர்கள் எழுதுவதில் தவறுகள் கண்டால் அதைச் சுட்டிக்காட்டி எழுதும் சுதந்திரம் மற்ற ஜாதியினருக்கு இல்லையா?

பதில் : சைவ சமயத்தைக் கட்டிக்காத்தவர்கள் அவர்கள்தான். தாம் எத்தனையோ கட்டுப்பட்டுடன் வாழ்ந்து நன்னெறியை எமக்கு நல்கியவர்களும் அவர்கள்தான். அவர்கள் தமது சேவைக்கு பிரதி உபகாரம்கூட எதிர்பார்க்காதவர்கள். அவர்களின் பாதங்களை தொட்டு நமஸ்கரிப்பது தெய்வத்தைத் தொழுவதற்கு ஒப்பாகக் கருதப்பட்டது. அது அன்று. ஆனால் இன்று யாரையா பிராமணர்கள். காசு ஒரு சதம் குறைந்தால்கூட பூசை செய்ய மறுத்துவிடுவார்கள். கோவில் தர்மகர்த்தாவுக்கு காலால் உதைக்கப் போன பிராமணர்கள்கூட உண்டு. அந்த விறுத்தத்தில் ......? கடவுளில் குற்றம் கண்ட நக்கீரரும் உண்டு. பிரமதேவனுக்கே குட்டிய முருகனும் உண்டு. ஜாதிகள் இல்லையடி பாப்பா! குல உயர்ச்சி சொல்லல் பாவம்!

(இது நிஜக் கேள்வி பதில் அல்ல . ஒரு ஓரங்க நடகத்தில் சில பகுதிகள் ......)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net


# Scarborough Dental Office

## Dr.Athi K.Somasundaram

டாக்டர் ஆதிகணபதி சோமசுந்தரம்

**பேராதனை பல்கலைக்கழகம், சென்னை மருத்துவக் கல்லூரி,**
**கனடா தேசிய பல்வைத்திய சபை**



- Cosmetic Dentistry
- Crown & Bridges
- Gum Treatment
- Root canals
- Bleaching
- Dentures
- Surgery

★ அவசர சிகிச்சைகளுக்கு முன்னறிவிப்பு இன்றி சிகிச்சை வழங்கப்படும்
★ அழகுபடுத்தும் பற்சிகிச்சைகள்
★ காப்புறுதித் திட்டங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.
★ சமூக உதவிப் பணம் பெறுபவர்களுக்கும் சிகிச்சை வழங்கப்படும்

**Tel:(416) 750 9969**
**Fax:(416) 750-9967**
**2155 Lawrence Ave East, Suite 10**
**(At Birchmount), Scarborough**
**•Wheel Chair Access**
**•Free Parking**

திங்கள் முதல் சனி வரை
காலை 9 மணி - மாலை 9 மணி வரை
ஞாயிறு தினங்களில்
நண்பகல் 12 - மாலை 5 மணி வரை
(ஞாயிறு தினங்களில் சேவையைப் பெற்றுக் கொள்ள முன்னறிவித்தல் செய்து கொள்ளுங்கள்)
★ 24 மணி நேர அவசர சிகிச்சை சேவை

**Monday-Saturday**
**9 AM-9 PM**
**Sundays**
**12 NOON-5 PM**
**Sunday by appointment only**
**24 Hrs Emergency Service**




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கறை படிந்த கைகள்

தமிழில்: நேசன்

## ஜீன் போல் சாத்ரே

அகார்ஸ்கி: மிகவும் பொருத்தமானது (கதிரையை விட்டு எழுகின்றான்)

இளவரசர்: பொறுமை பொறுமை கனவான்களே, கதிரையில் இரு கர்ஸ்கி இப்படியாக பேச்சுவார்த்தையைத் தொடங்குவது பிழையான காரியம் நாங்கள் எங்களுக்குள்ள திட்டங்களை கொஞ்சம் நேரடியாக அறிமுகப்படுவத்துவது நல்லதுதானே?

கர்ஸ்கி: ( இளவரசரை நோக்கியபடி ) நேரடியான தொடர்புகள் இவர்களுடனா? நாங்கள் இங்கு வரும்போது இவனுடைய காவல் நாய்கள் எங்களை இங்கு கொண்டுவந்த முறையை அவதானித்தீர்களா? இவர்கள் எங்களை வெறுப்பவர்கள். நான் இவர்களுடன் பேச வந்தது உங்களுக்காகத்தான் ஆனால் இப்பேச்சுவார்தையில் நல்லது எதுவும் வருமென நான் நம்பவில்லை.

இளவரசர்: கர்ஸ்கி கடந்தவருடம் எனது அப்பாவைக் கொல்ல நீ இரண்டு தரம் முயற்சி செய்தாய். ஆயினும் நான் அதைப் பொருட்படுத்தாமல் உன்னைச் சந்திக்க ஒப்புக் கொண்டேன் நாங்கள் ஒருவரை ஒருவர் ஏன் விரும்பக்கூடாது என்பதற்கு பல காரணங்கள் உண்டு. ஆயினும் எமது நாட்டின் நலன் ஓர் நெருக்கடியான சூழ்நிலையில் இருக்கும்போது அந்த உணர்வுகளுக்கு நாம் இடம் கொடுக்கக்கூடாது (மௌனம்) நாட்டின் நலனை நாம் எமது சாதாரண நலனுடன் ஒப்பிடக்கூடாது. ஹெடேடர் நீ இதனை ஓர் வர்க்க நலன் என கொள்கின்றாய் நானும் எனது தகப்பனும் அதனை எப்போதும் ஆதரித்து வந்தோம். ஜேர்மனியில் வெருட்டும் மனோபாவமும் எம்மை எமது பாதுகாப்புக்காக பல்வேறு திட்டங்களை பல இழப்புக்களுக்கு மத்தியிலும் தூண்டுகின்றது

ஹெடேடர்: அதன் அர்த்தம் நீர் சோவியத் ரஷ்யாவின் மீது போர்ப் பிரகடனம் செய்யப் போகின்றீரா?

இளவரசர்: (தொடர்ந்து) மறுபுறத்தில் கார்ஸ்க்கியும் எமது வெளிநாட்டுக் கொள்கையை ஏற்காத கார்ஸ்க்கியும் அவரது நண்பர்களும், ஐடடலசயை வுக்கு ஏன் உறுதியான எல்லோரும் ஓர் தலைவனுக்குக் கீழ் இணைந்த அரசு வேண்டும் என்பதை சிலவேளைகளில் குறைவாக மதிப்பிட்டு தமக்கென ஓர் தலைமறைவு இயக்கம் ஒன்றை ஸ்தாபித்திருக்கின்றனர். எவ்வாறாயினும் நாம் அனைவரும் நேர்மையானவர்களே. கூடவே எனது தந்தை நாட்டுக்கு தம்மை அர்ப்பணித்தவர்கள் ஆயினும் தமது கடமைகளைச் செய்வதால் தற்சமயம் வெவ்வேறு கருத்துக்களுடன் பிரிவுபட்டு வேலை செய்கின்றோம் (ஹெடேடர் வெடித்துச் சிரிக்கின்றான்) ஏன் சிரிக்கின்றீர்

ஹெடேடர்: ஒன்றுமில்லை மேலே சொல்லும்

இளவரசர்: ஆனாலும் அதிர்ஸ்டவசமாக இன்று நாம் அதிக அளவு பிரிவுபட்டு இருக்கவில்லை குறைந்தபட்சம் எமது கருத்துகளை ஒருவருக்கொருவர் இனங் காணவாவது முயல்கின்றோம் எனது தகப்பனர் உபயோகமற்ற, பணத்தை விழுங்கும் இந்த யுத்தத்தை நீடிக்க விரும்பவில்லை நான் தனிப்பட்ட சமாதான உடன்பாடுகளை செய்ய விரும்பவில்லை ஆயினும் நாம் உற்சாகத்துடன் போரைத் தொடர்வோம். இனியும் எமது நாட்டில் உட்பிளவுகளும் போரும் தமது நாட்டின் நலனை பாதிக்கும் என்பதை உணரும் கர்ஸ்கி உடனடியாக ஓர் சமாதான உடன்படிக்கையை செய்து கொள்ள விரும்புகின்றார். அதாவது அனைத்து கட்சிகளும் இணைந்த ஓர் தேசிய முன்னணியைக் கொண்டுவர விரும்புகின்றார் ஆயினும் இவ்வாறான ஓர் தேசிய முன்னணி ஜேர்மனிக்குத் தெரியாமல் வெளிவரமுடியாது ஆனால் அதற்கான ஓர் திட்டம் தலைமறைவான ஸ்தாபனங்களினூடாக செய்து கொள்ள முடியும்.

ஹெடேடர்: அதன்பிறகு

இளவரசர்: அவ்வளவுதான். கர்ஸ்க்கியும் நானும் கொள்கை அளவில் அதற்கு இணங்கி இருக்கின்றோம் என்ற நல்ல செய்தியைத் தான் அறிவிக்க விரும்புகின்றோம்.

ஹெடேடர்: அது எவ்வாறு எமது கட்சி நலனுக்கு உதவ முடியும்.

கார்ஸ்க்கி: அதுவே காணும், நாம் எமது நேரத்தைச் வீணாக இங்கு செலவழிக்கின்றோம்.

இளவரசர்: (தொடர்ந்து) அதன் அர்த்தம் இந்த முன்னணியில் ஓர் ஸ்தாபனமாக இயங்கும் உங்கள் தொழிலாளர் கட்சி எங்களுடன் இணைய சம்மதித்தால்...

ஹெடேடர்: எங்களுக்கு என்ன நலனை அல்லது அனுகூலத்தை இதன் மூலம் தருவீர்கள்

கார்ஸ்க்கி: நாம் தலைமறைவாக உருவாக்கும் தேசிய முன்னணியின் குழுக்கூட்டத்தில் உங்களுக்கு 2 வோட்டுக்கள் தரப்படும்.

ஹெடேடர்: எத்தனை வோட்டுக்களுக்கு மத்தியில் எமக்கு 2 வோட்டுகளைத் தருகிறீர்கள்.

கார்ஸ்க்கி: குழுவுக்கு எல்லாமாக 12 வோட்டுக்கள் உண்டு. உங்களுக்கு இரு வோட்டுக்கள் தரப்படும்.

ஹெடேடர்: (வியப்படைந்தவன் போல பாசாங்கு செய்தபடி) பன்னிரண்டு வோட்டுகளில் இரண்டு எமக்கு தரப்படும்.

கார்ஸ்க்கி: றிஜெண்ட் 4 ஆலோசர்கர்களை தமது பிரதிநிதிகளாகவும் அனுப்பும். பென்ரகன் ஆறு வோட்டுகளைக் கொண்டிருக்கும். தலைவரை நாம் விரைவில் தெரிவு செய்ய வேண்டும்.

ஹெடேடர்: (மென்சிரிப்புடன்) 12 வோட்டில் இரண்டு வோட்டுகள்

கார்ஸ்க்கி: பென்ரகன் பெரும்பான்மையான மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்றது. அதாவது 57 வீத மக்களையும் கூடவே முழு மத்திய தர வகுப்பினரையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. இந்நாட்டில் தொழிலாளர் 21 வீதத்தை பிரதிநிதித்துவப் படுத்துகின்றனர் அதிலும் அனைவரும்

27 ம் பக்கம் பார்க்க.

தொடர் நாடகம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஜே.வி.பி.யின் அரசியலின் சமூக பொருளாதார அரசியல் பின்னணி

சமூகப் புரட்சி தொடர்பாக ஜேவிபி 1986ம் ஆண்டுக்குப் பின்னர் கொண்டிருந்த கருத்தியல் 1971க்கு முன்னரான காலத்தில் கொண்டிருந்த கருத்தியலை விட தவறானதும் அழிவுத் தன்மை கொண்டதுமாகும். 1971க்கு முன்னர் ஆயுதப் போராட்டத்தை அங்கீகரித்த போதிலும் மக்கள் மீது பயங்கர நடவடிக்கைகளைக் கட்டவிழ்த்து விட்டு மக்களை கீழ்படிய வைக்கும் கருத்தியல் ஜேவிபியிடம் இருக்கவில்லை. மிகவும் இரகசியமான ஸ்தாபனமயமாகி பலம் பொருந்திய ஸ்தாபனம் ஒன்றைக் கட்டி எழுப்பி இரகசியமாக இராணுவ முகாம்கள் மீதும் பொலீஸ் நிலையங்கள் மீதும் தாக்குதல் தொடுத்து அதிகாரத்தைக் கைப்பற்றுதலே சமூகப் புரட்சி என்னும் கருத்தியலே அன்று காணப்பட்டது. ஆனால் 1986 ம் ஆண்டுக்குப் பின்னரான காலத்தில் புரட்சிக்காக மக்கள் ஆதரவை பலவந்தமாகவோ அன்றி பயங்கரத்தை ஏற்படுத்தியோ பெறவேண்டும் என்னும் கருத்தியலுடன் ஜேவிபி செயல்பட்டதை எம்மால் காணமுடிந்தது.

மக்களை ஸ்தாபனமயப்படுத்தி புரட்சியின் பக்கம் வென்றெடுப்பது நீண்ட காலத்திற்கு முடியாத காரியம் எனவும் L.T.T.E யினரைப் போன்று பலவந்தமான முறையிலேயே மக்களை எமது பக்கம் திருப்ப வேண்டும் எனவும் ஜேவிபியின் பிரதான மட்ட தலைவர்களில் ஒருவரான H.B ஹேரத் குருனாகல பிரதேசத்தில் நடைபெற்ற உரையாடல் ஒன்றின் போது கூறியுள்ளார்.

ஜேவிபி தமது அரசியல் வகுப்புகளில் "புரட்சிகரச் சக்திகளை வர்க்கப் போராட்ட பாதையூடாக செயல் ரீதியாக வழி நடாத்துதல்" பற்றி உரையாடியது என்பது உண்மைதான் ஆனாலும் அவ் வழிநடாத்தலை தெளிவை ஏற்படுத்தி வென்றெடுத்தல் தனிநபர் பயங்கரவாதத்தில் ஈடுபடுதல் ஆகிய மூலமாக ஈடேற்றிக் கொள்ளல் என்னும் கருத்தே ஜேவிபியின் கருத்தியலாக மாறியிருந்தது. வர்க்க போராட்ட பாதை ஊடாகவே அவ் வழிகாட்டல் இடம் பெறவேண்டும் என்பதும் விளங்கிய பின்னர் சுயமாக மட்டுமே மக்களை வென்றெடுக்க வேண்டும் என்னும் படிப்பினைகள் ஜேவிபியின் கருத்தியலில் இருந்து தூர விலகியிருந்தது. 1988-89 காலகட்டத்தில் புரட்சிக்காக மக்களை வென்றெடுக்கும் பிரதான உபாயமாக மாறியிருந்தது. தனி நபர் பயங்கரவாதமும், பலாத்காரமும் ஆகும். இக் காலகட்டத்தில் தனிநபர் பயங்கரவாதத்தையும் பலாத்காரத்தையும் நியாயப்படுத்தலே ஜேவிபியின் கருத்தியலாகவிருந்தது.

இவ்வாறாக ஜேவிபி சமூகப் புரட்சி தொடர்பாக கொண்டிருந்த கருத்து மார்க்சிஸ லெனினிஸத்துக்கு விரோதமானதும் மிகத் தவறானதும் தீங்கு விளைவிக்கக் கூடியதுமானது என்பது தெளிவானதாகும். அது ஜேவிபியின் சிறு முதலாளித்துவ அவசரத் தன்மைக்குப் பொருத்தமான கருத்தியலே தவிர பாட்டாளி வர்க்க கருத்தியல் அல்ல.

### வர்க்கங்கள் வர்க்க போராட்டங்கள் பற்றிய ஜேவிபியின் கருத்தியல்

சமுதாயத்தில் பலவேறு வர்க்க பிரிவுகள் உண்டு என்பதையும் இவ் வர்க்கங்களுக்கு இடையே ஏதோ விதமான போராட்டம் இடம்பெற்றுக் கொண்டிருக்கிறது என்பதையும் முதலாளித்துவ கருத்தைக் கொண்டவர்கள் கூட அங்கீகரிக்கின்றனர். ஆயினும் இவ் வர்க்கங்களை பகுத்துக் காட்டி இவ் வர்க்கங்களுக்கிடையேயான போராட்டம் தொடர்பான விஞ்ஞான சோஷலிசத்தின் பிரவேசம் முதலாளித்துவ கருத்தியலைக் கொண்டவர்களின் பிரவேசத்தை விட வேறுபட்டதாகும்.

வர்க்கப் போராட்டம் தொடர்பாக ஜேவிபி கொண்டிருந்த கருத்து விஞ்ஞான சோஷலிசத்தின் கருத்தியல் அல்ல. அது வர்க்கப் போராட்டம் தொடர்பாக பேசும்போது விஞ்ஞான சோஷலிச கருத்தைக் கொண்டுள்ளது என சில வேளைகளில் தோன்றினாலும் ஒட்டு மொத்தமாக எடுத்துப்பார்க்கும்போது அது விஞ்ஞான சோஷலிசத்திலிருந்து வேறுபட்டது என்பதை எம்மால் காண்பிக்க முடியும்.

1971க்கு முன்னர் ஜேவிபியினர் வர்க்கங்கள் தொடர்பாக பகுத்துக் காண்பிக்கும் போது பாட்டாளி வர்க்கம் என்றால் என்ன என்பது தொடர்பாக விஞ்ஞான சோஷலிச கருத்தைக் கொண்டிருக்கவில்லை ரஷ்யாவில் இருந்த சிறு முதலாளித்துவ பகுதியினரான நரோட்னிக் வாதிகளின் கருத்தையே கொண்டிருந்தது. இவ் நரோட்னிக் வாதிகள் தொழிலாளி வர்க்கத்தையும் உழைப்பில் ஈடுபடும் விவசாய மக்களையும் ஒரே வர்க்கமாகவே கணித்தனர்.

இது தொடர்பாக கடுமையான விமர்சனத்தை முன்வைக்கும் லெனின் தொழிலாளர்களும் உழைக்கும் விவசாய மக்களும் ஒரு வர்க்கத்தைச் சார்ந்தவர்கள் எனக்கூறுவது மிகவும் தவறானது எனவும் தொழிலாளர்கள் எவ்வித உற்பத்திச் சாதனங்களுக்கும் உரித்தற்றவர்கள் ஆதலால் தமது இரு கைகளையும் உழைப்புச் சக்தியையும் விற்கின்றனர். இதற்கு வித்தியாசமாக விவசாயி உற்பத்திச் சாதனங்கள் உபகரணங்கள், கால் நடைகள், தனது அல்லது வாடகைக்கு எடுத்த நிலம் ஆகியவற்றுக்கு உரிமை கூறும் சிறு உடமையாளன் எனவும் தொழிலாளர்களைப் போன்றே உழைப்பு விவசாயிகளும் மூலதனத்தின் சுரண்டலுக்கு உள்ளாகின்றனர் ஆனாலும் இவ்வாறாக வேறுபாடு கொண்ட வர்க்கங்களை ஒன்றாக கணிப்பது தவறு எனவும் கிராமிய முதலாளித்துவ ஜனநாயக வாதிகளால் தான் அவ்வாறு கணிக்க முடியும் எனக் கூறியுள்ளார்.

ஜேவிபியினர் தொழிலாளர் வர்க்கத்தையும் விவசாய மக்களையும்

**வசந்த திசாநாயக, பற்றிக் பெர்னாண்டோ சரத் த சில்வா, ரஞ்சித் குமார**

**தமிழாக்கம்: செ.லோகநாதன்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

ஒரே வர்க்கமாகவே கணித்தனர். ஜேவிபியின் தலைவர் விஜேவீர இது தொடர்பாக 1971க்கு முன்னர் இவ்வாறு கூறியுள்ளார்.

"தொழிலாளர் மக்களை அவர்களது வர்க்கப் போராட்டம் ஒரே இடத்தில் தேங்கி நிற்கின்ற பொருளாதார கோரிக்கைகள் என்னும் சேற்றில் இருந்து கரையேற்றி விவசாய மக்களுடன் இணைத்து ஒரே பாட்டாளிவர்க்கமாக முதலாளித்துவத்திற்கும் ஏகாதிபத்தியத்திற்கும் எதிரான அவர்களது வர்க்க உணர்வை பூரணத்துவமான விடுதலையை நோக்கி கூர்மைப் படுத்தல் வேண்டும்" என்னும் கட்டுரை ("ஜனதா விமுக்தி" பத்திரிகையின் 3வது இதழ் 11970 செப்டம்பர் 05ம்திகதி)

மேலும் அவர் இவ்வாறு கூறுகிருர்.

"தொழிலாளர் வர்க்கம் என்ருல் என்ன? பாட்டாளி வர்க்கத்தின் ஒரு பகுதி அல்லவா?... கிராமப் புறங்களில் உள்ள வேலையற்ற இளைஞர்கள் சேனை விவசாயிகள், குத்தகை விவசாயிகள், இந்த மனிதர்கள் எந்த வர்க்கத்தைச் சார்ந்தவர்கள்? தொழிலாளர் வர்க்கம் என்று வேருக ஒரு வர்க்கத்தை பகுப்போமாயின் மாணவர், ஆசிரியர் பொறியியலாளர், வைத்தியர் என்றெல்லாம் வர்க்கங்களை பகுக்க எமக்கு நேரிடும் எமது நாட்டிலுள்ள சிலர் வர்க்கங்களை பகுப்பது அவ்வாறுதான். மீதியாகவுள்ள பாட்டாளி வர்க்கத்திடமிருந்து தொழிலாளி வர்க்கத்தையும் பிளவு படுத்தி ஒரு பக்கத்தில் போடும் உபாயம் தான் அது...." (இது விஜேவீரவால் எழுதப்பட்ட "இலங்கையில் தொழிற் சங்க இயக்கமும் சோஷலிசத்தை கட்டி எழுப்புவதில் தொழிற் சங்கங்களின் பாத்திரமும் "என்னும் கட்டுரை யிலிருந்து மேற்கோள் "ரத்து லங்கா" என்னும் ஜேவிபியின் தொழிற் சங்க பத்திரிகை 1971 மார்ச் 15ம்திகதி)

அன்று ஜேவிபி பாட்டாளி வர்க்கம் வேலை அற்ற இளைஞர் சேனை விவசாயிகள் குத்தகை விவசாயிகள் ஆகிய பகுதியனவரின் கூட்டையேயாகும். இதன்படி தொழிலாளர் வர்க்கம் பாட்டாளிவர்க்கத்தின் ஒரு பகுதியாகவே காண்பிக்கப்பட்டது.

இது வர்க்கங்களை பகுப்பாய்வு செய்யும் விஞ்ஞான சோஷலிச முறைக்கு முற்றிலும் முரணனது.

1971க்கு பின்னரான காலத்தை எடுத்துப் பார்த்தாலும் ஜேவிபி வர்க்க ஆய்வு செய்தது இவ் அடிப்படையிலேயேயாகும். நாம் இதற்கு முன்னர் காண்பித்தவாறு 1971 கிளர்ச்சி பாட்டாளி வர்க்க கிளர்ச்சி அல்ல, சிறு முதலாளித்துவ பகுதியினரின் கிளர்ச்சியாகும். ஜேவிபியினர் இவ் உண்மையை என்றைக்குமே அங்கீகரிக்கவில்லை. அது தன்னை அறிமுகப்படுத்தியதும் பாட்டாளிவர்க்க கட்சி என்றேயாகும். 1971 ஏப்பிரல் கிளர்ச்சியின் 20வது ஆண்டு நினைவை ஒட்டி "71 சிகப்பு ஏப்பிரலின் 20வது ஆண்டு நினைவு" என்னும் தலைப்பில் 1971 ஏப்பிரல் 05ம் திகதி ரோம் நகரில் இருந்து வெளியிட்ட அறிக்கையில் "இலங்கை பாட்டாளி வர்க்க இயக்கத்திற்கு 1971 போராட்டத்தின் பங்களிப்பு" என்னும் கட்டுரையில் 1971ம் ஆண்டு கிளர்ச்சி பாட்டாளி வர்க்கத்தின் எழுச்சி என்றே கூறப்படுகிறது. அக்கட்டுரையில் இவ்வாறு கூறப்படுகிறது.

"71 ஏப்பிரல் 05ம் திகதி தோன்றிய இம் மாபெரும் மக்கள் எழுச்சி இலங்கை பாட்டாளிவர்க்க வரலாற்றில் மிகவும் தீர்க்கமானதும், விஞ்ஞான பூர்வமானதுமான நிகழ்ச்சியாகும். பிற்போக்கு வாதிகளும் பிற்போக்கு வாதிகளின் தரகர்களும் தேசிய அளவிலான இம் மாபெரும் மக்கள் எழுச்சியை குறைத்து மதிப்பீடு செய்வதற்காக உண்மைக்கு புறம்பான தத்துவங்களையும் பிற்போக்கு கருத்துக்களையும் எவ்வளவு தூரம் கூறினுலும் இதன் மூலமாக பாட்டாளி வர்க்க இயக்கத்திற்கு வழங்கப்பட்ட பங்களிப்பு தடைப்படப் போவதில்லை."

ஜேவிபியினர் வர்க்கங்கள் பற்றி பேசிய போதிலும் இது தொடர்பாக சரியான தெளிவு ஜேவிபியிடம் இருக்கவில்லை. ஜேவிபியின் அடிப்படை அரசியல் கல்வி வகுப்புகளின் பின்னர் நடாத்துகின்ற நடாத்தும் தத்துவார்த்த கல்வி முகாம்களில் நிகழ்த்தப்படும் ஐந்தாவது வகுப்பான 'தத்துவம்' என்னும் வகுப்பில் வர்க்கமும் வர்க்க போராட்டமும் என்னும் ஒரு பகுதி உண்டு லெனினின் கட்டுரைகளிலிருந்து மேற்கோள் காட்டி விளங்கப்படுத்தப்படுகின்ற போதிலும் இறுதியில் வர்க்கம் பற்றிய ஆய்வைச் செய்வது குளறுபடியான வாருகும். இக்குளறுபடியில் இருந்து தெரிவது வர்க்கம் தொடர்பாக சரியான ஆய்வு ஜேவிபியிடம் இல்லை என்பதேயாகும். 'தத்துவம்' என்னும் வகுப்பில் உள்ள வர்க்கமும் வர்க்கப் போராட்டமும் என்னும் பகுதியில் இவ்வாறு கூறப்படுகிறது.

"இவ் விடயங்களின்படி வேறுபடும் மனித குழுக்களை நாம் சமூக வர்க்கங்கள் என்று அழைத்தோம். இச் சமூக வர்க்கங்களை பொருளாதார ரீதியான அடிப்படையிலேயே வேறுபடுத்துகின்றன. அவ்வாறு இன்றி சமூக ரீதியான வேறுபாட்டு அடிப்படையில் அல்ல. விவசாய வர்க்கம் சமூக ரீதியான வர்க்கமாகும். இதில் பொருளாதார ரீதியான பகுதிகள் இருக்கமுடியும். விவசாயிகள் மத்தியில் பல்வேறுபட்ட வர்க்கங்கள் உண்டு ஆதலால் சமூக வர்க்கங்களை பொருளாதார ரீதியாக பகுத்தல் மிகவும் சிறந்ததாகும். இவ் ஒவ்வொரு சமூக வர்க்கங்களிடையிலும் வித்தியாசங்கள் காணப்படுகின்றன. வருமானம் பெறும் வழியின் அளவைப் பொறுத்து சமூக நிலைப்பாடுகளும் வேறுபடும். ஆதலால் இந்தநபர்களின் சமூகம் சார்ந்த நோக்கங்களது பயனும் பல்வேறுபட்டதாகும். அவ்வாறே இந்நோக்கமும் ஒவ்வொரு வர்க்கத்துக்கும் வேறுபட்டதாகும். ஆதலால் அடிப்படையில் இருவர்க்கங்களே உண்டு உற்பத்தி சாதனிகளுக்கு உரித்துள்ளதும் உரித்தற்றதுமான அதாவது சுரண்டுகின்ற சுரண்டப்படுகின்ற என்ற ரீதியிலாகும். "(ஜேவிபியினுல் நடாத்தப் பெற்ற தத்துவார்த்த கல்வி முகாம்களில் நிகழ்த்தப் பட்ட உரையாடல்களின் குறிப்பிலிருந்து மேற்கோள் காட்டப்படுகிறது.)

இவ்வாருக விளங்கப்படுத்தும் போது விவசாயிகளை சமூகவர்க்கமாக அறிமுகப்படுத்தப்படுகின்றது இது தவருன கருத்தாகும். விவசாயிகள் சமூக வர்க்கம் அல்ல. பல வர்க்கங்களைக் கொண்ட விசேடமான சமூக சத்தியாகும். வர்க்க ரீதியாக எடுத்துப் பார்ப்போமாயின் விவசாயிகளை செல்வந்த விவசாயிகள் (விவசாய முதலாளித்துவம்) நடுத்தர விவசாயிகள் (விவசாய சிறுமுதலாளித்துவம்) வறிய விவசாயிகள் (அரைப் பாட்டாளிகள்) ஆகிய வர்க்கங்களை கொண்ட மக்கள் பிரிவினராகும்.

(தொடரும்)

www.tamilarangam.net


# ஏ.ஆர்.கே மார்க்கட்

## 31-35 ST.DENNIS DR
(DON MILLS/EGLINTON)

**அனைத்தும் மலிவு விலையில்**

★ இலங்கை இந்திய உணவுப் பொருட்கள்,
★ பால் பழங்கள், உடன் மரக்கறி வகைகள்,
★ இறைச்சி, மீன், கடலுணவு வகைகள்,
★ கனடிய உணவுப் பொருட்கள்

★ தமிழ், ஹிந்தி வீடியோப் படங்களின் ஒரிஜினல் பிரதிகளை வாடகைக்கும் விற்பனைக்கும் பெறலாம்
★ CD, Audio மலிவு விலையில்

# A.R.K MARKET
(416) 421 3429




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழ்ப் பெற்ருேர் மாணவர்களினது கவனத்திற்கு

**இலங்கையன்**

ஒன்ராரியோ மாகாணத்திலுள்ள கல்விச்சபைகள், கனடா அரசின் பல்கலாச்சாரத்துவக் கொள்கைக் கமைய தமது பிரதேசப் பாடசாலைகளிற் கல்வி கற்கும் ஆங்கில பிரான்சிய மொழிகளைத் தவிர்ந்த மற்றைய மொழிகளைத்தாய் மொழியாகக் கொண்ட மாணவர்களின் கனிசமான எண்ணிக்கைகளைக் கருத்திற் கொண்டு, அம் மாணவர்கள் தங்கள் தாய் மொழிகளைக் கற்பதற்கென வாய்ப்புகள் அளித்து வருகின்றன என்பதை நாம் அறியாமலில்லை. ஆங்கிலம் பிரான்சியம் தவிர்ந்த தாய் மொழிக்கல்வியை அளிக்க சர்வதேசிய மொழித்திட்டத்தின் கீழ் பாரம்பரிய மொழிகற்கை நெறிவகுப்புக்களும் 2 சர்வ தேசிய மொழி திறமைச்சித்தி கற்கை நெறி வகுப்புக்களும் கல்விச் சபைகளால் நடாத்தப்பட்டு வருகின்றன. இந்த வகையில் ஒன்ராரியோவில் சுமார் 25 மொழிகளில் இவ்வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன. இவைகளுள் எமது தமிழும் ஒன்று என்பது எமக்குப் பெருமையும் மகிழ்ச்சியும் தருவதாகும்.

ஒன்ராரியோ மாகாணத்தைப் பொறுத்தவரையில் சுமார் என்பதாயிரம் தமிழ் மக்கள் ரொறன்ரோ பெரும்பாகத்திலும் அதையண்டிய பகுதிகளிலும் வாழ்கின்ருர்கள், சுமார் இருபதாயிரம் மாணவர்கள் இப்பிரதேசங்களிலுள்ள ஆரம்பநிலை இரண்டாம் நிலை பாடசாலைகளில் கல்வி கற்கின்ருர்கள். இவர்களுள் சுமார் பன்னீராயிரம் ஆரம்ப நிலைப்பள்ளி மாணவர்கள், சுமார் எண்ணுயிரம் இரண்டாம் நிலைப்பள்ளி மாணவர்கள். தமிழ் மாணவர்களின் இக்கனிசமான எண்ணிக்கையைக் கருத்திற் கொண்டே இப்பிரதேசத்திலுள்ள கல்விச்சபைகள் தமிழ் மொழி கற்கை நெறி வகுப்புக்களை பாரம்பரிய மொழித்திட்டத்தின் கீழும் சர்வதேசிய மொழி திறமைச் சித்தித்திட்டத்தின் கீழும் நடாத்திவருகின்றன.

ஆரம்பநிலைப்பள்ளி மாணவர்கள் பாரம்பரிய மொழித திட்டத்தின் கீழ் நடைபெறும் தரம் 1 இலிருந்து தரம் 8 வரையுமுள்ள வகுப்புக்களில் சேர்ந்து படிக்கலாம் இவ்வகுப்புகள் அநேகமாக வார இறுதி நாட்களிற்தான் ஒருசில பாடசாலைகளில் நடைபெற்று வருகின்றன. இதுபற்றிய விபரங்களை கல்விச்சபை அலுவலகங்களின் பாரம்பரிய மொழித்திட்ட இணைப்பதிகாரிகளுடன் (Heritage Language program coordinators) தொடர்பு கொண்டறியலாம்.

இரண்டாம் நிலைப்பள்ளி மாணவர்கள் தொடர்கல்வி continuing Education முறையின் கீழ் நடைபெறும் சர்வ தேசிய மொழித்திறமைச்சித்தி கற்கை நெறி வகுப்புக்களாகிய தரம் 10, தரம் 11, தரம் 13 ( OAC) ஆகியவற்றில் சேர்ந்து படிக்கலாம் இத்தரங்களிற் பெறப்படும் திறமைச்சித்திகள் ஒன்ராரியோ இரண்டாம் நிலைப் பள்ளி டிப்ளோமாவுக்கு (OSSD) தேவையான மூன்று திறமைச் சித்திளாகக் கணிக்கப்படுவதோடு தரம் 13 க்கான திறமைச்சித்தி, பல்கலைக்கழகம் புகுதற்குத் தேவையான திறமை சித்திகளில் ஒன்ருகக் கவனிக்கப்படும் இவ்வகுப்புக்கள் பற்றியும், இவ்வகுப்புக்களில் சேர்வதற்கான தகமைகள் பற்றியும் கல்விச் சபைகளால் ஒவ்வொருவருடமும் வெளியிடப்படும் தொடர்கல்வி கற்கை நெறிகள் பற்றிய கைநூல்களிலிருந்து அறியலாம். 1994-95 க்கான கைநூல்கள் வரத் தொடங்கிவிட்டன. அவைகள் உங்கள் வீடுகளுக்கும் கட்டிடங்களுக்கும் வரும் பார்க்கத்தவருதீர்கள். அவைகளை நகர நூல்நிலையங்களிலும் பெறலாம்.

1992-93,1993-94 பாடசாலை வருடங்களில் கல்விச்சபைகளால் நடாத்தப்பட்ட தமிழ் மொழிக்கற்கை நெறி வகுப்புக்கள் பற்றி கல்விச்சபைகளிடமிருந்து கிடைத்த சில விபரங்கள் வருமாறு... பாரம்பரிய மொழித்திட்டத்திற்கு மாணவர்களின் எண்ணிக்கை 92-93ல் 1258 ஆகவும் 93-94 இல் 1492 ஆகவும் இருந்தது. நிலையங்களின் எண்ணிக்கை 92-93ல் 23 ஆகவும் 93-94ல் 28 ஆகவும் இருந்தது. திறமைச்சித்தி மொழித்திட்டத்தில் நிலையங்களின் எண்ணிக்கை 92-93ல் 6 ஆகவும் 93-94ல் 9 ஆகவும் இருந்தது. மாணவர்களின் எண்ணிக்கை 92-93ல் 160 ஆகவும் 93-94ல் 328 ஆகவும் இருந்தது.

பாடசாலை செல்லும் எமது மாணவர்களின் மொத்த எண்ணிக்கையுடன் ஒப்பிடின் 92-93 பாடசாலை வருடத்தில் ஆரம்பநிலைப்பள்ளிக்குப் போன எம்மாணவர்களில் ஏறக்குறைய பத்துவீதமாணவர்களும், இரண்டாம் நிலைப்பள்ளிக்குப்போன மாணவர்களில் ஏறக்குறைய இரண்டு வீதமானவர்களும், அதேபோன்று 93-94 பாடசாலை வருடத்தில் முறையே பதினெரு வீத மாணவர்களும் நான்கு வீத மாணவர்களுமே தமிழ் மொழிக்கல்வி வகுப்புகளிற் சேர்ந்தார்களென அறியக்கிடக்கின்றது. இது எமது பெற்ருேர்கள் தமது பிள்ளைகளின் தாய்மொழிகல்வியில் அக்கறை எடுக்கவில்லையென்பதையே காட்டுகின்றது. அத்துடன் நாம் எமது மொழி கலை கலாச்சாரங்கள் பற்றி எழுதியும்வார முடிவு நாட்கள் தோறும் எடுக்கப்படும் கூட்டங்களிலும் மண்டபங்கள் நிரம்பி வழியும் முத்தமிழ் கலை விழாக்களிலும் வானளாவ வாய் கிழியப்பேசியும் நடித்தும் ஆடியும் வருகின்ருேம் ஆனல் இவைகள் எல்லாம் எமது மாணவச்சிருர்களின் தாய் மொழிக்கல்வியில் நாம் பெருமைப்படக்கூடியவகையில் மாற்றங்களை ஏற்படுத்தாத ஒரு நிலையைதான் காட்டுகின்றனவெனின் அது மிகையாகாது இந்நிலையில் எமது மொழி கலை கலாச்சாரங்கள் இங்கே வளருமா என்ற கேள்விதான் எழுகின்றது.

இம்முறையும் அதாவது 94-95 இலும் இப்பகுதியிலுள்ள கல்விச்சபைகள் தமிழ் மொழிக்கான பாரம்பரிய திறமைச்சித்தி கற்கை நெறிவகுப்புகளை நடாத்த இருக்கின்றன என அறியக் கிடக்கின்றது. ஆனல் இவ்வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படும் அல்லது தொடர்ந்து நடை பெறுமா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்பது இவ்வகுப்புக்களில் சேர்ந்து படிக்க விண்ணப்பிக்கும் மாணவர்களின் எண்ணிக்கையை பொறுத்தது. இதை மனதிற் கொண்டு எமது மொழி கலை கலாச்சாரங்களின் வளர்ச்சிக்காகப் பாடுபடும் சமூகத் தொண்டர்களும் இயக்கங்களும் நிறுவனங்களும் பேச்சளவிலும் எழுத்தளவிலும் நின்று விடாமல் செயலில் இறங்குவதே உடனடித் தேவையாகும். இதுவரை கிடைத்த தகவல்களின் படி 94-95 திறமைச்சித்தி தமிழ் மொழிக்கற்கை நெறிகள்

| கல்விச்சபை | பாடசாலைகள் | தரங்கள் | நாட்கள் |
|---|---|---|---|
| நோத் யோக் | விக்டோரியா பார்க் | 10,11,12 | முழுவருடநெறி சனிக்கிழமை |
| | வெஸ்ட்வியூ | 10,11,12 | அரை வருடநெறி செவ்,வியாழன் |
| எற்ரூபிக்கோபேர்ண்ஹாம்தோப் | | 10,11,12 | முழு வருடநெறி சனிக்கிழமை |
| ரொறன்ரோ | ஈஸ்டேர்ண் கொமேர்ஸ் | 11 | அரை வருடநெறி செவ்,வியாழன் |
| | வெஸ்ட் ரொறன்ரோ | 11 | அரை வருடநெறி செவ்,வியாழன் |
| பீல் | எரிண்டேல் | 10,11,12 | மு வருடநெறி சனிக்கிழமை |
| | ரி.எல்.கெண்னடி | 10,11,12 | முழு வருடநெறி சனிக்கிழமை |
| பிரத்தியேக பாடசாலை ரொறன்ரோ | ஜோண் போல் 2 | 10,11 | முழு வருடநெறி சனிக்கிழமை |

பற்றிய விபரங்கள் மேலே உள்ளது.

இவ்வகுப்புக்கள் இன்னும் ஆரம்பிக்கபபடாத ஸ்காபரோ போன்ற கல்விச்சபைகளுககு இவ் வகுப்புக்களை ஆரம்பிப்பதாள தேவையோ அவசரமோ அல்லது சமூக அழுத்தமோ இருக்கவில்லை போற் தோன்றுகின்றது. அவ்வப்பகுதி எமது சமூகத்தவர்களுக்கு இதைக் கவனத்திற் கொள்ள வேண்டும்.

# இலக்கிய சாம்ராஜ்யங்கள்



எஸ்.பிரகாஷ்

"ஹலோ தம்பி . மனோகரனா பேசுறது ...... நான் விஜயநாதன் மாஸ்டர் கதைக்கிறன். நான் அனுப்பின கவிதைகள் கிடைச்சுதா? நான் எழுதினா போடுவீங்க எண்டு தெரியும்தானே. உங்கடை பத்திரிகையிலை இப்ப வருகிற அறிஞர்களுடன் பேட்டி என்ற பகுதி நல்லா இருக்குது. இலைமறை காயாக இருக்கும் எத்தனையோ பேரின் திறமைகளை வெளிக்கொணர அது உதவியாக இருக்கும். என்னுடைய மருமகனும் நல்ல திறமையான சட்டத்தரணி. அவரையும் ஒரு பேட்டி எடுத்துப் போடவேணும். அவர் இனி இங்கையும் தொழிலை ஆரம்பிக்க இருக்கிறார். உங்கடை பேப்பரிலும் தொடந்து விளம்பரமும் போடவும் நினைச்சிருக்கிறம். பேட்டிக்கான கேள்வி பதில் எல்லாம் நானே எழுதி வைச்சிருக்கிறன் . அந்தப் பேட்டியை எழுதும் குமரப்பா சும்மா formality க்கு வந்து சந்திச்சா காணும்."

மனோகரனுக்கு என்ன சொல்வது என்று தெரியவில்லை. இதைப் பிரசுரித்தால் வாசகர்களிடம் இருந்து பல ஆட்சேபங்கள் வரும் என்பதைவிட அது பத்திரிகா தர்மத்துக்கு மாறானது என்பதை அவன் நன்றாக உணர்ந்திருந்தான். விஜயநாதனைப் பகைத்தால் அது பாம்பின் பல்லைப் பிடித்துப் பார்ப்பதற்கு சமமானது என்பதும் அவனுக்கு தெரியும் . அதைவிட குமரப்பா ஒரு மாதிரியான ஆள். இப்படி ஒன்றைப் பிரசுரிப்பது பற்றிக் கேட்டால் அவ்வளவுதான். நீங்களும் உங்கடை பத்திரிகையும் என எல்லாத்தையும் தூக்கி எறிஞ்சிட்டுப் போய்விடுவான். இது பெரிய தர்ம சங்கடமாக இருந்தது மனோகரனுக்கு.

"மாஸ்டர், நான் குமரப்பாவுடன் கதைச்சுப் பார்க்கிறன்"

"நீ எடிட்டர். பிறகு அவனை என்ன கேட்கிறது . நீ விரும்பினா அதைப் போடுறதுக்கு யார் மறுப்புச் சொல்ல முடியும். ஏன் உனக்கு அதைப் போட விருப்பம் இல்லையோ ? "

"சீச்சீ ... அப்படியில்லை மாஸ்டர், அந்தப்பகுதி விளம்பர நோக்கமற்ற நெறியான முறையில் இப்போ எழுதப்படுது என உங்களுக்கு தெரியும். அதிலை கலப்படம் செய்யறது அவ்வளவு நல்லதாக தெரியவில்லை."

"டே.. நீ எப்படா பேப்பரிலை எழுதத் தொடங்கினது. நாங்கள் யூனிவசிட்டியிலை படிக்கும் போதே journalism ஒரு பாடமாய் படிச்சனாங்கள். நீங்கள் எல்லாம் கனடாவுக்கு வந்த உடனை ஏதோ பெரிய journalist என்ற நினைப்பு. உனக்கொரு பாடம் படிப்பிச்சுக் காட்டத்தான் வேணும்.

"மாஸ்டர், நீங்கள் இப்படிக் கதைக்கலாமோ. எழுத்தாளர்கள் நாட்டுக்கு வழிகாட்டி மாதிரி.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வார்த்தையிலை மரியாதை இல்லாமல் கதைக்கிறது யாரேனும் கேட்டால் உங்களுக்குத்தான் மரியாதையில்லை."

"மரியாதையைப் பற்றி எனக்குச் சொல்ல வந்திட்டார். வையடா போனை."

மனோகரனுக்கு கண்ணில் நீர் வந்துவிட்டது. நியாயமாக நீதியாக நடப்பதுகூட இந்த உலகத்தில் சரிபட்டு வராதா? வெளியிலே பெரியவர்கள்போல நடந்து கொள்ளும் இவர்கள் இப்படி அசிங்கமாக நடந்து கொள்கிறார்களே. குமரப்பாவுடன் கதைத்தால் நிம்மதியாக இருக்கும் என்று நினைத்தான் மனோகரன்.

"மனோ, நீ செய்தது ரொம்பச் சரி. இவங்கள் நினைச்சபடியெல்லாம் ஆடக்கூடாது நாங்கள் இருக்கிறம்" என்று தெம்பு வரச் சொன்னான் குமரப்பா.

✪ ✪ ✪

விஜயநாதன் மாஸடருக்கு நித்திரை வரவில்லை. தான் சொல்லி அதை யாரும் செய்யாவிட்டால் அவருக்கு கெட்ட கோபம் வரும். வானொலிக்கு காசு கொடுத்து ஒரு மாதிரி அதை மடக்கி தன் மருமகனின் பேட்டியை ஒழுங்கு செய்துவிட்டார். அதுவும் தான் விரும்பியது போலவே. கடைசிக் கேள்வி கட்டாயம் தான் எழுதிக் கொடுத்தது போல இருக்க வேண்டும் என்பது அவரின் கட்டளை. அதை அப்படியே வானொலியிலும் ஒலிபரப்பினார்கள். விஜயநாதன் மாஸ்டரின் மருமகனான சட்டத்தரணியிடம் கேட்ட அந்தக் கேள்வி :

"உங்களுக்கு அரசியலிலும் அனுபவம் உண்டு. சட்டத்துறையிலும் பட்டம் உண்டு. அதே நேரம் உங்கள் மாமனார் விஜயநாதனுக்கு கனடாத் தமிழ் மக்கள் மத்தியில் பேரும் புகழும் உண்டு. நீங்கள் தேர்தலில் நின்றால் தமிழ் மக்களின் வாக்குகள் உங்களுக்குத்தான் என்பது சொல்லித் தெரியவேண்டியதில்லை. கட்சித் தலைவர்களுடன் உங்கள் மாமாவுக்கு நல்ல செல்வாக்காமே. எம்.பி.யாக வரும் சாத்தியம் உண்டா?

"தமிழ் மக்களுக்கு தொண்டு செய்யும் சந்தர்ப்பம் வந்தால் அதை பணிவுடன் ஏற்கக் கடமைப்பட்டுள்ளேன" என்பது பதில் .

வாராவாரம் ஏதாவது தமிழ் பத்திரிகையில் தனது படம் வருவதை நிச்சயப்படுத்திக் கொண்டார் விஜயநாதன். தமிழ் தொலைக்காட்சியிலும் தலையைக் காட்டிக் கொண்டார். சனங்கள் மத்தியில் அவர் பெயர் அடிபடத் தொடங்கிவிட்டது.

"மாஸ்டர், இங்கை வாற பத்திரிகை ஒண்டும் தரமில்லை. இலக்கிய வாசனையில்லாத இந்தப்பத்திரி கைகள் மக்களுக்குப் பிரயோசனம் இல்லாதது. நீங்கள் ஒரு பத்திரிகையை நடத்தவேணும்." என்றுதொலைக்காட்சிப் பேட்டியில் கேட்கப்பட்டபோது "இறைவன் சித்தம்" எனப் பதில் அளித்தார் விஜயநாதன்.

பத்திரிகை தொடங்கும் பணியில் மும்முரமாகத் தொடங்கிவிட்டார். எழுத்தாளர்களை வலை போட்டுப் பிடிக்க ஆரம்பித்தார். ஓரிரண்டு எழுத்தாளர்களுக்கு விழா ஒன்றில் பட்டம் அளித்துக் கௌரவித்ததும் அவர்கள் விஜயநாதனிடம் சரண் அடைந்துவிட்டனர். பத்திரிகை அடுத்தவாரம் வெளிவருகிறது.

✪ ✪ ✪

"ஹலோ , யார் மனோகரனா , நான் விஜயநாதன் பேசுறன். எங்கடை பத்திரிகை வாற கிழமை வருது கேள்விப்பட்டனியே. இப்ப என்னைப்பற்றி தெரிஞ்சிருக்கும்"

" நல்லது மாஸ்டர் . ஏதேனும் உதவி தேவைப்பட்டா நிச்சயமா செய்து தருவம்"

"என்ன உதவியோ, நீயோ? ஒருநாளைக்கு என்னட்டை வந்து மன்னிப்புக் கேட்பாய். அதை நினைவுபடுத்தத்தான் இப்ப ரெலிபோன் எடுத்தனான். விளங்கிச்சோ"

"தப்பு பண்ணியிருந்தால் மன்னிப்புக் கேட்க நான் தயார். ஆனா தப்பே பண்ணாமல ..."

விஜயநாதன் தொலைபேசியை வைத்துவிட்டார்.

வெள்ளிக் கிழமை. "கங்கை" பத்திரிகை வெளிவந்து விட்டது. ஆசிரியர் கருத்தில் கண்ணை நகரவிட்டான் மனோ.

"விஜயநாதன் போன்ற இலக்கியவாதிகள் இருக்கும் மட்டும் இலக்கியம் சாகாது. தனது உடல்நிலையையும் கருதாது மக்கள் நனமைக்காகவே தன்னை ஒப்படைத்த இந்த வள்ளலுடன் நாம் எல்லாம் இணைந்து நாடு செழிக்க நம்மக்கள் வாழ இந்த இலக்கியப் புனித கங்கையில் எம்மையும் நீராட்டிக் கொள்கிறோம்."

என்று இருந்ததை வாசித்துச் சிரிக்க முன்பு அடுத்த வரி மனோகரனின் கண்களில் தெரிந்தது.

" எடிட்டர் : குமரப்பா"

மனோகரன் விழுந்து விழுந்து சிரித்தான். அந்தச் சிரிப்பின் நோக்கம் நீதிக்கு விளங்கும் :

நியாயத்துக்கு விளங்கும் : அவனுக்கும் விளங்கும். ஆனால் மற்றவர்களுக்கு .....?


*மீண்டும்*

**கனடாவில் குடும்ப உறவு பற்றிய கருத்தரங்கு**

- இன்றைய திருமண வாழ்க்கையின் வீழ்ச்சிக்கு காரணமென்ன?
- குடும்பத்தில் கணவன் மனைவியின் பங்கு
- பணமும் குடும்பமும்
- அன்னிய கலாசாரத்தில் நம் பிள்ளைகள்

**3.9.1994**
**சனிக்கிழமை**
**காலை 9.30 முதல் 4 மணி வரை**

**Jarvis Street Baptist Church**
**130 Gerrard St E** (Corner of Gerrard/Jarvis)

**தயவு செய்து முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளுங்கள் கட்டணம்:$3**

மதிய உணவும் சிற்றுண்டியும் வழங்கப்படும் கருத்தரங்கு வேளையில் பிள்ளைப் பராமரிப்பு வசதியும் கார் தரிப்பிட வசதிகளும் உண்டு.

குடும்பஸ்தர்களையும் தம்பதிகளையும் அன்புடன் அழைக்கிறோம்

**தொடர்புகளுக்கு:**
**பாஸ்டர் மனோகரன்**
**925 3261**
**9213867**




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## கறை படிந்த கைகள்..

உனது கட்சிக்குப் பின்னால் இல்லே.

ஹெடேடர்: நல்ல கணிப்பு

கார்ஸ்க்கி: நாம் எமது இரு தலைமறைவு இயக்கத்தையும் இணைப்போம். உமது ஆட்கள் எங்கள் படையில் இணைவார்கள்.

ஹெடேடர்: அதாவது கருத்தின்படி பென்ரகன் எங்கள் படையை முழுமையாக விழுங்கும்.

கார்ஸ்க்கி: அதுவே எங்களுக்கிடையே உள்ள பிரச்சனையைத் தீர்க்க சரியான சூத்திரம்.

ஹெடேடர்: உமது கணிப்புத்தான் எவ்வளவு செம்மையானது. அது நடைமுறைப்படுத்தப்படாமல் மத்திய குழுவில் எமக்கு 2 வோட்டுக்கள் தரப்படும். அது கூட எமக்கு அதிகமானது. அந்த 2 வோட்டுகள் எதனையும் பிரதிநிதித்துவப்படுத்தாது.

கார்ஸ்க்கி: இதனை ஏற்கும்படி யாரும் உம்மை வற்புறுத்தவில்லே

இளவரசர்: (உடனடியாக) ஆனல் இதனை நீர் ஏற்ருல் அரசாங்கம் 39 வது தடை சட்டத்தை அதாவது பத்திரிகைக் கட்டுப்பாடு, யூனியன் செயற்பாடு, தொழிலாளர் சட்டம் என்பவற்றின் உள்ள கட்டுப்பாட்டை நீக்கும்.

ஹெடேடர்: கவர்ச்சிகரமானது (மேசையில் தட்டியபடி) அபாரம் நல்லது இப்போது நாம் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டோம் இப்போது வேலைக்கு வருவோம். எனது நிபந்தனைகள் இதுதான்: தொழிலாளர் கட்சிக்கு 3 வோட்டுக்களும் மிகுதி 3 வோட்டுகளும் உங்களுக்கு தரப்படும் அதனை நீங்கள் இருவரும் பிரித்துக் கொள்ளலாம். தலைமறைவு இயக்கங்கள் தனித்துவத்துடன் பிரிந்தே இயங்கும் கொமிட்டியால் தீர்மானிக்கப்படும்.

கார்ஸ்க்கி: நாங்கள் என்ன முட்டாள்கள் என நீ நினைத்தாயா?

ஹெடேடர்: இதனை ஏற்கும்படி யாரும் உன்னை வற்புறுத்தவில்லே

கார்ஸ்க்கி: (இளவரசரை நோக்கியபடி) நான் எப்போதோ சொன்னேன் இவர்களைப்போல் ஆக்களுடன் பேச்சுவார்த்தை நடத்த முடியாது என்று. எனது கட்சி மக்கள் தொகையில் இராணுவத்தில், பணத்தில், ஆயுதத்தில் மூன்றில் இரண்டு பலத்தைக் கொண்டு நாங்கள் செய்த அளப்பரிய தியாகங்களைப் பற்றி இங்கு பேசத்தேவையில்லே. இவர்கள் ஒரு சிறு தொகையான ஆட்கள் கையில் காசுகூட இல்லாதவர்கள். அமைதியாக முன்னணி கொமிட்டியில் பெரும்பான்மை ஆசனங்களைக் கேட்கின்ருர்கள்.

ஹெடேடர்: அப்படியானல் உனது மறுமொழி இல்லே என்பது தானு?

கார்ஸ்கி: நிச்சயமாக நீ இல்லாமல் எங்களால் சமாளிக்க முடியும்.

ஹெடேடர்: அப்படியானல் நீங்கள் செல்லலாம் (கார்ஸ்க்கி ஒரு கணம் சற்று யோசித்துவிட்டு, வாசலே நோக்கி நகர்கின்ருர் இளவரசரில் எவ்வித மாற்றமும் இல்லே) இளவரசரைப் பார் கார்ஸ்க்கி அவர் உன்னிலும் பார்க்க அதிக கூர்மையானவர் அவர் விஷயங்களை ஏற்கனவே அறிந்தவர்.

இளவரசர்: (கார்ஸ்கியிடம்) நாம் இந்த திட்டங்களை வாதிக்காமல் தூக்கி எறிய முடியாது.

கார்ஸ்கி கோபத்துடன்: இவை திட்டங்கள் இல்லே இவை விவாதத்திற்கு அப்பாற்பட்ட அர்த்தமற்ற நிபந்தனே.

ஹெடேடர்: 1942 ஆண்டு பொலிஸ் உங்கள் ஆட்களையும் எங்கள் ஆட்களையும் வேட்டையாடியது. உங்கள் இயக்கம் றியெண்டைக் கொல்ல முயற்சித்தது. நாங்கள் ஆயுத உற்பத்தியை அழிக்க முயன்ருேம். ஒரு முறை எங்கள் பொடியங்கள் பென்ரகனில் இருந்து ஒரு ஆளைச் சந்தித்தபோது எங்கள் பொடியள் இருவரில் ஒருவரை நீங்கள் அந்த இடத்திலேயே முடித்தீர்கள் ஆனல் இன்றைக்கு நீங்கள் எங்களைக் கட்டி அணைக்க முயல்கின்றீர்கள் ஏன்?

இளவரசர்: எங்கள் மண்ணைக் காப்பதற்குத்தான்

ஹெடேடர்: 42இல் மண்ணைக் காக்க ஏன் நீங்கள் ஷவில்லே (மௌனம்) இதற்குக் காரணம் ரஷ்யா பெலுஜியாவை முறித்ததும் ஜேர்மனியர் துருப்புக்கள் போரில் தோற்கப்போவதும்தான்.

இளவரசர்: இன்றைய புறச் சூழ்நிலே புதிய ஓர் அரசியல் சூழ் நிலேயை உருவாக்கியுள்ளது என்பது உண்மைதான் ஆனல் என்ருல்.........

ஹெடேடர்: அதே வேளை, உமது தொலேப்பார்வை மிகவும் கச்சிதமானது தான். நீர் இல்லிரியாவைக் காக்க விரும்புகின்றீர் அதை என்னல் ஏற்க முடிகின்றது. ஆனல் அது இன்று கொண்டிருக்கும் அழுக்குகளையும் பாதுகாக்க விரும்புகின்றீர் அதாவது சமூகத்தில் காணப்படும் சமத்துவமின்மை, வர்க்க ஆதிக்கம், சர்வாதிகாரம் கொண்ட அரசு அனைத்தையும் காக்கவிரும்புகின்றீர். ஜேர்மனி வெற்றியின் எல்லேயில் இருக்கும் போது உமது தகப்பனுர் அந்த அரசை ஆதரித்தார். இன்று சூழ்நிலே மாறிவிட்டது. நீர் இப்ப ரஷ்யாவின் உதவியை நாட விரும்புகின்றீர் ஆனல் அது மிகக் கஷ்டமான காரியம்.


உ

## சோதிடம்

★ ஜாதகக் குறிப்பு எழுதுதல்
Raphael's Astronomical Ephemeries இன் அடிப்படையில் பாவ, கிரகஸ்புடங்கள் தயாரிக்கப்படும். வேறு நாடுகளில் பிறந்தவர்களுக்கும் ஐம்பது வருடங்களுக்கு முன்னர் பிறந்தவர்களுக்கும் ஜாதகக் குறிப்பு எழுதப்படும்.

★ ஜாதகங்கள் பரிசீலிக்கப்பட்டு பலன் கூறப்படும்.

★ அதிட்ட விஞ்ஞான அடிப்படையில் பெயரிடுதல்

★ சுபமுகூர்த்தம் நிச்சயித்தல்

★ பாவஸ்புடக ரீதியாக கிரகபாவம் கணிக்கப்பட்டு அங்காரகதோச பரிகாரம் பற்றிய கருத்துக்கமைவாக விவாகப் பொருத்தம் பார்த்தல்

உங்கள் பிரச்சனை எதுவானலும்
சோதிட ஆலோசனை பெற நாடுங்கள்.

**சி.சிதம்பரப்பிள்ளை**

இளைப்பாறிய ஆசிரியர் (சாவகச்சேரி)
அனுபவமிக்க சோதிடர்

தொடர்புகளுக்கு:
90 Digby Cresent (Brimley/Steeles)
Markham, Ont,L3R 7G7
**(905) 513-9840**




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பல முக்கியஸ்தர்கள் ஆசனம் இழந்தனர்

இந்த தேர்தலில் பல முக்கியஸ்தர்கள் தங்கள் கட்சிகளால் கைவிடப் பட்டுள்ளனர். ஐ.தே. கட்சி தனது தேசியப் பட்டியலில் சிறிசேன கூரேயை விலக்கியுள்ளது. இவர் இம்முறை பிரசாரங்களில் கலந்து கொள்ளவில்லை. ரணில் விக்கிரமசிங்கவின் வேண்டுகோளுக்கு இணங்க இவர் கொழும்பில் மட்டும் பிரசாரம் செய்திருந்தார். இவரை விட நடிகர் ரவிந்திர ரண்தெனியவும் கைவிடப் பட்டிருக்கிறார்.

இதைப் போலவே சுதந்திரக் கட்சியும் மைத்திரிபால சேனநாயக்க வைக் கை விட்டுள்ளது. அத்துடன் புதிதாக கட்சியில் சேர்ந்த காமினி பொன்சேகாவும் பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. இதைவிட செல்லசாமியும் கைவிடப்பட்டுள்ளார்.

பழைய பல அமைச்சர்கள் தேர்தலில் தோற்கடிக்கப் பட்டிருக்கிறார்கள். போல் பெரேரா, விமல் விக்கிரமசிங்க, அபுசாலி, விஜேகூன் ஆகிய நான்கு அமைச்சர்களும் பன்னிரண்டு உதவி அமைச்சர்களும் தோற்கடிக்கப் பட்டனர். அமைச்சர் பி.தேவராஜ் தோற்கடிக்கப்பட்டார்.

ஆனால் பல அமைச்சர்கள் தங்கள் தொகுதிகளில் தோற்கடிக்கப் பட்டாலும் விருப்பு வாக்குகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டனர். ரைரேன் பெணண்டோ, காமினி லொக்குகே, வீரசிங்க மல்லிமாராச்சி, ஜோன் அமரதுங்க, ஜோசப் மைக்கல் பெரேரா, விஜேபால மெண்டிஸ், பெஸ்டஸ் பெரேரா, நந்தா மத்தியூ, ரெனி டி மெல் ஆகியோரே இவ்வாறு தெரிவு செய்யப்பட்டவர்கள்.

ஐ.தே.கட்சியின் தேசியப் பட்டியலில் காமினி விஜேசேகர, அனுரா, சொக்ஸி, தொண்டமான், அஸ்வர், காமினியுடன் கட்சி அமைத்த ஜி.எம்.பிரேமச்சந்திர போன்றோர் நியமிக்கப்பட்டனர். தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் தொண்டமானும் ஏ.எம்.டி.ராஜனும் நியமிக்கப்பட்டனர்.

சுதந்திரக் கட்சியின் சார்பில் சிறிமா, தர்மசிறி சேனநாயக்கா, கே.பி.ரத்நாயக்க, அலவி மௌலானா, பேராசிரியர் பீரிஸ், தமிழரான லக்ஸ்மன் கதிர்காமர், கே.பி.சில்வா, பட்டி வீரக்கோன் போன்றோர் நியமிக்கப்பட்டனர்.

ஆனால் தேர்தலில் தோற்கடிக்கப்பட்ட ஐ.தே. கட்சியினர் பலர் கம்பகா, கண்டி, கொழும்பு மாவட்டங்களில் விருப்பு வாக்குகளில் தங்கள் கட்சியினரே மோசடி செய்ததாக குற்றம் சாட்டியுள்ளனர். தங்கள் ஆசனங்களை இழந்தவர்கள் திடீரென்று அதிகளவு விருப்பு வாக்குகளைப் பெற்றதாக இவர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

இனவாதம் பேசிய மகாஜன எக்சத் பெரமுனையின் தினேஷ் குணவர்த்தன தோற்கடிக்கப் பட்டிருக்கிறார். இருப்பினும் மக்கள் ஐ.தே.கட்சிக்கு எதிராக வாக்களித்ததில் தனக்கு மகிழச்சியே என இவர் தெரிவத்தார்.

# பாராளுமன்றத்தில் தமிழர்கள்

இந்த தேர்தலில் தமிழ் உறுப்பினர்கள் பலர் பாராளுமன்றம் நுழைந்துள்ளனர். கூட்டணியின் சார்பில் திருமலையில் தங்கத்துரையும் மட்டக்களப்பில் பரராஜசிங்கமும் , பொன்னம்பலம் செல்வராசா, கிருஷ்ணபிள்ளை துரைராசசிங்கம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். இதை விட தேசியப் பட்டியலில் நீலன் திருச்செல்வம் தெரிவு செய்யப்பட்டார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் டக்ளஸ் தேவானந்தா, அழகையா இராசமாணிக்கம், உ.பாஸ்கரன், ரா. ராமேஸ்வரன், முருகேசு சந்திரகுமார், நடராசா அற்புதராசா, சங்கரப்பிள்ளை சிவதாசன், சின்னையா தங்கவேல் ஆகியோர் ஈ.பி.டி.பி சார்பில் தெரிவு செய்யப்பட்டனர்.

வன்னி மாவட்டத்தில் புளொட் சார்பில் தர்மலிங்கம் சித்தார்த்தன், சரவணபவானந்தன் சண்முகநாதன், வைத்திலிங்கம் பாலசந்திரன் ஆகியோரும் ஐ.தே.கட்சி சார்பில் ராஜமனோகரி புலேந்திரனும் தெரிவு செய்யப்பட்டனர்.

தொழிலாளர் காங்கிரசைச் சேர்ந்த சிவசாமி ராஜரத்தினம் கண்டியிலும் நுவரெலியாவில் முத்து சிவலிங்கம், சுப்பையா சதாசிவம், தொண்டமான் ஆகியோரும் மலையக மக்கள் முன்னணியைச் சேர்ந்த சந்திரசேகரனும் தெரிவு செய்யப் பட்டுள்ளனர். சந்திரசேகரனுக்கு உதவி மந்திரிப் பதவி வழங்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தேசியப் பட்டியல் மூலமாக சுதந்திரக் கட்சி ராஜன் கதிர்காமரைத் தெரிவு செய்தது.

# ஐ.தே.கவுடன் உறவைத் துண்டிக்கும் ஈ.பி.டி.பி

பாராளுமன்றத்தில் தாங்கள் சுயேச்சையாக இயங்கப் போவதாக ஈ.பி.டி.பி தெரிவித்துள்ளது. அரச சார்புப் பத்திரிகையான சண்டே ஒப்சேர்வரிற்கு அளித்த பேட்டியில் தனது கட்சி ஆளும் கட்சியையோ எதிர்க்கட்சியையோ ஆதரிக்காது என்று டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். 'நாங்கள் அரசாங்கத்துடனோ, எதிர்க்கட்சியுடனோ சேர்ந்திருக்கலாம். ஆனால் எங்களுக்கு எங்கள் பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை சொந்த நலன்களுக்காக பாவிக்க விருப்பமில்லை' என்று தேவானந்தா தெரிவித்திருக்கிறார். 'யாழ்ப்பாண மக்கள் தங்கள் பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தை இழக்கக் கூடாது என்பதற்காகவே நாங்கள் போட்டியிட்டோம், எங்கள் பாராளுமன்றப் பலம் மூலம் வடக்கு கிழக்கு பிரச்சனைக்கு தீர்வு காண உதவ விரும்புகிறோம். இந்த தேர்தலில் இனவாத சக்திகளை மக்கள் நிராகரித்துள்ளனர். மக்களின் சிந்தனை மாறி விட்டது என்பதை இது காட்டுகிறது என்றும் தேவானந்தா மேலும் தெரிவித்தார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ரஷ்ய ஆயுத ஒப்பந்தம் ரத்து

ரஷ்யாவிலிருந்து ஆயுதம் வாங்குவதற்கு செய்யப்பட்ட ஒப்பந்தத்தை சந்திரிகா ரத்துச் செய்துள்ளார். முன்னைய அரசில் உள்ளவர்களுக்கு இந்த ஒப்பந்தம் மூலம் தரகுப் பணம் கிடைத்ததாக சந்திரிகா தெரிவித்திருக்கிறார்.

ஆனால் இந்த முடிவு மூலம் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் மோதல் ஏற்படலாம் என்று கருதப்படுகிறது.

பத்து இராணுவ விமானங்கள், மூன்று பீரங்கிப் படகுகள், 200 கவச வாகனங்கள் போன்றவற்றை வாங்குவதற்கான பாராளுமன்ற ஒப்பந்தம் பெறப்படவில்லை என்று சந்திரிகா குற்றம் சாட்டினார். இந்த ஒப்பந்தம் செய்யப்பட்ட போதும் ஜனாதிபதியே பாதுகாப்பு அமைச்சராக இருந்தார். தேர்தல் பிரசாரத்தின் போது ஐ.தே.க அரசு ஆயுத கொள்வனவில் ஊழல் செய்ததாக பொதுஜன முன்னணி குற்றம் சாட்டியிருந்தது.

இந்த ஒப்பந்தம் பற்றி விசாரணை செய்த சந்திரிகா இதுவரையும் பத்து வீதப் பணமே செலுத்தப்பட்டிருப்பதாகவும் விஜேதுங்க அரசு யுத்தத்தை நிறுத்தாதற்கு காரணம் அதில் உள்ள பல அமைச்சர்கள் ஆயுதக் கொள்வனவில் பணம் சம்பாதித்ததே என்றும் தெரிவித்திருந்தார்.

இனிமேல் செலுத்தப்பட வேண்டிய 73 மில்லியன் கொடுப்பனவு நிறுத்தப்பட்டிருக்கிறது. பாராளுமன்றமோ, நிதியமைச்சோ அங்கீகாரம் வழங்காமல் பத்து வீதப் பணம் ஏற்கனவே அரச வங்கியொன்றினால் செலுத்தப்பட்டதாக ஐலண்ட் தெரிவித்திருக்கிறது. இந்த ஆயுதக் கொள்வனவுக்கு பணம் சேர்ப்பதற்காக வெளிநாட்டுக் கடன் ஒன்றையும் அரசு தயார் பண்ணியிருந்ததாக ஐலண்ட் மேலும் தெரிவித்தது.

இரு வாரங்களுக்கு முன்னர் ஆறு டாங்கிகள் பயிற்சிக்காக ரஷ்யாவிலிருந்து விமானம் மூலம் கொண்டு வரப்பட்டிருந்தன. 291 மில்லியன் செலவில் வாங்கப்பட இருந்த எயர்பஸ் விமானக் கொள்வனவும் வேகமாக ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதாகக் கூறி சந்திரிகாவின் அரசு அந்த ஒப்பந்தத்தை பின்போட்டுள்ளது.

# பாண் விலை குறைப்பு

தேர்தல் விஞ்ஞாபனத்தில் உறுதி கூறியபடி புதிய அரசு மாவினதும் பாணினதும் விலையைக் குறைத்துள்ளது. ஒரு றாத்தல் பாண் ஐந்து ரூபாவிலிருந்து மூன்றரை ரூபாக்களாகக் குறைக்கப்பட்டுள்ளது. மாவின் விலை கிலோ 7.45 ஆகக் குறைக்கப்பட்டது. மா முன்பு 11.80 சதமாக விற்பனை செய்யப்பட்டிருந்தது.

உடனடியாக விற்பனையாளர்களும் பேக்கரி உரிமையாளர்களும் விலைகளைக் குறைக்கும்படி கேட்கப்பட்டிருக்கிறார்கள்.

எரிபொருட்களின் விலையும் இருபது வீதம் வரை குறைக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சமீபத்தில் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் மலிவான விலையில் கோதுமையை வாங்கக் கூடியதாக இருந்ததாகவும் அதனாலேயே விலை குறைக்கப்பட்டதாகவும் நிதி அமைச்சின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

# போட்டிக்கு வந்தவர் தலைமறைவு

பொதுநலவாய நாடுகளின் விளையாட்டுப் போட்டிக்கு வருகை தந்த இலங்கை விளையாட்டு வீரர் ஒருவர் காணாமல் போயுள்ளார். இவரும் ஆறு ஆபிரிக்க ஓட்ட வீரர்களும் காணாமல் போயுள்ளனர். விக்டோரியாவில் நடைபெறும் போட்டியில் கலந்து கொள்ள வந்த இலந்தாரி குலதுங்க என்ற 26 வயதான குத்துச்சண்டை வீரரே காணாமல் போயுள்ளார்.

காணாமல் போன கானிய வீரர்களைத் தான் ரொறன்ரோ செல்லும் பஸ் ஒன்றில் கண்டதாக விளையாட்டுக்கு வந்திருந்த பார்வையாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த விளையாட்டுக்கு வந்திருந்த வீரர்களுக்கு ஆறு மாத விசா கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த இலங்கை வீரர் பற்றி வேறு தகவல்கள் எதுவும் வெளிவரவில்லை.

# சினிதுணுக்கு... பூலான் மறுப்பு

தன்னைப் பற்றிய படத்தில் தன்னை வைத்து பணம் சம்பாதிக்க தயாரிப்பாளர்கள் முனைவதாகவும் அந்த படம் உண்மையை தழுவியது அல்ல என்றும் பூலான் தேவி குற்றம் சாட்டியுள்ளார்.

இந்தப் படத்தை தயாரிக்க முன்னர் என்னை அவர்கள் கொன்றிருக்கலாம் என்கிறார் பூலான்.

இந்தப் படத்தின் மூலம் இந்திய சினிமா வழமையான பாதையிலிருந்து விலகுவதாக விமர்சகர்களும் பத்திரிகைகளும் தெரிவிக்கின்றன. 'இந்தப் படத்துடன் இந்திய சினிமா முதிர்ச்சியடைகிறது. சைக்கிள் திருடன் படத்துடன் இத்தாலிய சினிமா அடைந்த மாற்றம், ஏழு சமுராய் படத்துடன் ஜப்பானிய சினிமா அடைந்த மாற்றத்தை இந்தப் படத்துடன் இந்திய சினிமா அடைவதாக லண்டனின் ஈவினிங் ஸ்டான்டர்ட் தெரிவித்திருக்கிறது.

இந்தப் படத்தை தடை செய்ய வேண்டும் என்று தான் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப் போவதாக பூலான் கூறினார். தான் இந்தப் படத்தைப் பார்க்கவில்லை என்றும் தனக்கு காட்டாமல் தயாரிப்பாளரும் இயக்குனரும் மறைப்பதாக பூலான் குற்றம் சாட்டினார். அவர்கள் பொய்யான படத்தை உலகத்திற்கு விற்க விரும்புகிறார்கள், இதனால் தான் படத்தைக் காட்டவில்லை என்கிறார். ஆனால் அவர்கள் நிச்சயமாக அந்தப் படத்தைக் காட்டப் போவதாகவும் அப்போது வேறு யாரும் இருக்க மாட்டார்கள் என்றும் தெரிவித்தார்.

பல தவறுகள் படத்தில் உள்ளதாக அவர் கூறிய போதும் தன்னை பலர் கற்பழித்ததை அவர் மறுக்கவில்லை.

பூலான் தற்போது உயர்ஜாதி தக்கூர் ஒருவரைத் திருமணம் செய்திருப்பதாகவும் இதனாலேயே இவர் தற்போது இதை மறுக்கிறார் என்றும் சிலர் கூறுகின்றனர். அதை விட அவருக்கு அரசியலில் நுழையும் விருப்பம் உள்ளதாகவும் கூறப்படுகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## அறு(சு)வை

முந்துங்கள்.

★ ★ ★

இந்த பம்மாத்து இலக்கியங்களை விட ஒரிஜினல் காமசூத்திரம் படித்திருக்கிறீர்களா? கியூறியஸ் முதன் முதலாக இது பற்றி அறிந்தது. எட்டாம் வகுப்பில் படித்திருந்த காலை, அரசியலில் சர்ச்சைக்குள்ளாகிய கத்தோலிக்க குரவர் ஒருவரால் நடத்தப்பட்ட கருத்தரங்கில் சந்தித்த போது தான்.. கேள்வி நேரத்தில் எழுதிக் கொடுக்கப்பட்ட கேள்வி ஒன்றில் அட்வான்ஸ்ட் லெவல் அண்ணன் யாரோ முக்கியமாக கேட்ட கேள்வி.. காமசூத்திரம் பற்றிய கருத்து..

இந்தக் கூட்டங்களுக்கு போனால் ஒரே விதமான கேள்விகள் தான். இயக்கக்கூட்டம் என்றால் முன்பு தலைவர் ஏன் கலியாணம் கட்டினவர் என்று கேள்வி வரும். சமயக் கூட்டங்களுக்கு போனால், ஆதாமும் ஏவாளும் முதல் மனிதர்கள் என்றால் அவர்களின் பிள்ளைகள் எங்கே கலியாணம் கட்டினார்கள் என்று கேள்வி. இப்படி கருத்தரங்குகளுக்கு போனால் காமசூத்திரம் பற்றிக் கேள்வி. இப்படி எல்லாமே கலியாணம், காமம் சம்பந்தப்பட்ட கேள்வி தான். ஒருவேளை இவர்களும் அடிடாஸ் கேஸ்கள் தானோ?

அவர் சொன்னார் நிச்சயமாக ஒவ்வொருவரும் வாசிக்க வேண்டிய புத்தகம் என்று. அந்த ஆசை நிறைவேற சுமார் இருபது வருடம் காத்திருக்க வேண்டியிருந்தது.

இந்தப் புத்தகம் வாங்கியது கூட பெரிய கதை.. கம்பியூட்டருக்குள்ளால் கிறடிட் காட்டைக் கொடுத்து ஓடர் பண்ணி வாங்கிய புத்தகம்.. ஆங்கிலத்தில் றிச்சாட் பேட்டன் மொழி பெயர்த்தது. நிலைமை அப்படி.. இங்கே தமிழ் கடையில் காமசூத்திரம் கேட்ட போது பட்ட சங்கடம்.. பொருட்கள் வாங்க வந்த பெண்களை விட்டு ஒதுங்கி, அவர்கள் போன பின்னர் காதோடு காதாக 'அண்ணை, எனக்கொரு காமசூத்திரா'.. கடைக்காரர் பார்த்த பார்வையில் கேலி இருந்ததா, இல்லை வியாபாரம் ஓகோ என்கிறதோ என்ற மகிழ்ச்சி இருந்ததா தெரியாது.

★ ★ ★

றிச்சாட் பேட்டன் தெரியுமா? போன வாரம் நான் சொன்ன வைல்ட் கீஸ் படத்தின் நாயகன். றிச்சட் பேட்டன் என்றதும் அடடே, செக்ஸில் இவன் அறிஞன் என்று நினைத்துக் கொண்டேன். காரணம் நடிகர் றிச்சாட் பேட்டன் நடிகை எலிசபெத் டெய்லரை மணம் செய்தவர். ஒரு தரம் அல்ல, இரண்டு தடவைகள். விவாகரத்துச் செய்து விட்டு திரும்பவும் செய்தவர். உலகமே கனவு கண்ட கனவுக்கன்னியை திருமணம் செய்தவன் காமசூத்திரம் அறிந்திருப்பான் தானே..

பின்னர் எலிசபெத் தனது எட்டாவது கணவரை, அறுபது வயதில் முப்பந்தைந்து வயதுக் கணவரைத் தேடிக்கொண்டவர். நம்ம கோடம்பாக்கத்து எலிசபெத் டெய்லர் தெரியுமா? நான் லட்சுமியைச் சொல்கிறேன்.

அப்போ, இந்த எலிசபெத் டெய்லரை மணந்து கொண்டவர் என்றால், அவர் காமசூத்திரம் மொழி பெயர்க்க என்ன, எழுதவே தகுதி பெற்றவர் என்று நினைத்துக் கொண்டேன். றிச்சாட் பேட்டன் எதற்காக நடிப்பை உதறித் தள்ளி விட்டு, சமஸ்கிருதம் கற்று காமசூத்திரம் படிக்க முடிவு செய்தார் என்று ஆராய்ந்தால்.....

## பூலான்தேவி...

ஏற்றுக்கொள்கிறார்கள், யாரும் அதைக் கேள்விக்குள்ளாக்குவதில்லை என்கிறார் சேகர்.

பூலான் பலருக்கு நம்பிக்கை நட்சத்திரமாகத் தெரிவதாலோ என்னவோ அவரை அரசியலில் நுழைத்து விட பலர் முயல்கிறார்கள். அவரை விடுதலை செய்தது கூட ஊத்தரப் பிரதேசத்தின் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த லாலூ பிரசாத் யாதவ் என்ற முதல்வர் தான். பூலான் மீதான பல குற்றச்சாட்டுக்கள் வாபஸ் பெறப்பட்டிருந்தன.

சேகரால் இதை ஜீரணிக்க முடியவில்லை. துரதிஷ்ட வசமாக அவரை அரசியலில் நுழைத்து பலர் லாபம் சம்பாதிக்கப் பார்க்கிறார்கள், அதிகாரம் ஊழல் செய்யும் என்கிறார் சேகர்.

★ ★ ★

## இந்திய சினிமாக்களில் ஆபாசத்திற்கு தடை

இந்திய சினிமாப் படங்களில் இரட்டை அர்த்தம் தொனிக்கும் வசனங்கள், பாடல்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்தியப் படங்களில் பாலியல் காட்சிகள், வன்முறைகள் அதிகரித்திருப்பதால் இரட்டை அர்த்தம் தொனிக்கும் வசனங்கள், இடுப்பை அசிங்கமாக முன்னும் பின்னும் அசைத்தல், சங்கிலிகளுடன் சண்டையிடுதல், கத்திக்குத்துகள் என்பவற்றைக் காட்ட தடை விதிக்கப்பட்டிருக்கிறது.

திரைப்படங்களில் விதிமுறைகள் பல தடவை தணிக்கை சபைகளில் மீறப்படுகின்றன என்று தணிக்கையாளர்கள் தெரிவித்ததை அடுத்து புதிய விதிகள் பற்றி தகவல் அமைச்சர் கே.பி.சிங் தேவ் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இந்தியப் படங்கள் மத்திய தணிக்கை சபையினால் அங்கீகரிக்கப்பட்ட பின்பே திரையிடப்பட முடியும். அனாதை விடுதிகள், வைத்தியசாலைகள், கோவில்களில் நடைபெறும் சண்டைகள், பெல்ட், சங்கிலிகள், மிருகங்கள் சம்பந்தப்பட்ட சண்டைகள், வேண்டுமென்றே பாடல்களின் போது பெண்களின் மார்பகங்கள், தொப்புள், மார்பு, கால்கள் போன்றவற்றைக் காட்டுதல், அசிங்கமான ஆடைகள், அசைவுகள், முக்கிய பகுதிகளை குளோஸ் அப்பில் காட்டுதல் என்பன தடை செய்யப்படுகின்றன.

இதை விட தேவையற்ற முத்தக்காட்சிகள், சண்டைக் காட்சிகளில் முக்கில் இரத்தம் வடிய சண்டை பிடிக்கக் கூடாது என்றெல்லாம் புதிய விதிகள் அமுலாகின்றன. இந்தியப் படங்களில் இந்த வன்முறை, செக்ஸ் காட்சிகள் காண்பிக்கப்படுவதற்கு ஆட்சேபம் தெரிவித்ததை அடுத்து புதிய குழு நியமிக்கப்பட்டு இவை பற்றி மீள் வரையறை செய்யுமாறு அறிவுறுத்தப் பட்டது. இந்த முயற்சியை நடிகர்கள் ஆட்சேபித்திருந்தனர்.

ஏற்கனவே இந்த விதிமுறைகள் இருந்த போதும் முறையாக அமுல்படுத்தப்படவில்லை.


தற்போதைய இந்திப் படங்கள் பற்றி நரசிம்மராவ் கூட ஆட்சேபம் தெரிவித்ததாக கூறப்படுகிறது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*'எதையோ எழுத வேண்டும் என்பதற்காக புத்திசாலிகள் எழுதுகிறார்கள். எதையாவது எழுத வேண்டுமே என்பதற்காக முட்டாள்கள் எழுதுகிறார்கள்'*



# தமிழ் மக்களுக்கு சேவை செய்ய இறக்குமதி செய்யப்படும் காமசூத்திரம்

**அறுஞர் போராசிரியர் கல்லாநிதி கியூறியஸ் ஜீ**

கொஞ்ச நாளைக்கு முன் தாயகத்தில் ஒரு படத்தைப் போட்டு நாஞ்சில் பி.டி.சாமி மாதிரி மர்மத்தைத் துலக்கச் சொன்னேனே.. அவனவன் ஆளுக்காள் படத்தைச் சுவரில் ஒட்டி தலை கீழாய் நின்றார்கள். பலர் இன்னமும் கண்டுபிடிக்கவில்லை. இப்போதே விசயத்தைச் சொன்னால் வாசிப்பதை விட்டு படத்தைத் தேடப் புறப்பட்டு விடுவீர்கள் என்பதால்...

சில விண்ணர்கள் தலைகீழாய் நின்று விசயத்தைக் கண்டுபிடித்து விட்டு.. பிறகென்ன? யூரேக்கா தான்.

★ ★ ★

எட்டாம் வகுப்பைத் தாண்டாதவர்களின் நலன் கருதி.. மன்னர் ஒருவர் மணிமுடி செய்ய பொற்கொல்லரை பிடித்து.. முடி செய்ததும் சந்தேகம்.. இவன் தங்கத்தில் எதையாவது கலந்திருப்பானோ என்று. இதைக் கண்டுபிடிக்க வழி தெரியாது. ஆக்கிமிடிஸ் ஆஸ்தான விஞ்ஞானி. அவருக்கு பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. சதா அதே சிந்தனையுடன்.. தொட்டியில் நீர் நிரப்பிக் குளிக்கும் போது நீர் தொட்டிக்கு வெளியே பாய்ந்தபோது.. அடடே.. இந்த மணிமுடியின் நிறைக்கு சமனான தங்கத்தை தொட்டிக்குள் போட்டால் எவ்வளவு நீர் வெளியேபோகுமோ, அதே அளவு நீர் முடியைப் போடும் போகும் போது வெளிவந்தால் கலப்பு இல்லை. இல்லையேல் கொல்லரின் தலை போகும். இந்த தத்துவத்தைக் கண்டுபிடித்த ஆக்கிமிடிஸ் சந்தோச மிகுதியால் நிர்வாணமாகவே யூரேக்கா.. யூரேக்கா என்று கத்திக் கொண்டு ரோட்டில் ஓடிப் போனாராம்.

கண்டு பிடிச்சேன், கண்டுபிடிச்சேன், காதல் நோயைக் கண்டுபிடிச்சேன் என்ற மாதிரி... அப்படி ஒரு பச்சை விவகாரம் இந்த யூரேக்கா..

★ ★ ★

அப்படி ஒரு பச்சையான விசயம் அந்தப் படம். கண்டுபிடித்தவர்கள் உடனடியாகவே அடித்து யூரேக்கிறார்கள். ஆனால் யாரும் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. பச்சை இலக்கியம்.. ஐயோ.. தமிழ் பண்பாடு போச்சே.. பத்திரிகா தர்மம் தொலைந்ததே என்ற மாதிரி.. தாயகம் மஞ்சள், பச்சைப் பத்திரிகையாச்சே.. (அட்டையைச் சொல்லவில்லை..) கூச்சல் எழவில்லை.

எத்தனை பேர் கொலைபேசி கதை வந்ததற்காக இதை எப்படி குடும்பமாக வாசிக்க முடியும் என்று வாசிக்காமல் விட்டார்கள். விட்டேனா பார் என்று ப.இ.விமர்சகரும் களத்தில் குதித்து... இவருக்கும் பச்சைக்கும் அப்படி என்னதான் சம்பந்தமோ? பயணக்கட்டுரைக்கும் பச்சை மட்டைதான். (அவரும் அப்படித்தான் புத்தகங்களை விமர்சிக்கும் போது மட்டை பற்றி எல்லாம் எழுதுவார்) பச்சை மட்டை என்றதும் புலிகள் கொஞ்ச நாள் கொடுத்த தண்டனை ஞாபகத்திற்கு வந்திருக்குமே.

★ ★ ★

அடிப்படையில் மனிதனுக்கு பால உணர்வு ஒன்றித்துப் பிறந்தது. மனித சிந்தனையை ஆக்கிரமித்த ஒன்று. அதை வென்றவன் யோகியாகியிருக்கிறான். அடிமைப்பட்டவன் போகியாகியிருக்கிறான். (கண்ணதாசன் உபயம்)

ஒரு ஆராய்ச்சியின்படி ஆண்கள் ஆறு நிமிடத்திற்கு ஒரு தடவை செக்ஸைப் பற்றி நினைக்கிறார்களாம், பெண்கள் அரை மணி நேரத்திற்கு ஒரு தடவை தான் அவ்வாறு நினைக்கிறார்களாம் என்று ஸ்டாரில் ஒரு தடவை வந்திருந்தது. நீங்கள் எப்படியோ? விதிவிலக்குகள் இருக்கலாம். ஆனால் கியூறியஸ் அடிடாஸ் ரகம்.

★ ★ ★

இந்த அடி டாஸ் சப்பாத்து நிறுவனம் ஒரு ஜேர்மன்காரரினது. அடொல்ப் டாஸ் என்பவரது. அவரை அன்பாக அடி என்று கூப்பிடுவதால் அடி டாஸ். இவரது சகோதரர் தான் பூமா சப்பாத்துக்களை உருவாக்கினார். இரண்டுமே பெரிய நிறுவனங்கள்.

செக்ஸ் விசயத்தில் கியூறியஸ் அடிடாஸ் ரகம் என்றால்.. என்ன பலாய்டா... சப்பாத்துக்கும் செக்ஸ்க்கும் என்ன சம்பந்தம்? என்பீர்கள். இருக்கு.. பார்த்திருப்பீர்களே.. நீலபடங்களில்! முழு நிர்வாணமாய் சம்போகம் நடக்கும்.. ஆனால் சப்பாத்துக்களை கழற்ற மாட்டார்கள். சுஜாதா பாணியில் சொல்வதாயின் அவள் தன் முகத்தில் ஒரு புன்னகையை மட்டும் அணிந்திருந்தாள் என்ற மாதிரி.. அவள் சப்பாத்துக்களை மட்டும் அணிந்திருந்தாள்.

அந்தப் பெண்கள் அடிடாஸ் அணிவதில்லையே என்று கேட்டீர்களாக இருந்தால் மாட்டிக் கொண்டீர்கள். நீங்களும் நிறைய நீலம் பார்த்திருக்கிறீர்கள். பச்சை, மஞ்சள், நீலம்.. இதென்னடா தாயகத்தின் அட்டை மாதிரி இருக்கே. .. போதாக்குறைக்கு அட்டை இல்லாமல் வெளிவராவிட்டால் மேலாடை இல்லாமல் வந்தது என்று வேறு சொல்லிக் கொள்வார்கள்.

★ ★ ★

கியூறியஸ் அடிடாஸ் ரகம் என்றால்.. அந்த ஆராய்ச்சி மாதிரி கியூறியஸ் ஆறு நிமிடத்திற்கு ஒரு தடவை செக்ஸைப் பற்றிச் சிந்திப்பவன் அல்ல. ADIDAS என்றால் All Day I Dream About Sex. அதாவது நாள் முழுக்க நான் செக்ஸைப்

**அறு(சு)வை**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பற்றியே கனவு காண்பவன்.. இந்த வசனத்தின் சொற்களின் முதல் எழுத்துக்களைச் சேர்த்தால் அடி டாஸ் வருகிறது.

எனது இந்த வேட்கையின் பயனாக சில வாரங்களுக்கு முன்னர் தமிழ் கடையொன்றில் காமசூத்திரம் கண்டேன்... வாத்சாயனர் டெக்ஸ்ரொப் பப்ளிஷிங்கைக் கற்றுக் கொண்டு சஞ்சிகை விடத் தொடங்கி விட்டாரா என்ற ஆர்வம்மேலீட்டால் என்ன இருக்கிறது என்று 'புரட்டிப் பார்க்கலாம் என்றால் கிளிப் பண்ணி பாதுகாப்பாக வைத்திருக்கிறார்கள். தாயகத்திற்கும் இது செய்ய வேண்டும் போலிருக்கிறது. இந்த வாரம் கடையொன்றுக்கு போனால்.. ஒரு வாசகர் கியூறியஸின் போதைமருந்து விவகாரத்தை வலு சுவாரஸ்யமாக வாசித்துக் கொண்டிருந்தார்... நின்ற நிலையிலேயே புரட்டிப் பார்த்து.. கியூறியஸின் அறுவையை வாசிக்கிறாரே என்று மகிழ்வதா? ஓசியில் தாயகம் படிக்கிறாரே என்று கவலை கொள்வதா?

பிறகென்ன.. விலை கொடுத்து (வம்பை) வாங்கிக் கொண்டேன்.

★ ★ ★

இங்கே தமிழ் மக்களுக்காக சேவை செய்வதற்காக வியாபாரம் நடத்தி, இலங்கையிலிருந்தும் இந்தியா விலிருந்தும் விசேடமாகத் தருவித்து ஏகமாய் விநியோகித்து ஏகமாய் சம்பாதிக்கும் புண்ணியவான் யாரோ தான் இந்த தமிழகத்தின் குப்பைச் சஞ்சிகைகளை விநியோகிக்கிறார். பருவகாலம்... அதை விட ஜூனியர் பருவகாலம். (பருவகாலம் போஸ்ட் எப்போது?) என்று பல்வேறு செக்ஸ் சஞ்சிகைகள் இந்தியாவிலிருந்து இறக்குமதியாகின்றன. ஏதோ இங்குள்ளவர்கள் இந்தப் புத்தகங்கள் இல்லாமல் இனப்பெருக்கத்தில் ஈடுபட மாட்டார்கள் என்ற மாதிரி... ரொம்ப அவசியம். முன்பு போராட்டத்தை விற்று பணம் சம்பாதித்த தொழிலதிபர்கள் தான்.. இப்போது இதை 'தமிழ் மக்களுக்கு சேவை செய்வதற்காக' இறக்குமதி செய்கிறார்கள்... இதை கலைக்கும் இலக்கியத்துக்கும் செய்கின்ற சேவை என்று நினைத்து. இனி என்ன? கியூறியஸ் அறுவையில் விமர்சித்த புத்தகங்கள் என்று விளம்பரப்படுத்தி வியாபாரம் நடக்குமோ?

★ ★ ★

ஊரிலும் சில கடைகள் இந்த புத்தக வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தன. வின்ஸர் தியேட்டருக்கு முன்னால் உள்ள வெற்றிலைக் கடை.. நியூமார்க்கட்டுக்கும் தையல்கடைகளுக்கும் இடையில் சைக்கிள் பார்க்குக்கு அருகில் உள்ள புத்தகக் கடை.. இந்த இரண்டிலும் கியூறியஸின் பாலிய நண்பர்கள் (பாலியல் நண்பர்கள் அல்ல) வாடிக்கையார்கள். வாடிக்கையாளர்களின் வசதியை முன்னிட்டு.. கொப்பிகளுக்கு இடையில் வைத்து வாசிப்பதற்கு வசதியாக எட்டுப் பக்கத்தில்.. இருக்கும். சந்திரபாபு, கே.ஆர். விஜயாவை வைத்து ஒன்று.. அபூர்வமான பெயர்களில் எல்லாம் இருக்கும். நாஞ்சில் பி.டி.சாமி 'பெண்கள் விடுதியில் ஆணின் சடலம்' என்று எழுதுவார். இவர்கள் ரத்தினச்சுருக்கமாய் ஏதாவது மிருகம், தாவரத்தை வைத்து எழுதி விடுவார்கள்.

ஒரு தடவை வம்புக்கு இந்தப் புத்தகம் வாங்கும் நண்பனிடம் ஒரு கூடாத பெயரைச் சொல்லி 'மச்சான், இந்தப் பெயரில புத்தகம் வந்திருக்கடா' என்று சொல்ல.. இருப்புக் கொள்ளாமல் பாடசாலை முடிந்த கையோடு போய்.. அண்ணை புதுப்புத்தகம் ஏதும் வந்திருக்கா என்று கேட்க.. இல்லை என்றதும்.. கியூறியஸ் சொன்ன பெயரைச் சொல்லத் தொடங்க 'ஐயோ.. ஐயோ தம்பி அந்தப் பெயரில புத்தகம் இல்லை' என்று கடைக்காரர் சொன்னதாக நண்பன் வந்து அழுதான். பிறகு கொஞ்ச நாள் 'என்னடா இவங்கள் எழுதிறது, நானே எழுதிறன்' என்று உயிரியல் பாட நேரம் எழுதினான். நல்ல காலம் என் கைக்கு அது கிட்டவில்லை. கிடைத்திருந்தால் அவனது பிழைகளைத் திருத்திக் கொ(ா)டுக்க அவன் பெரிய எழுத்தாளராய் வந்திருப்பான். என்னவோ இப்போது லண்டனில் இருக்கிறான்...

வகுப்பில் ஒரு தடவை இரசாயன ஆசிரியரிடம் பிடிபட்டு.. புத்தகத்தின் பெயரைப் பார்த்துவிட்டு. . டேய்... உங்க புலிப்படை எண்டெல்லாம் தொடங்குறாங்கள். போய் நாய்ப்படை எண்டு தொடங்குங்கோவன்ரா என்று திட்டு வாங்கினான் நண்பன்.

இதற்குள் மித்திரனும் ஜனமித்திரன் பிரசுரங்களான பட்லி, பீட்டர் ரோத்தின் அனுபவங்கள், பெண் அடிமை போன்றன இலக்கிய நயத்தோடு வெளிவரத் தொடங்கியதில்.. நான் இலக்கியத்தில் ஆழ்ந்து போய் விட்டேனே.

★ ★ ★

வாத்சாயனரின் காமசூத்திரம் மாதிரி இந்த காமசூத்திராவும் ஒரு காலத்தால் அழியாத இலக்கியப் படைப்புத் தான். எனக்கு ஒன்று விளங்குவதில்லை. ஆங்கிலத்தில் user friendly என்ற சொல் பல இடங்களில் பம்மாத்துக்கு பயன்படுகிறது. உண்மையில் மக்கின்ரோஷ் கம்பியூட்டருடன் தோன்றிய வார்த்தை பிறகு ஏன் எதற்கு என்றில்லாமல் பாவிக்கப்படுகிறது. அது மாதிரி தமிழில் கலையும் விஞ்ஞானமும் பம்மாத்தப்படுகின்றன. சோதிட விஞ்ஞானம் என்பார்கள், சோதிடக் கலை என்பார்கள். இப்போது பாலியல் கலை, பாலியல் விஞ்ஞானம் என்றெல்லாம் வந்து விட்டது.

இந்த புத்தகங்கள் எல்லாம் நீலப்படங்கள் மாதிரி தான்.. ஒரே விசயம் திருப்பித் திருப்பி, வேறுவேறு ஆட்கள்.. அவ்வளவு தான். ஆனால் காமசூத்திரா கொஞ்சம் வித்தியாசம். பாலியல் விளக்க இதழாம். 'உங்கள் கேட்கத் தயங்கும்' கேள்விகளுக்கும் பாலியல் வல்லுனர்கள் பதிலளிக்கிறார்களாம். ஆசிரிய குழுவின் ஆலோசகர்கள் எக்கச்சக்கமான கேள்விப்படாத பட்டங்களுடன்.. எல்லோருமே டாக்டர்கள். ஒருவருக்கு FICA என்று பட்டம். இது Fellow of Institute of Chartered Accountants என்று நினைக்கிறேன். டாக்டர் அக்கவுண்டன்ஸியும் படித்திருப பாரோ என்று சந்தேகமாயிருந்தது.

பிளேபோய், பென்ட்ஹவுஸ் போன்ற அமெரிக்க சஞ்சிகைகளில் வந்த படங்களை வழமை போல் மூலம் குறிப்பிடாமல் மறுபிரசுரம்... ஆனால் மற்றச் சஞ்சிகைகள் போலன்றி இதில் கொஞ்சம் இலக்கிய விசயங்கள் (?) உண்டு.

★ ★ ★

தமிழகவாரப் பத்திரிகைகளில் ஓவியம் கீறும் ஜெயராஜை தெரிந்திருப்பீர்கள். ஒரே பாணியில் மெல்லிய பெண்களை கீறுவாரே அவர்... அவர் இந்த காமசூத்திராவிலும் ஓவியம் கீறுகிறார். தனது ஜெ என்ற கையெழுத்தின் பின்னால் மூன்று புள்ளிகள் போடுவாராம். அவர், மனைவி, மகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மூவரைக் குறிக்க.. பின்னர் மகள் திருமணமானதும் புள்ளிகள் நான்கானது. இப்போது மகளுக்கு மகன் பிறந்ததும் பெயருக்கு முன்னுல ஒரு புள்ளி தோன்றியிருக்கிறது.

குமுதம், விகடனில் ஆபாசத்தை தொடுகிற மாதிரி, நைட் கவுன்களோடு இளமைத் துடிப்புகளை கீறுகின்ற இவர் அப்பட்டமான நிர்வாணப் படங்களை இந்த காமசூத்திராவில் கீறியிருக்கிருர்... அதே நெளிவு, சுளிவு, வளைவுகளோடு. பார்த்து மகிழுங்கள். உங்கள் பிரதிக்கு முந்திக் கொள்ளுங்கள்.

இவரை விட தமிழக வாரப் பத்திரிகைகளில் பட்டும் படாமலும் ஆபாசமாய் எழுதி பணம் சம்பாதிக்கின்ற பல எழுத்தாளர்கள் இதில் எழுதுகிருர்கள். நல்ல காலம்.. இன்னமும் இந்த பத்திரிகைகளின் பாணியில் அவர்கள் இன்னமும் எழுதத் தொடங்கவில்லை. ஆனால் இந்தப் பத்திரிகைக்கு பொருத்தமான பாணியில் எழுதுகிருர்கள். இதில் நம்ம புஷ்பா தங்கத்துரையும் அடக்கம்.

இவர் ஹிட்லரின் மோகதாகம் என்று ஹிட்லரின் பெண் தோழிகள் பற்றியும் பொழுதுக்கொரு பெண் என்று பிரெஞ்சு நாவலாசிரியர் விக்டர் ஹியுகோ பற்றியும் எழுதியிருக்கிருர். இவர்கள் எல்லாம் இந்த சஞ்சிகைகள் பற்றி தெரிந்து கொண்டு தானே எழுதியிருக்கிருர்கள். பணம்.. பாதாளம் மட்டும் பாயும். இதை விட வேற்றுமொழி நாவல்களிலிருந்து மொழிபெயர்ப்பு.. அது புஷ்பா என்ற பெயரில்.. தங்கத்துரையாகத் தான் இருக்கவேண்டும்.

இதை விட அனுராதா ரமணன்.. இவர் புஷ்பா தங்கத்துரை மாதிரி பெண் பெயரில் ஒளிந்து கொள்ளாத உண்மையான பெண் எழுத்தாளர். இவர் "வாத்ஸ்யாயனரை மிஞ்சும் வள்ளுவர்" என்று காமத்துப் பாலுக்குள் காமசூத்திராவைத் தேடுகிருர். இது தொடர் கட்டுரையாம். ஒவ்வொரு குறளை எடுத்து அதற்கு பூசி மெழுகி கதை படைத்திருக்கிருர். அங்கே வள்ளுவர் ஒன்றும் ஆபாசமாய் சொல்லவில்லை. இவர்கள் சொல்கின்ற விளக்கம் தான் வாத்சாயனரை மிஞ்சுகிறது.

★ ★ ★

அண்ணுத்துரை கூட கம்பரசம் இல்லை, காமரசம் என்று ராமாயணத்தில் ஆபாசம் மலிந்ததாக கூச்சல் போட்டவர். கம்பரசம் என்று இவர் கள் எழுதியதெல்லாம் அதிலுள்ள ஆபாசங்களை வெளியே காட்டத்தான் என்று பிற்காலத்தில் கண்ணதாசன் எழுதியதாக ஞாபகம்.

இதே அண்ணுத்துரை பிற்காலத்தில் ரோமாபுரி ராணிகள் என்று ஒரு புத்தகம் எழுதினுர். கியூறியஸ் அறியாப் பருவத்தில் பல தடவைகள் வாசித்த புத்தகம். கியூறியஸின் தமிழாற்றலுக்கு (?) உரமாய் அமைந்த புத்தகங்களில் ஒன்று. இது கம்பனின் ஆபாசத்தை மிஞ்சுகின்ற எழுத்து வர்ணனைகள் அந்த மாதிரி.. இடையில் ஒரு கொசுறு. ரோம் எரியும் போது பிடில் வாசித்த நீரோ மன்னனை அவனது தாயார் ஆட்சி அதிகாரத்திற்கு ஆசைப்பட்டு பஞ்சணைக்கு அழைத்ததாக அண்ணு எழுதியிருந்தார். ரோமாபுரி ராணிகளின் சரித்திரத்தைச் சொல்வதை விட கிக் ஏற்றுவது தான் இப்புத்தகத்தில் அதிகம் இருந்தது.

★ ★ ★

ஒரு பெண் எழுத்தாளர் வள்ளுவரின் குறளில் வாத்சாயனரைத் தேடுகிருராம்... இங்கேயும் 'அந்த அம்மா' பண்பாடு காக்கப் புறப்பட்டார். என்ன ஆச்சு? ஆளையே காணும்.. தலைப்பாகையை விட்டு எதைக் காப்பாற்றுவதில் அக்கறையாயிருக்கிருரோ?

காமசூத்திரத்தில் எழுதும் இன்னெருவர் ராஜேந்திரகுமார்... இவரும் தமிழக வார சஞ்சிகைகளில் பிரபலமானவர்.

இவர்களை விட ஆஸ்தான எழுத்தாளர்கள்.. உடலுறவுக்கு வயது ஒரு உச்சவரம்பா? என்ற நுண்ணுய்வுக் கட்டுரை. எழுதியவர் கிராண்ட் பா.. எப்படி இருக்கிறது?

இந்த மாதாந்த பாலியல் இலக்கிய முயற்சியை விட இன்னெரு காலாண்டு இதழ் வேறு.. விளம்பரம் வந்திருக்கிறது. மறைமுக பிரச்சனைகள்! என்ற பெயரில்.

நீங்களும் காதல் மன்னராகலாம். காதல் தேவதையாகலாம். .. முதலிரவு முழுமை பெற, மகிழ்ச்சி தரும் புணர்ச்சி நிலைகள்... மன்மத லீலைக்கு மருந்துண்டா? போன்ற இளைய சமுதாயத்தின் சந்தேகங்களுக்கு விளக்கமான பதில்களாம். பாலியல் வல்லுனர்கள் படித்துப் பாராட்டிய இதழ்... பரிந்துரை செய்யும் இதழ் என்று விளம்பரம் தெரிவிக்கிறது.

எனவே உங்கள் பிரதிக்கு

29 ம் பக்கம் பார்க்க..

*This newspaper is published by Georgicka communications.*
*A member of Ethnic Press Council Of Canada.*
*Editor: George R.Ckrhushchev*
இப்பத்திரிகை ஜோர்ஜிக்கா தொடர்பு நிறுவனத்தினுல் வெளியிடப்படுகிறது.
ஆசிரியர் ஜோர்ஜ் இ. குருஷ்சேவ்

தொடர்புகளுக்கு
*Georgicka communications*
*P.O.Box 1031, Station "F",*
*Toronto, Ont, M4Y 2T7.*
*Tel: (416) 920 9081*
*Fax: (416) 963 5738*
*E mail:71650.3216*
*@Compuserve.com*

வாசகர்களின் வசதி கருதி தொலைபேசி பதிவு சேவை ஒன்றை தொடங்கியுள்ளோம். வெளிவந்த ஆக்கங்கள் பற்றிய உங்கள் கருத்துக்கள், முனியின் கேள்வி பதில்களுக்கான கேள்விகள், ஆக்கபூர்வமான கருத்துக்களை வெள்ளி மாலை முதல் ஞாயிறு நள்ளிரவு வரையில் 963 5738 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு ஒலிப்பதிவு செய்யலாம். தொடர்புகளுக்கு உங்கள் தொலைபேசி இலக்கத்தையும் பதிவு செய்ய மறக்காதீர்கள்.

உங்கள் ஆக்கங்கள், பத்திரிகை பற்றிய உங்கள் ஆக்கபூர்வமான கருத்துக்கள் என்பவற்றை வரவேற்கிறேம். உங்கள் கருத்துக்களை எழுத்து மூலமாக அனுப்புங்கள். உங்கள் கருத்துக்கள் எதுவாயினும் பிரசுரிக்க முயற்சிப்போம். ஆக்கங்கள் தரங்கண்டு பிரசுரமாகும். ஆக்கங்களின் கருத்து சிதையாமல் மாற்றங்கள் செய்ய ஆசிரியருக்கு உரிமை உண்டு. ஆக்கங்களுடன் உங்கள் தொலைபேசி இலக்கங்களையும் விலாசங்களையும் குறிப்பிடுங்கள். படைப்புகளில் சொல்லப்படும் கருத்துக்களுக்கு எழுதியவர்களே பொறுப்பு. படைப்புகளில் வரும் கருத்துகள் ஆசிரியரின் கருத்தாக இருக்க வேண்டிய அவசியமில்லை

## தாயகம்
## சந்தா விபரம்

கனடா ஆறுமாதம் $30
வெளிநாடுகள் ஆறு மாதம் US$60
வெளிநாட்டு வாசகர்களின் காசோலைகளின் இலக்கம் encoded செய்யப்பட்டிருக்க வேண்டும். காசோலைகள் அனைத்தும் Georgicka communications பெயருக்கு எழுதப்பட வேண்டும். (தாயகத்தின் பெயருக்கு அல்ல)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

**இலங்கை, இந்தியா, கனடியா உணவுப் பொருட்கள்**
**அனைத்தும் ஒரே இடத்தில்! மலிவு விலைகளில்!!**


# அன்ரனி பிறதர்ஸ்

- ★ உடன் மீன், இறைச்சி, மரக்கறி, பழவகைகள்
- ★ போட்டோக்கொப்பி, ஃபாக்ஸ் வசதிகள்
- ★ தமிழ்,ஹிந்தி, மலையாள வீடியோக்கள் வாடகைக்குப் பெறலாம்
- ★ லேசர் இசைத்தட்டுக்கள் மலிவு விலையில்
- ★ தமிழக, இலங்கை வாரப்பத்திரிகைகள், சஞ்சிகைகள் அனைத்தும் உடனுக்குடன்
- ★முத்திரை, சிகரெட், TTC Tickets, Lottery Tickets

## ANTONY BROTHERS

**வாரத்தில் 7 நாட்களும்**
**காலை 9 மணி முதல்**
**இரவு 11 மணி வரை**

**1472 Queen St West (Queen/Lansdowne)**
**Toronto, Ont. M6K 1M4**
**TEL:(416) 588-0733**
**TEL/FAX:(416) 516 3903**




## ANTONY BROTHERS FASHION HOUSE

**1484 QUEEN ST WEST**
**Tel:(416) 588 0310**

சிங்கப்பூரில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஆண்கள், பெண்கள், குழந்தைகளுக்கான உடைகள், சுவாமிப் படங்கள், பரிசுப் பொருட்கள், பெண்களுக்கான அலங்காரப் பொருட்கள், எவர்சில்வர் பாத்திரங்கள், ஒலிப்பதிவு, ஒளிப்பதிவு நாடாக்கள்

**அனைத்தும் மலிவு விலையில் பெற்றுக் கொள்ள**

www.tamilarangam.net


SIVA'S TRADING CO LTD

ஸ்காபரோ நகரின் தன்னிகரற்ற
தமிழ் வியாபார நிலையம்

# சிவாஸ் ரேடிங் கோ லிமிட்

TRADING CO LTD
SIVA'S
321-2739

★ இலங்கை, இந்திய உணவுப்பொருட்கள்
★ உடன் இறைச்சி, கடலுணவு,
★ பசுமையான மரக்கறி வகைகள்
★ தயாரிக்கப்பட்ட உணவுவகைகள் (இடியப்பம்,தோசை,அப்பம்)
★ சமையல் உபகரணங்கள்
★ இலங்கை, இந்திய சஞ்சிகைகள்

அனைத்துப் பொருட்களும் மலிவு விலையில்

3852 FINCH AVE EAST (KENNEDY/FINCH)
TEL:(416) 321 2739

# P.S.T.T

வீடியோ ஒலிப்பதிவு நாடாக்கள்,
இந்திய உணவு வகைகளின்
மொத்த விற்பனையாளர்

சகல புதிய, பழைய தமிழ், இந்தி,
மலையாளப் படங்கள்
வாடகைக்கு கிடைக்கும்

5210 FINCH AVE EAST #23
(FINCH/MIDDLEFIELD)
TEL:609-0141

VIDEO TRANSFER
(ANY SYSTEM)
$8.99


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்